கார்க் குண்டு தாக்குதல்கள் 80 பேர் சிதறிச் சாவு



பக். 14 - 15

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34°c - 27°c

தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 221 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 20, திங்கட்கிழமை 04.07.2016


முச்சந்தி முரளி



அதைத் தானே செய்பிரியள் பிறகு ஏன் சொல்லுவான்...

# பொருளாதார மத்திய நிலையம் அமையும் இடம் குறித்து இன்னமும் இறுதி முடிவில்லை

## சம்பந்தனுடன் நேற்று நடந்த கூட்டத்திலும் இணக்கம் எட்டப்படவில்லை

"வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 30 பேரிடமும், வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேரிடமும் தனித் தனியே அவர்களின் கருத்தை அறிந்து ஜனநாயக ரீதியில் முதலமைச்சர் முடிவை எடுப்பார்."

யாழ்ப்பாணம், ஜூலை 4

வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையத்தை எங்கு அமைப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றும் முடிவு செய்யவில்லை. பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்திலேயே அமைக் கப்பட வேண்டும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நேற்றைய கூட்டத்தில் பெரும்பான்மையானோர் கேட்டனர். எனினும், அதனை தாண்டிக்குளத்தி லா அல்லது ஓமந்தையிலா அமைக்க வேண்டும் என்பது தொடர்பில், வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, ஒரு வாரத்துக்குள் முதலமைச்சர் இறுதி முடிவை எடுப் பார் என்று கூட்டத்தின் முடிவில் அறிவிக்கப் பக்.25

# இலங்கையின் அபிவிருத்திக்கு 855 மில்லியன் டொலர் கடன்

## வெளிநாடுகள் வாக்குறுதி; பெரும்பகுதி சீனாவிடமிருந்தே

கொழும்பு, ஜூலை 4

இலங்கைக்கு இந்த ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதி யில் அபிவிருத்தித் திட்டங்களுக் காக 855.4 மில்லியன் டொலரை வழங்குவதாக வெளிநாட்டு கடன் வழங்குநர்கள் வாக்குறுதி வழங்கியுள்ளனர். இதில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான நிதி யை சீனாவே வழங்குகின்றது என நிதியமைச்சு தெரிவித்தது. இது தொடர்பில் கொழும்பு ஆங் கில ஊடகத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: 2016ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரையான நான்கு மாத காலப் பகுதியில், வெளிநாட்டு அரசுகள் மற்றும் முகவர் அமைப்புகளிடம் இருந்து 727.5 மில்லியன் டொலர் பெறுமதியான 8 கடன் உடன் பாடுகள் மற்றும் 127.9 மில்லி யன் டொலர் பெறு மதியான 9 கொடை பக்.23

# பொருளாதார மத்திய நிலையத்தை இழந்தால் மக்களுக்குத் துரோகி ஆவீர்கள்

## மக்கள் பிரதிநிதிகளை இப்படி எச்சரித்தார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி, வேறு மாகாணத்துக்கு மாற்றப் பட்டால், நீங்கள் அனைவரும் தமிழ் மக்களால் துரோகிகளா கவே பார்க்கப்படுவீர்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண மக் கள் பிரதிநிதிகளிடம் காட்டமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம் பந்தன்.

பொருளாதார மத்திய நிலையத் துக்கான காணி ஒதுக்கீடு தொடர் பில் இரா.சம்பந்தன் தலைமை யில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தன், "அமைச்சர் ரிசாட் பதியுதீன் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் மஸ்தான் ஆகியோர் பணம் திரும்பிப் போய்விடும் என்பதை வைத்து பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக் கின்றனர். திட்டங்களை எங்கள் மீது திணிக்க முற்படுகின்றனர். இதற்கு சில புல்லு ருவிகளும் துணை பக்.23

# தமிழர்கள் விடாப்பிடியாக நின்றால் உள்ளக விசாரணையும் கிடையாது

## இப்படி எச்சரிக்கிறார் டிலான் பெரேரா

கொழும்பு, ஜூலை 4



போர்க்குற்ற விசார ணைப் பொறி முறை யில் பன்னாட்டு நீதி பதிகள் இடம் பெற வேண்டும் என்று கோருகின்றது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு. இதனால் உள் ளக விசாரணையே இடம் பெறாமல் போகும் அபாயம் காணப்படுகின்றது.

இவ்வாறு எச்சரித்தார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரி விக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போர்க்குற்ற விசா ரணை விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள் ளிட்ட அனைத்துத் தரப்பினரும் யதார்த்தமாக வும், மதிநுட்பமாகவும் செயற் படவேண்டும்.

தென்னாபிரிக்காவில் இடம் பெற்றதைப் போன்று, உண்மை யைக் கண்டறியும் ஆணைக் குழுவை நிறுவி இறுதிப் போரில் என்ன நடந்தது என்பதைக் கண் டறிய முயற்சிக்கின் றோம். ஆனால் பக்.25

# தனியார் பஸ் சேவைகள் இடம்பெறும்

கொழும்பு, ஜூலை 4

நாடு முழுவதும் நேற்று நள்ளிரவு முதல் நடத்தப் பட விருந்த தனியார் பஸ்களின் சேவைப் புறக்கணிப்பு கைவிடப்பட்டது. இதனால் வழமை போன்று சேவை கள் இடம்பெறும்.

இவ்வாறு அறிவித்தார் தனி யார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தி னருக்கும் இடையில் நேற் றுக் காலை கலந்துரை யாடல் இடம்பெற்றது. இந் தக் கலந்து ரை யாடலின் பக்.25

# சனத்தொகையை விடவும் அலைபேசிதான் அதிகம்

## இலங்கையின் நிலமை இப்படி

கொழும்பு, ஜூலை 4

இலங்கையின் சனத்தொகை 2 கோடியே 9 இலட்சத்து 66 ஆயி ரமாக உள்ளது. ஆனால் நாட் டில் உள்ள அலைபேசிகளின் எண்ணிக்கையோ சனத்தொகை யையும் மிஞ்சி 2 கோடியே 43 இலட்சத்து 84 ஆயிரத்து 544 ஆக உள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து மக் களும் அலைபேசிகளைப் பயன் படுத்தாத போதும், மொத்த சனத்தொகையைவிட அலை பேசிகளின் எண்ணிக்கை 34 இலட்சத்து 18 ஆயிரத்து 544 ஆல் அதிகரித்துள்ளது.

இதற்கமைய அலைபேசிகளின் அடர்த்தியானது 100 பேருக்கு 116.3 என்ற அடிப்படையில் காணப்படுகிறது.

2015 ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பை அடிப்படையா கக்கொண்ட இந்தத் தகவல்களை தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விவரவியல் திணைக் களம், இலங்கை பக்.25

# தேஜஸ் போர் விமானங்களை விற்கத் தயாராகிறது இந்தியா

கொழும்பு, ஜூலை 4

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தேஜஸ் போர் விமானங்களை நட்பு நாடுகளுக்கு விற்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என இந்தியப் பாது காப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர் தெரிவித்தார்.



இந்தியாவின் ஹிந் துஸ்தான் ஏரோ நொட்டிக்கல் நிறுவனத்தால் உள்ளூர் தொழில்நுட்பங்களுடன் தயா ரிக்கப்பட்ட இரண்டு தேஜஸ் போர் விமானங்கள் இந்திய விமா னப் படையில் முதல் முறையாக இணைத்துக் கொள்ளப்பட்டன. பெங்களூரில் நடந்த இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போது, இந்தியப் பாது காப்பு அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

2025ஆம் ஆண் டில் இந்திய விமானப்படை, 120 தேஜஸ் போர் விமானங்களைக் கொண்டிருக்கும். நான்காவது தலைமுறைப் போர் விமானமான பக்.23

# அயலவரிடம் வாங்கும் கடனுக்கும் வரி செலுத்துகின்ற நிலை வரும்

## கூறுகின்றார் மகிந்த

கொழும்பு, ஜூலை 4

சாதாரண மக்கள் அயலவர்களி டம் வாங்கும் கடன்களுக்கும் வரிசெலுத்த வேண்டிய நிலை நல் லாட்சி அரசினால் ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது:

என் மீது சேறு பூசும் நடவடிக்கை களைக் கைவிட்டு, நாட்டின் அபி விருத்தியை உரிய முறையில் அரசு முன்னெடுக்கவேண்டும். தற்போது இலங்கையின் பொரு ளாதார நிலமை கடும் மோசமான நிலமைக்குத் தள் எப்பட்டுள்ளது. பக்.23

Digitized by Noolaham Foundation.

# பாழடைந்த தேசத்தையே கடந்த அரசு ஆட்சியின் நிறைவில் விட்டுச் சென்றது

## வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

அடுத்துவரும் 5, 6 வருடங்களுக்குள் வடக்கு மக்கள் அனைவரும் தமது காணிகளுக்குள் குடியிருக்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். கடந்த அரசு ஆட்சி நிறைவில் பாழடைந்த தேசத்தையே விட்டுச் சென்றது. நாம் தற்போது இன, மத ரீதியாக ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டுள்ளோம். இப்போது நல்லாட்சியை உணர்ந்திருப்பீர்கள்.

இவ்வாறு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வீடமைப்பு கடன் திட்டத்தில் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 800 பேருக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று மு.ப. 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025ஆம் ஆண்டளவில் நாட்டில் உள்ள அனைவருக்கும் குடியிருப்புக்களை வழங்குவதற்கு முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன்.



யாழ். மாவட்ட அரச அதிபர் ஊடாக 100 ஏக்கர் அரசகாணியை இனங்கண்டு அந்த அரச காணியில் 625 வீடுகள் அமைத்து யாழ். மக்களுக்கு வழங்க தயாராக இருக்கின்றோம்.

யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலகங்களிலும் உள்ள 435 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் ஆயிரத்து 406 கிராமங்கள் உள்ளன. அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் வழிகாட்டலில் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடமைப்பு குழுக்களை அமைக்கவுள்ளோம். இந்த வீடமைப்பு குழுக்கள் ஊடாக அனைவருக்கும் வீடு வழங்கும் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராக இருக்கின்றோம்.

எனது தந்தையாரான ரணசிங்க பிரேமதாச காலத்தில் வடக்கு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு 83 வீடமைப்புக் கிராமங்களை உருவாக்கினார். இன்றைய நல்லாட்சியில் அதனையும் கடந்து அதற்கு அதிகமான வீடமைப்புத் திட்டங்களை நிறுவி வழங்கவுள்ளோம்.

முன்னைய அரசு வடக்கின் வசந்தம் திட்டம் ஊடாக வடக்கு மக்களுக்குச் சேவை செய்கின்றோம் என்று கூறிக்கொண்ட போதும் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கவில்லை. அழிவுதான் மிஞ்சியது. இத்தனை சுகபோகங்களையும் முன்னைய அரசும் அவர்களைச் சார்ந்தவர்களும் அனுபவித்தார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் எந்தவிதமான பயனும் அடையவில்லை.

மகிந்த ஆட்சியினர் 2015ஆம் ஆண்டு 8ஆம் திகதி பாழடைந்த – சீர்குலைந்த தேசத்தையே விட்டுச் சென்றார்கள். இப்போது நல்லாட்சியை உணர்ந்திருப்பீர்கள், உங்களின் மனதில் நச்சு விதைகளை எவரும் புகுத்தக் கூடும். அந்த விதையின் ஊடாகவே போரை எதிர் நோக்கியதை மறக்காதீர்கள்.

நாங்கள் அனைவரும் ஒன்றாக ஐக்கியப்பட்டு வாழ்வதற்கு எங்களுக்கு உங்கள் ஒத்துழைப்புக்களைத்தர வேண்டும் – என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்ததாவது:

போரால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வி நிலை பின்தங்கிய நிலையில் உள்ளது. அதைக் கட்டியெழுப்ப வேண்டும். பல்கலைக்கழகத்தில் படித்து விட்டு பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றி கூலிவேலையும், சந்தைகளில் மரக்கறி வியாபாரமும் செய்கிறார்கள். இவர்களின் நிலை மாறவேண்டும்.

நல்லாட்சி அரசின் ஊடாக எமது இளைஞர், இளம் பெண்களுக்கு விகிதாசாரத்தில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். எமது மாணவர்கள் சிறந்த கல்விமான்களாக உருவாக வேண்டும். மக்கள் இழந்த சொத்துக்களை இந்த நல்லாட்சி அரசின் மூலம் பெற்று வருகின்றோம். அரசு கடன் வழங்கும் திட்டத்தை இரண்டு மடங்காகவும், சீமெந்து வழங்கும் திட்டத்தை மும்மடங்காகவும் உயர்த்த வேண்டும். போர் காரணமாக பாதிக்கப்பட்டு ஓலைக் குடிசையில் இருப்பவர்களை எங்கள் ஆட்சியின் ஊடாக எதிர்காலத்தில் கல்வீடுகளை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். – என்றார்.

நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன், யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், யாழ் பிரதேச செயலர், மதகுருமார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(4,ரி,106)

## இலங்கைக் கடலில் மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 5 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 5 பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த குறித்த 5 பேரும் படகு ஒன்றில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் படகு இந்திய எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து நெடுந்தீவுக் கடற்கரை வரை அத்துமீறியது என்று கடற்படையால் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டனர்.

படகு காங்கேசன்துறை இறங்குதுறைக்குக் கொண்டு செல்லப்பட்டது. மீனவர்கள் மருத்துவப் பரிசோதனையின் பின்னர் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திணைக்களத்தினர் மீனவர்களை ஊர்காவற்றுறை பதில் நீதிவானிடம் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற-4,101,106,107)

## சிறுமியிடம் அத்துமீறி நடக்க முயன்ற குடும்பஸ்தர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4

குடும்பஸ்தர் ஒருவர், தனியார் கல்வி நிலையம் சென்று திரும்பிய சிறுமியின் கையைப் பிடித்துப் பற்றைக்குள் இழுத்துச் சென்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவரின் கையில் கடித்துவிட்டுச் சிறுமி அவரிடமிருந்து தப்பி வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களால் தாக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்படும் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

பதின்ம வயதுச் சிறுமிகள் 2 பேர் தனியார் கல்வி நிலையம் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். குறித்த குடும்பஸ்தர் ஒரு சிறுமியின் கையைப் பிடித்து பற்றைக்குள் இழுத்துச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது.

குறித்த குடும்பஸ்தர் முன்னரும் குறித்த சிறுமியுடன் தவறான முறையில் நடக்க முற்பட்டார் என்றும் கூறப்படுகின்றது. கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் தாக்கப்பட்டதால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-4,26)

## நவீனமயப்படுத்தித் தருகிறோம் என்று கூறி இருந்த குழாய் கிணற்றையும் பாழாக்கினர்

### ஆனந்தபுரம் சிவநகர் கிராம மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 4

எமது தண்ணீர்த் தாகத்தை கடந்த 50 வருடங்களாக போக்கி வந்த, ஒரே ஒரு குழாய் கிணற்றை நவீன மயப்படுத்துகின்றோம் என்று கூறி, இருந்ததையும் நாசமாக்கி விட்டனர். கடந்த ஒரு வருடமாக பணம் கொடுத்தே குடிதண்ணீரைப் பெற்று கொள்ள வேண்டிய அவல நிலையை எதிர் கொண்டுள்ளோம்.

இவ்வாறு ஆனந்தபுரம் சிவநகர் கிராமத்தில் வசிக்கும் மக்கள் குற்றஞ் சாட்டினர்.



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆனந்தபுரம் கிராமத்தில் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ஜேர்மனி நாட்டின் உதவியுடன் 12 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. அவற்றில் ஒரே ஒரு குழாய்க் கிணறு மட்டும் ஆனந்தபுரம், சிவநகர் கிராம மக்களின் குடிதண்ணீர்த் தேவை யைப் பூர்த்தி செய்தது.

ஆனந்தபுரத்தில் உள்ள 80 வீதமான மக்களும், சிவநகர் கிராமத்தில் 60 வீதமான மக்களும் இந்தக் குழாய்க் கிணறு மூலமாகவே தண்ணீர் பெற்றனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது பரப்புரைக் கூட்டத்துக்கு வந்த, இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவர், இந்தக் குழாய் கிணறுக்கு அருகில் தண்ணீர்த் தொட்டி ஒன்றை அமைத்து அதன் ஊடாக பாவனையாளர்களுக்கு நல்ல தண்ணீர் வழங்கப்படும் என்று தெரிவித்து அந்த வேலைத் திட்டங்களை மேற்கொண்டார்.

இதற்கு கிராமத்தை சேர்ந்த பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களுடைய எதிர்ப்பை மீறி அங்குள்ள சிலர் நாடாளுமன்ற உறுப்பினருடைய வாக்குறுதியை நிறைவேற்ற முற்பட்டனர். இப்போது அந்தக் குழாய்க் கிணற்றின் நிலை மோசமாகிவிட்டது.

கையால் தண்ணி அடிக்கும் குழாயை அறுத்து, நீரிறைக்கும் இயந்திரம் பொருத்தப்பட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை தண்ணீர் வரவில்லை. தற்போது குடிதண்ணீரைப் பணம் கொடுத்தே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது – என்று பாதிக்கப்பட்ட மக்கள் கூறினர்.

இது தொடர்பாக குழாய் கிணறு அமைந்துள்ள ஆனந்தபுரம் கிராமத்துக்கு உடனடியாகச் செல்வேன். குழாய்க்கிணறு இயங்காமல் இருப்பதற்கான குறை நிறைகளை ஆராய்ந்த பின்னர் ஒரு வாரத்துக்குள் சீர் செய்து கொடுக்கின்றேன்.

நான் புதிதாக நியமனம் பெற்றுள்ளேன். ஆரம்பத்தில் நடந்த விடயங்கள் தெரியாது. நடந்தவைகளை அறியத்தந்தால் விசாரணைகளை மேற்கொள்ளலாம் – என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

(ற-ஜ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைகள் தடுப்புச் சட்டத்தை மீள நடைமுறைப்படுத்தவேண்டும்

## அருட்தந்தை நந்தன மனதுங்க வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 4

பொலிஸாரினால் திட்டமிட்ட வகையில் சித்திரவதைகள் நாளாந்தம் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை முற்றாகத் தடுக்க வேண்டுமானால், கிடப்பில் போடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு சித்திரவதைகள் தடுப்புச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கண்டி மறைமாவட்ட மனித உரிமைகள் அமைப்பின் தலைவரான அருட்தந்தை நந்தன மனதுங்க.

இலங்கையில் கடந்த 10 வருடங்களாக இடம்பெற்ற சித்திரவதைகளுக்கு எதிரான வழக்குகளை 1994ஆம் ஆண்டு சித்திவதைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யுமாறு சட்டமா அதிபரை வலியுறுத்தி கையெழுத்துத் திரட்டும் போராட்டமொன்றை கண்டி மறைமாவட்ட மனித உரிமை அலுவலகம்மேற்கொண்டுள்ளது.

அருட்தந்தை நந்தன மனதுங்க மேலும் தெரிவித்ததாவது:

ஜூன் மாதம் 25ஆம் திகதி கண்டி நகரில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கையெழுத்துத் திரட்டும் போராட்டத்தில், இதுவரை 5 ஆயிரம் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் கையெழுத்துக்களைத் திரட்டுவதே எமது நோக்கம்.

இந்தக் கையெழுத்துக்கள் அடங்கிய மனு ஜனாதிபதி, நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரிடம் கையளிக்கப்படும். சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பிலான ஏராளமான வழக்குகள் மேல் நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ளன. அவை சித்திரவதைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படாததினால் விசாரணைக்கு எடுக்கப்படாமல் உள்ளன.

கண்டி மாவட்டத்தில் சித்திரவதைக்குள்ளான பலசம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த 10 வருடத்தில் ஒரேயொரு சம்பவத்துக்கு மாத்திரமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டில் தொடரப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு, கண்டி மேல் நீதிமன்றினால் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு 7 வருட சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது - என்றார். (வ-5)

# வெளிநோயாளர் பிரிவில் இன்று நண்பகல் வரை சிகிச்சை இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். போதனா வைத்திய சாலை உட்பட வடக்கில் எந்தவொரு வைத்திய சாலையிலும் வெளி நோயாளர் பிரிவு சிகிச்சைகள் இன்று காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை இயங்காது.

மருத்துவர்கள் இன்று திங்கட்கிழமை காலை தொடக்கம் மதியம் வரை அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்தனர். இதனால் அவசர சேவைகள் மாத்திரம் இயங்கும் என்றும்தெரிவிக்கப்பட்டது. அரசிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதாக மருத்துவர்கள் அறிவித்தனர். (வ-4)

# வெடிபொருள்கள் மீட்பு

உடுப்பிட்டியில் கிணற்றிலிருந்து வெடிபொருள்கள் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அங்குள்ள தோட்டம் ஒன்றில் கிணற்றைச் சுத்தப்படுத்திய போது, கைக்குண்டுகள், மோட்டார் குண்டுகள் என்பவை கண்டறியப்பட்டன. அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் கிணற்றிலிருந்து கைக்குண்டுகள் - 2, மோட்டார் குண்டுகள் - 7 என்பன மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,26)

# இரு வேறு இடங்களில் நகைகள் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 4

நல்லூர் கந்தசுவாமி கோயிலடி மற்றும் கல்வியங்காடு ஆகிய இடங்களில் நேற்றுமுன்தினமிரவு வீடுகளுக்குள் புகுந்து பணம் மற்றும் நகைகள் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லூர் கந்தசுவாமி கோயிலை அண்மித்துள்ள வீட்டினுள் புகுந்த திருடர் 12 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அத்துடன், திருநெல்வேலி - கல்வியங்காட்டு வீதியில் உள்ள வீட்டில் நேற்று முன்தினமிரவு திருட்டு இடம்பெற்றுள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# வாள்வெட்டுச் சம்பவம் பெண் ஒருவர் கைது

வடமராட்சி துன்னாலையில் இடம்பெற்றவாள்வெட்டுச் சம்பவத்தில் தொடர்புடையசந்தேகத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் குறித்த வாள்வெட்டு இடம்பெற்றிருந்தது. அதில் 2 பேர் காயமடைந்திருந்தனர். அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுவிசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தது. தற்போது குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆரம்ப விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,26)

Galaxy Star
வெற்றி வாரம் 071
திகதி 03.07.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 16 20 31 55
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 6,843,740/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
03.07.2016 | 1999 | ஊதா
வெற்றி இலக்கங்கள்
02 29 43 61
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5,934,340 /-

## குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயம் அலுவலக உதவியாளருக்கான விண்ணப்பம்

ஆலயத்தின் பரிபாலனசபையினால் மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து 07.07.2016 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை பரிபாலனசபைத் தலைவர். அல்லது செயலாளரிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

நிபந்தனைகள்

01. விண்ணப்பதாரரின் முழுப்பெயர், பிறந்த திகதி, 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரர் குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயத்துக்கு 1.5 km தூரத்தில் வசிப்பது விரும்பத்தக்கது.
03. வதிவிடத்தைக் குறிப்பிடல் வேண்டும்.
04. க.பொ.த. சா.த பிரிவில் கணிதம், தமிழ், சமய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
05. சைவ சமயத்தவராகவும், நற்பண்புடையவராகவும், ஆசாரசீலராகவும் இருத்தல் வேண்டும்.
06. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
07. காலை 6.00-9.00 வரை மாலை 3 .00- 6.00 மணிவரை கடமைபுரிய வேண்டும்
08. தெரிவு செய்யப்படுபவர் பரிபாலன சபையுடன் உடன்படிக்கை செய்தல் வேண்டும்.

மேற்கூறிய விவரங்களை கொண்ட சுயவிவரக் கோவையை ஆதாரங்களுடன் இணைத்து சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர் வேண்டப்படுகின்றார். உரிய காலத்தின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் போதிய தகவல்கள் இல்லாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

திரு. க. [illegible] தலைவர்.
ஆலய பரிபாலன சபை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





Best Wishes

திரு. பொ. சிவரஞ்சன்
SLPS III, B.Sc., PGDE

திரு. சி. சேரரூபன்
SLPS III, SPL.Trd English

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி அதிபர் தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றுள்ள ஆசிரியர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Graduation Ceremony – 2016

இன்று(04.07.2016)

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இல் இடம்பெறும் ESOFT இனது பட்டமளிப்பு விழாவில் கலந்து

- HND in Computing & Systems Development
- HND in Business Management
- B.Eng.(Hons) in Software Engineering

ஆகிய துறைகளில் பட்டம் பெறும் எமது மாணவர்களுக்கு பாராட்டு தெரிவிப்பதோடு இவர்கள் மென்மேலும் பல பட்டங்களை பெற்றுக்கொள்ள எமது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம்.

ESOFT
Shaping Lives, Creating Futures
Management of ESOFT

ESOFT
ESOFT METRO CAMPUS
இலங்கையின் பாரிய உயர் கல்வி வலையமைப்பு
www.esoft.lk
077 309 9 308 / 021 222 4142
Follow us on
facebook.com/ESOFTMetroCampus
www.twitter.com/esoftsrilanka
Shaping Lives, Creating Futures.
ESOFT.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணப்பையைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்.நகரில் உள்ள அழகுசாதன விற்பனை நிலையத்தில் பொருள்கள் கொள்வனவு செய்ய வந்திருந்த வெளிநாட்டு நபரின் பணப்பையை திருடிய குற்றச்சாட்டில் ஒரு பெண் கைது செய்யப்பட்டார் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர். கச்சேரி வீதி நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த பெண்ணே கைது செய்யப்பட்டார்.

உறவினர்களைப் பார்ப்பதற்காகக் கனடாவில் இருந்து வந்திருந்த பெண், பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகக் கொண்டு சென்ற 72 ஆயிரம் ரூபாவுக்கு நிகரான 520 அமெரிக்க டொலர் நாணயத்தாளை தன்னுடன் எடுத்துச் சென்றார்.

அவர் கடையில் பொருள்கள் கொள்வனவு செய்து கொண்டிருக்கும்போது, அங்கு சென்ற சந்தேக நபரான பெண் கைப்பையைக் கையால் தட்டிவிட்டு பணப் பையைத் திருடினார் என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த கடையில் பொருத்தியிருந்த சீ.சீ.ரீ.வீ. கமரா பதிவுகள் மூலம் சந்தேக நபர் இரவு கைது செய்யப்பட்டார் என்றும், விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-4,107)

### பதவி வெற்றிடங்கள்

2015,O/L, A/L எழுதிய மாணவர்களே!

எமது கிளைகளுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் இருந்து சர்வதேச கம்பனி யில் பணிபுரிய ஆள் தேவை.

★ வயதெல்லை - 18 - 30 தங்குமிடம் 3 வேளை உணவு வசதிகள் உண்டு.
★ அனுபவம் அவசியமற்றது (இலவச பயிற்சி)
★ Supervisor,Administration,Ass. Manager, Management Trainees.

077 136 3797, 077 664 4442, 077 700 9820

CRB

### சேமிப்பு மாதம்

**வடமாகாண கௌரவ கூட்டுறவு அமைச்சர் அவர்களால்**

பிரகடனப்படுத்தப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ்

**ஜூலை 01 தொடக்கம் 31 வரையான காலப்பகுதி**

கிராமிய வங்கி சேமிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையில் **வவுனியா மாவட்டத்தில்** உள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் யாவும்

மேற்படி **சேமிப்பு மாதத்தை** முன்னிட்டு வாடிக்கையாளர்களால் வைப்புச் செய்யப்படும் வைப்புக்களுக்கு

**கவர்ச்சிகரமான வட்டி வீதம்**

வழங்கி வருகிறார்கள்.

ஆதலால் இச் **சேமிப்பு மாதத்தில்** வைப்புச் செய்யப்படும் சேமிப்பு, நிலையான வைப்புக்களுக்கு உயர்வான **வட்டி வீதத்தைப்** பெற்றுக்கொள்ளலாம்.

**"கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி கிராமிய மக்களின் எழுச்சி"**

தலைவர்:
வவுனியா மாவட்டக் கூட்டுறவுச் சபை.

# கிளிநொச்சி மாவட்ட மக்களின் வீட்டுத் தேவை நிவர்த்தியாகும்

## வீடமைப்பு அமைச்சர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 4

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 95 கிராமங்களையும் சேர்ந்த மக்களுக்குத் தேவையான வீடுகள் அமைத்துத் தரப்படும். அந்த மக்களின் வாழ்வாதார தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

இவ்வாறு வீடமைப்பு மற்றும் நிர்மாண துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று கிராமத்துக்கு கிராமம், வீட்டுக்கு வீடு எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியைச் சேர்ந்த 300 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபா வீட்டுக் கடன் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தூய்மையான பௌத்தர்கள் ஒருபோதும் இன மத வேறுபாடுளைக் காட்டமாட்டார்கள். அனைவரையும் ஒரே மாதிரியே நோக்குவார்கள். நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தூய்மையான பௌத்தர்கள். நானும் ஒரு தூய்மையான பௌத்தனே. தூய்மையான பௌத்தர்களுடைய செயலையே இந்த நல்லாட்சி அரசு செய்து வருகின்றது. அதைச் சிதைக்க சிலர் முயல்கின்றனர். அதற்கு ஒருபோதும் இந்த நல்லாட்சி அரசு இடமளிக்காது. அதனாலேயே உங்கள் வீட்டுப் பிரச்சினையை ஆராய வந்துள்ளேன். என்னுடைய தந்தையும் இந்தக் கொடிய போரால்தான் இறந்துள்ளார். உங்களைப்போல நானும் போரால் பாதிக்கப்பட்டவன். இந்த நல்லாட்சி அரசு மீண்டும் ஒரு போர் ஏற்படாதவாறு செயற்பட்டு வருகின்றது. நான் கிளிநொச்சி அரச அதிபரிடம் 50 ஏக்கர் நிலப்பரப்புக்களை கொண்ட இரண்டு தொகுதிக் காணிகளைத் தருமாறு கோரியுள்ளேன். ஒவ்வொன்றிலும் 300 வீடுகளை அமைப்பதற்காகவே. அந்த வீட்டுத்திட்டங்களை திறந்து வைப்பதற்கு நான் மீண்டும் கிளிநொச்சிக்கு வருவேன். கிளிநொச்சி மாவட்டத்தில் 95 கிராமங்கள் உள்ளன. லட்சக்கணக்கான மக்கள் உள்ளார்கள். இந்த மக்கள் அனைவரினதும் வீட்டுத்தேவைகள், மற்றும் வாழ்வாதார தேவைகள். அனைத்தும் விரைவில் பூர்த்தி செய்யப்படும். - என்றார்.

இந்த நிகழ்வில் வீடமைப்பு மற்றும் நிர்மாண துறை அமைச்சர் சஜித் பிரேமதாச, மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கரைச்சி, பளை பிரதேச செயலாளர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(ற-21,ரி3)

# முன்னாள் போராளி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஒரு கண் பாதிக்கப்பட்டிருந்த முன்னாள் போராளி ஒருவர் உயிரை மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்தது.

அவரை 8 வருடங்களாக ஒரு பெண் விரும்பியிருந்தார் என்றும் ஆனால் இறுதியில் பெண் வீட்டுக்காரர் மறுத்த நிலையில் குறித்த பெண் வேறு திருமணம் செய்து சென்றுவிட்டமையே இதற்குக் காரணம் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அவரது வீட்டுக்கு அருகேயுள்ள காணி ஒன்றில் காணப்பட்ட அவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த 27 வயதுடைய குறித்த இளைஞனின் பெற்றோர் பல வருடங்களுக்கு முன்னரே உயிரிழந்து விட்டனர். தனது சிறிய தாயாருடன் அவர் வசித்து வந்தார். அவர் ஒரு பெண்ணை விரும்பியிருந்தார். இருவரும் 8 வருடங்களாகக் காதலித்து வந்தனர். குறித்த இளைஞன் முன்னாள் போராளி. அவருக்கு ஒரு கண் பார்வையில்லை. தடுப்பு முகாமிலிருந்து விடுதலையாகி வந்தவர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் அந்த இளைஞனுக்குத்தெரியாது குறித்த பெண்ணுக்கு வேறு திருமணம் நடந்தது. அது தற்போது தெரியவந்திருந்த நிலையில் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினமிரவு அவர் உயிரை மாய்த்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ற-4)

### உளமார்ந்த நன்றிகள்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக 26.06.2016 அன்று ஆசி மட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெற்ற ராஜா பிளாசாவின் மாதிரிக் கிராமப் பதினைந்து வீட்டுத்திட்ட நன்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வினைத் திறம்பட ஒழுங்கமைப்புச் செய்து நிகழ்த்தியமைக்காக என் சார்பிலும் எனது குடும்பத்தினர் சார்பிலும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்த நிகழ்வுக்குப் பல வழிகளிலும் பங்களிப்பு நல்கிய கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய பாடசாலை சமூகத்தினருக்கும் மேலும் எம்மை மங்கல வாத்தியம் சகிதம் வீதியால் ஊர்வலமாக அழைத்து வந்தவேளை வீதியின் இரு மருங்கிலும் பூரண கும்பம் வைத்து அன்பாக மலர்மாலை பொன்னாடை அணிவித்து வாழ்த்திய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் விழா நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களுக்கும், அயலவர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எனது சேவையினை வாழ்த்திப் பேசியவர்களுக்கும், மலர்மாலை, மலர்க்கொத்து, பொன்னாடை, கேடயங்கள், பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தவர்களுக்கும் மேலும் பத்திரிகை, துண்டுப்பிரசுரங்கள் மூலம் வாழ்த்துத் தெரிவித்தவர்களுக்கும், 23.06.2016 இடம்பெற்ற வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் முழு நிகழ்வினையும் புகைப்படம், வீடியோ மூலம் தமது சேவையினை இலவசமாக வழங்கிய போட்டோ ஸ்ரீ நிறுவனத்தினருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. நவேந்திரநாதன் குடும்பத்தினர்**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழம்புச் சட்டிக்குள் விழுந்து சிறுமி காயம்

முல்லைத்தீவு, ஜூலை 4
சாப்பாட்டுக்காகக் காத்திருந்த 5 வயதுச் சிறுமி மீன்குழம்பு வைக்கப்பட்டிருந்த சட்டியினுள் தவறி விழுந்து சுடுகாயங்களுக்கு உள்ளானார். சிறுமி கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் முழங்காவிலில் நேற்றுமுன்தினம் நடந்தது. முழங்காவில் அன்புபுரத்தைச் சேர்ந்த சிறுமியே எரிகாயங்களுக்கு உள்ளானார்.
அடுப்பிலிருந்து இறக்கி வைக்கப்பட்டு – கொதித்துக் கொண்டிருந்த நிலையில் இருந்த மீன் குழம்புச் சட்டிக்குள் சாப்பிடுவதற்குத் தயாராக நின்ற சிறுமி தவறி விழுந்தார்.
முழங்காவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று உறவினர்கள் தெரிவித்தனர். (ந-21,10)

# தேவாங்கு என்று கூறியதால் ஆத்திரமடைந்து கொன்றேன்

## சென்னை சுவாதி கொலைச் சம்பவத்தில் கைதானவர் வாக்குமூலம்

சென்னை, ஜூலை 4
நான் சுவாதியைக் காதலித்தேன். என்னை அவர் தேவாங்கு என்று கூறி நிராகரித்தார். அதனால் ஆத்திரமடைந்த நான் அவரைக் கொன்றேன். இவ்வாறு சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் நடைபெற்ற கொலைச் சம்பவத்தில் கைதான சந்தேக நபரான ராம்குமார் வாக்கு மூலம் வழங்கினார்.
கடந்த வாரம் காலை வேளை ரயில் நிலையத்தில் ரயிலுக்காக நின்றிருந்த 24 வயது டைய சுவாதி கோபாலகிருஸ்ணன் என்னும் பொறியியலாளர் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். கொலையாளி தப்பிவிட்ட நிலையில் பொலிஸார் தனிப் படைகள் அமைத்து விசாரணைகளை முடுக்கிவிட்டனர். 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. சுவாதியின் நண்பர்கள், சக ஊழியர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. கொலையாளி தப்பிச் சென்ற 5 பகுதிகளில் இருந்து பாதுகாப்புக் கமரா பதிவுகள் சேகரிக்கப்பட்டன.
அவற்றில் கொலையாளி பதிவாகியிருந்தபோதும் அவை தெளிவில்லாது இருந்தன. அதனால் பொலிஸார் கடும் நெருக்கடியைச் சந்தித்தனர். குறித்த படங்கள் சென்னை நகரத்தில் இருந்த அனைத்து விடுதிகள் அறை வாடகைக்கு கொடுக்கப்படும் இடங்களில் காட்டப்பட்டு விசாரிக்கப்பட்டது. சௌராஷ்டிரா நகரில் உள்ள அறை வாடகைக்குக் கொடுக்கும் இடத்தில் பொலிஸாருக்கு துப்புக் கிடைத்தது. விடுதியின் பராமரிப்புப் புத்தகத்தில் காணப்பட்ட படமும், பாதுகாப்புக் கமராவில் பதிவான படமும் ஓரளவு ஒத்துப்போனது.
பொலிஸாரின் விசாரணையில் அந்த நபர் ராம்குமார் என்றும், அவரது சொந்த இடம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை என்றும் கண்டு பிடிக்கப்பட்டது. கொலை நடந்த தினத்துக்குப் பின்னர் குறித்த நபர் அறைக்கு வரவில்லை என்பது பொலிஸாரின் சந்தேகத்தை உறுதிப்படுத்தியது.
ராம்குமாரின் கிராமத்துக்கு தனிப்படை அனுப்பப்பட்டது. அவரின் வீட்டுக்குச் சென்று பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். வீட்டின் பின்புறம் ராம்குமார் பதுங்கியிருந்துள்ளார். பொலிஸாரைப் பயமுறுத்தித் தப்பிக்கும்நோக்கில் அவர் தனது கழுத்தை கூர்மையான ஆயுதத்தால் காயப்படுத்தியுள்ளார். உடனடியாக ராம்குமார் தென்காசி அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
தற்போது ஆபத்தான நிலையைத் தாண்டியுள்ள ராம்குமார் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.
சுவாதியின் வீடு சூளைமேடு பகுதியில் உள்ளது. சுவாதி மென்பொருள் பொறியியல் பட்டப் படிப்பு முடித்துச் செங்கல்பட்டு அருகில் உள்ள மகேந்திரா வோல்ர்டு சிட்டியில் உள்ள இன்போசிஸ் நிறுவனத்தில் வேலை செய்கின்றார்.
கடந்த டிசெம்பர் மாதம் சுவாதியிடம் காதலைத் தெரிவித்தேன். அதை அவர் நிராகரித்தார். உன் முகம் தேவாங்கு போல இருக்கின்றது என்று சுவாதி கூறியதால் மிகுந்த ஆத்திரமடைந்தேன். சுவாதி தினசரி பணிக்குச் செல்ல நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து மின்சார ரயிலில் செல்பவர். அப்படிக் கூறிய சுவாதியின் வாயை குறிவைத்துத் தாக்கினேன்.- என்று அவர் கூறியுள்ளார். (ந-ரி4)

> சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் கடந்த வாரம் 24 வயதுடைய சுவாதி என்னும் பொறியியலாளர் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

## வடமாகாண உணவுப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4
வடமாகாணத்தில் உற்பத்தியாகும் தரமான உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க யாழ். வணிகர் கழகம் முன்வந்துள்ளது. வடமாகாண உற்பத்தியாளர்கள் யாழ்.வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு பயன்பெற முடியும். இவ்வாறு வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது– தரமான உணவுப் பொருள்களின் தேவைகள் பற்றிய கேள்வி கோரல்கள் யாழ். வணிகர் கழகத்துக்கு ஏற்கனவே கிடைத்துள்ளன. புலம்பெயர் மக்களின் தேவைகளைப் பூர்த்தியாக்கும் வகையில் பொருள்களை ஏற்றுமதி செய்யவும், அவர்களுக்குத் தேவையான பொருத்தமான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவும் நாம் செயற்படுகின்றோம்.
இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வசதியாக உள்ளூரில் உற்பத்தியாகும் தரமான உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் பற்றிய அனைத்து விவரங்களையும், உற்பத்தியாளர்கள் யாழ். வணிகர் கழகத்துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவே அல்லது மின்னஞ்சல் வாயிலாகவோ அனுப்பலாம்.
இவ்வாறான பொருள்களை ஏற்கனவே உற்பத்தியாக்கி சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டவர்களும், தங்கள் விவரங்களை எமக்கு மீண்டும் அனுப்பி வைத்தால், மேலதிக சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.
தங்களால் உற்பத்திசெய்யப்படும்பொருள்களின் புகைப் படங்கள், தரம், விசேட தன்மைகள் போன்ற விவரங்களையும், தங்களால் வழங்கக்கூடிய தொகை பற்றிய விவரங்களையும் மற்றும் ஏனைய விசேட தன்மைகள் பற்றிய விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். யாழ். வணிகர் கழகம், இல.165 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ, jaffna chamber of commerce@ gmail. com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ உற்பத்தியாளர்கள் விவரங்களைச் சமர்ப்பிக்கலாம் - என்றுள்ளது. (ந-ஐ-ரி)

## சிறாரை முன்னிலைப்படுத்தி சர்வதேச கூட்டுறவாளர் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
"சிறுவர் பாதுகாப்பைக் கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப்பொருளில் இந்த முறை 94 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக சபையால் முன்னெடுக்கப்படும் சமூக நலன் திட்ட சேவையில், இந்த முறை சிறுவர் பாதுகாப்பை கட்டியெழுப்புவோம் என்ற நலத் திட்டம் நாடு பூராகவும் செயற்படுத்தப்படவுள்ளன. இந்த ஆண்டு இடம்பெறும் 94 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் சகல போட்டிகளும் "சிறுவர் பாதுகாப்பை கட்டியெழுப்புவோம்" என்ற பொருளில் நடத்தப்பட்டு வருகின்றன. பாடசாலை மற்றும் கூட்டுறவாளர்கள், அங்கத்தவர்கள் மட்டத்தில் நடத்தப்படும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் என்பனவும் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான அறிவூட்டலின் கீழ் இடம்பெற்று வருகின்றன என்றும் சபை தெரிவித்துள்ளது. (ந-ஐ-17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
17 . 04 . 1947

இறப்பு
15 . 07 . 2015

திதி : ஆனி அமாவாசை

### திருமதி உமாபதிதேவி சிவசுப்பிரமணியம்

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
நாள்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி
மாதங்கள் வருடமாகி இன்றுடன்
ஓராண்டு நிறைவடைந்து விட்டதம்மா
நீ மீண்டும் எம்மிடம் எப்போ
வருவாய் என்று ஆவலுடன் எதிர்பார்த்து
பரிதவித்துக் காத்திருக்கும்

கன்னாலை,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

(J/8830) (11,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 4
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கீழ் குறிப்பிட்ட இடங்களில் மின் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் மாதகல், காங்கேசன்துறை, குசுமாந்துறை, காட்டுப்புலம் ஆகிய இடங்களிலும், வவுனியாவில் கோவில்குளம், சிவன்கோவிலடி பிரதேசம் ஆகிய இடங்களிலும், மன்னாரில் மணல்குளம், சூரியக்கட்டைக்காடு ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறி வித்துள்ளார். (ற–ரி)

# சங்கங்களில் கூட்டுறவாளர் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
94ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு அநேகமான கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த சனிக்கிழமை கூட்டுறவுக் கொடியை ஏற்றி, பணியாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வுகளை நடத்தின.
ஐக்கிய நாடுகள் சபையால் 1922 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் முதல் வாரத்தின் சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவாளர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. கடந்த சனிக்கிழமை 94ஆவது சர்வதேச கூட்டுவாளர் தினம் நாடு முழுமையாகவும் கொண்டாடப்பட்டது.
குடாநாட்டில் சில கூட்டுறவுச் சங்கங்கள், இந்தத் தினத்தை நினைவு கூர்ந்து கூட்டுறவுக் கொடியை ஏற்றியதோடு, சில சங்கங்களில் கூட்டுறவு தொடர்பான நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. (ற–ஐ–17)

# கலந்துரையாடல்

சுன்னாகத்தில் 8 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய தபாலகம் தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட் கிழமை பி.ப. 3.30 மணிக்கு சுன்னாகம் தபாலகத்தில் நடைபெறவுள்ளது.
சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் கோரிக்கைக்கு அமைய புதிய தபாலகம் அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் உந்துதலில் தற்போது எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தபாலகம் அமைந்துள்ள காணியிலேயே புதிய கட்டடம் அமையவுள்ளது. அது தொடர்பான கலந்துரையாடலே இன்று நடைபெறவுள்ளது.
சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபையின் தலைவர் சி.குமரவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், வட பிரதேச பிரதித் தபால் மா அதிபர் என். இரத்தினசிங்கம், சுன்னாகம்நகரஅபிவிருத்தியின் செயலாளர் சபா.புஷ்பநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரின் செயலாளர் பேரின்பநாயகம் எனப் பலர் கலந்து கொள்ளவர். (ற–ரி)

## விளையாடிய இளைஞனை தீண்டியது பாம்பு

முல்லைத்தீவு, ஜூலை 4
விளையாடிக் கொண்டிருந்த இளைஞனை பாம்பு தீண்டியது. இளைஞன் மயக்கமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.
இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்பு கொலனியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. சுதந்திரபுரம் கொலனியைச் சேர்ந்த துரைசாமி ஜீசாந்தன் (வயது–21) என்ற இளைஞனே மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான்.
பாழடைந்த கிணற்றுக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்த போதே பாம்பு தீண்டியது என்று தெரிவிக்கப்பட்டது. வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின் மூலம் இளைஞர் தற்போது ஆரோக்கியமாக உள்ளார் எனப் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது. (ற–ரி7)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**நடராஜன் சிவநாதன்**

திதி: 04.07.2016

ஆண்டு ஒன்று சென்றதுவே
ஆறவில்லை எம் நெஞ்சம்!
அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் கவர்ந்துவிட்டு
அவனியில் எமைவிட்டு
சென்றதேனோ?
அழியாத நினைவுகளால்
என்றும் நீங்கள் எம்
நெஞ்சினில் வாழ்ந்திருவீர்.

குடும்பத்தினர்.
நாவற்காடு, வரணி.

உதிப்பு 18.12.1980 — உதிர்வு 16.06.2015

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சபாபதி வீரசிங்கம்**
(யாழ் மாநகரசபை ஓய்வூதியர்)

திதி: 04.07.2016
பிறப்பு 04.11.1931
இறப்பு 15.07.2009

எமது குடும்பத்தின் தலைவராக இருந்து
நாம் மேன்மையுற அல்லும் பகலும்
அயராது உழைத்து எம்மைப் பேணிப் பாதுகாத்து
நல்வழிப்படுத்திய எமது தந்தையை மறவோம்.

குடும்பத்தினர்.
நாவலடி லேன், கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 03 . 1953



மறைவு 15 . 07 . 2015

**அமரர் திருமதி தவமணி கந்தசாமி**
(களபூமி காரைநகர்)

திதி: அமாவாசை(04.07.2016)

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர் வழியில் வாழ வைத்த
எம் குடும்ப விளக்கு
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகிறோம்

176, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வைத்திலிங்கம் சபாரெத்தினம்**
(காந்தி)



திதி: அமாவாசை
மண்மகிழ 04.03.1931 — கண் நெகிழ 16.06.2015

அன்பின் உறைவிடமே பண்பின் பிறப்பிடமே
பாசத்தின் நீரூற்றே நீங்கள் எங்களை விட்டு
பிரிந்து சென்று ஓராண்டு சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
எம் நெஞ்சில் சுட்டி போல் உறைந்துள்ளது
உங்கள் பொன்சிரிப்பையும் மழலை பேச்சையும்
மறக்க முடியாமல் இன்று சிந்தை நொந்து
கலங்குகின்றோம் நாமிங்கு ஐயா ----

குடும்பத்தினர்.
இல.20, மணல் தரை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சித்திரா**



தாய் மடியில்
27.11.1976

இறைவன் அடியில்
16.06.2015



எங்கள் பாசம் உள்ள பவித்திரமே சித்திராவே!
ஆண்டு ஒன்று ஆனாலும் உன் பிரிவால்
வாடி வதங்கி இருக்கும் உன்
அப்பா, அம்மா, சகோதரங்கள், உன் உறவுகள்
கண் கசிந்து கண்ணீர் மழை பொழியுதம்மா
ஏன் அம்மா எங்களை விட்டுச் சென்றதுவே?
நாம் அறியோம் அம்மா!
நீ ஆசையுடன் பெற்றெடுத்த பாலன்
விநுசன் ஏங்கித் தவிப்பதை நீ மேல்
இருந்து பார்த்து இருப்பாய் தெய்வமே
சித்திரா சித்திரா என்று நாங்கள் யாரை
அழைப்பது அம்மா! அந்தக் காலதேவன்
ஒருவர் கண்களிலும் தெரியாமல்
எங்கள் பாசமான சித்திராவை அழைத்துச்
சென்றதுவே யாம் அறியோம்
அம்மா உங்கள் ஆத்மா சாந்தி
அடைய அந்த படைத்த பகவானை
வேண்டி நிற்கின்றோம் அம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible] குடும்பத்தினர்
நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் அரணை அகற்றி குளத்தின் புனரமைப்புக்கு உதவுக

## ஒலுமடு விவசாயிகள் கோரிக்கை; விரைவில் நடக்கும் என்கின்றனர் அதிகாரிகள்

முல்லைத்தீவு, ஜுலை 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒலுமடு குளக்கட்டின் நடுவில் இராணுவத்தினர் அரண் அமைத்துள்ளனர். அதனால் குளப் புனரமைப்பு பாதிக்கப்படுகின்றது. அங்கிருந்து இராணு வத்தினரை அப்புறப்படுத்தி குளப் புனரமைப்புக்கு உதவ வேண்டும். இவ்வாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள மாங் குளம் ஒலுமடுக் குளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு 4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. குளப் புனரமைப்புக்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

குளக்கட்டின் நடுவில் இராணுவத்தினர் அரண் அமைத்து அதில் மினி முகாம் அமைத்துள்ளனர்.

புனரமைப்பை மேற் கொள்ள முடியாத நிலையில் ஒப்பந்தகாரர் உள்ளார்.

"அதிகாரிகள் குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளின் நன்மையைக் கருத்திற் கொண்டு, இராணுவத்தினரின் மினி முகாமை அகற்ற வேண்டும்"- என்று விவசாயிகள் கோரினர்.

"குளம் அமைந்துள்ள பகுதியில் இராணுவ மினி முகாம் அமைந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், இராணுவத்தளபதியைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மினி முகாம் அமைத்துள்ள இராணுவத்தினரை வெளியேற்றி குளப் புனரமைப்புக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கவுள்ளனர்" - என்று முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவை அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ற-ஜ-5-21-102-ரி7)

# வயது உடலுக்கு வரலாம் மனதுக்கு வரக்கூடாது

## வடக்கு முதலமைச்சர் கருத்து

யாழ்ப்பாணம், ஜுன் 4

வயது உடலுக்கு வரலாம். மனதுக்கு வரக்கூடாது. மனம் என்றும் இளமையுடனே இருக்க வேண்டும். தன்னைப் பார்த்துச் சிரிக்கக் கூடிய ஒருவன் தான் இளமையுடன் இருக்க முடியும். மற்றவர்களின் நலம் மீது சதாகாலமும் அக்கறை காட்டும் ஒருவரால்தான் இளமையுடன் இருக்கமுடியும். வேற்றுமைகளைக் கடந்து அன்புடன் நடக்கக் கூடிய ஒருவரால் தான் இளமையுடன் இருக்கமுடியும்.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வேலணை வேணியனுக்கு சேவை நலன் பாராட்டும் நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒரு மனிதனின் சுமார் 80, 85 வருட கால வாழ்க்கையின் போது அதன் கடைசிக் காலங்களில் ஒருவரைப் பாராட்டுவதென்பது சாதாரண விடயமன்று.

கடந்த 60, 70 வருடங்களில் எங்கள் குணம் மாற்றமடையவில்லை என்றே தோன்றுகின்றது. இன்னொருவரை எழும்பவிடாது தடுப்பதில் நாங்கள் அசகாய சூரர்கள்.

இரண்டாம் உலகப் போர் முடிவில் நடந்தது என்று ஒரு கதை கூறுவார்கள். பல கைதிகளை ஜப்பானியர் சிறையில் வைத்திருந்தார்களாம். பெரும் கிடங்குகளைக் கிண்டி அவற்றுள் அவர்களை நிற்க வைத்தார்களாம். அவர்கள் தப்பிச் செல்லாமல் அக் கிடங்குகளைச் சுற்றி ஜப்பானியப் போர் வீரர்கள் காவல் காத்தார்களாம். ஒரு கிடங்கை மட்டும் அவர்கள் காவல் காக்கவில்லை. ஏன் என்று கேட்டதற்கு அங்கு இலங்கைத் தமிழர்கள் இருக்கின்றனர் என்று கூறப்பட்டது. அவர்களுக்குக் காவல் வேண்டாமா என்று கேட்டபோது வேண்டாம்! ஒருவன் தப்பப்பார்த்தால் மற்றவன் அவனைக் கீழே பிடித்து இழுத்து விடுவான். எவருமே வெளியேற மாட்டார்கள் என்று ஜப்பானிய உயர் அதிகாரி கூறினாராம்.

இன்னொருவரின் நல்ல குணாம்சங்களை, நற்சேவைகளை, நல்ல பண்புகளை நாங்கள் பாராட்டப் பழக வேண்டும். அவர் எதைச் செய்து விட்டார்? அவர் யார்? அவருக்கு என்ன யோக்கியதை இருக்கு? என்று எந்நேரமும் கேட்டுக் கொண்டிராமல் ஒருவரின் நற்பண்புகளை, நற்சேவைகளை, நல்ல உள்ளத்தை நாம் எடைபோட்டு நற்சான்றிதழ் வழங்க முன்வரவேண்டும். அப்படி இல்லை என்றால் அவர் என்னத்தைச் செய்து விட்டார்? என்ற கேள்வியை விடுத்து நான் இதுவரை என்னத்தை உருப்படியாகச் செய்து விட்டேன்? என்ற கேள்வியை எழுப்பலாம்.

மிகவும் எளிமையான தோற்றத்தைக் கொண்ட வேலணை வேணியன் சாதாரணமான ஒருவர் அல்லர். பல களங்களைப் பார்த்தவர். பல வெற்றி தோல்விகளுக்கு முகம் கொடுத்தவர். மொத்தத்தில் ஒரு கடமை வீரர் என்று கூறலாம். இப்பொழுது ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித்தலைவராக இருக்கும் அவர் தமிழ் மொழி மீது பற்றுக் கொண்ட வித்துவானாகவும், கவிஞராகவும், எழுத்தாளனாகவும் பிரகாசிக்கின்றார். ஐம்பது வருடங்களாக அவரின் சேவை தொடர்ந்து எம் மக்களுக்குக் கிடைத்து வருகின்றது. தலைநகரிலும், நாடெங்கிலும் பணியாற்றி வருகின்றார்- என்றார். (ற-ஜ-4)

# வடக்கு ரயில் கடவை உத்தியோகத்தர்கள் நேற்றும் பணிப் புறக்கணிப்புப் போராட்டம்

## தீர்வு கிடைக்கவில்லை எனில் தொடரும் என அறிவிப்பு

வவுனியா, ஜுலை 4

வேலைநிறுத்தப் போராட்டத்தில் கடந்த புதன்கிழமை தொடக்கம் ஈடுபட்டுள்ள வடக்கு ரயில் கடவைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நேற்றும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். உரிய தீர்வு கிடைக்கும்வரை தமது வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் ரயில் நிலையங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு ரயில் கடவைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகவுள்ள தங்களை நிரந்தர உத்தியோகத்தர்களாக நியமிக்க வேண்டும் என்றும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியே வவுனியா மாவட்ட ரயில் கடவைக் காப்பாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்தப் போராட்டம் முற்பகல் 9.30 மணியளவில் வவுனியா ரயில் நிலையம் முன்பாக நடத்தப்பட்டது.

அவர்கள் தெரிவித்ததாவது:

கோரிக்கைகளை முன்வைத்து கடந்த புதன்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். உரிய தீர்வு இதுவரை கிடைக்கவில்லை. அதனால் நேற்றும்போராட்டத்தை முன்னெடுத்தோம். இது தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

வடக்கு மாகாணத்துக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்டன. எமக்கான நீதி மறுக்கப்பட்டு வருவது தொடர்பாக அரசியல் பிரமுகர்கள், ஜனாதிபதி, பிரதமர், அதிகாரிகளுக்கு பல்வேறு கடிதங்கள் அனுப்பியுள்ளோம். இதுவரை எமக்கு எவ்வித பதில்களும் வழங்கப்படவில்லை.

ரயில் கடவைக் காப்பாளர்களாகக் கடமையாற்றி வரும் எமக்கு ஒரு நாள் சம்பளமாக 250 ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது. தற்போது நாட்டின் பொருளாதார நெருக்கடியில் வெறுமனே 250 ரூபா வழங்கப்படுவது நாட்டின் தொழிலாளர் சட்டத்துக்கு முரணானது. அதுமட்டுமன்றி மாத இறுதியான 31 ஆம் திகதிக்கான சம்பளம் வழங்கப்படாமை, சுகவீன விடுமுறைவழங்கப்படாமை, காப்புறுதி, ஊழியர்சேமலாப நிதியத்தில் இணைத்துக் கொள்ளப்படாமை, அரச, தனியார் என்ற பிரிவுக்குள் இணைத்துக் கொள்ளப்படாமை என்பன இந்நாட்டின் சட்ட திட்டங்களின்படி உச்சக்கட்ட மனித உரிமை மீறல்களே.

வடக்கு மாகாணத்தில் ரயில் நிலையங்களில் இருக்கக்கூடிய வெற்றிடங்களுக்கு வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களைச் சேவையில் அமர்த்துவதைக் கண்டிக்கின்றோம். எமது மாவட்டங்களிலிருந்து (யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு) போரால் நலிவுற்றிருக்கும் இளைஞர்களாகிய எங்களையே அந்த வெற்றிடங்களுக்கு உள்வாங்கவேண்டும்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாக கொழும்பில் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டத்தின் போது 5 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிப்புச் செய்யப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதியளித்தார். இன்றுவரை சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. அந்த சம்பளத்தையும், நிலுவையில் உள்ள சம்பளத்தையும் சேர்த்து வழங்க வேண்டும்- என்றனர்.

போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினர், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் கடமையிலிருக்கும் ரயில் கடவை பாதுகாப்புப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (ற-ஜ-4,21)



திருகோணமலை நகர லயன்ஸ் கழகத்தின் 25ஆவது ஆண்டு பூர்த்தியும் 2016-2017 ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை திருகோணமலை வெல்கம் விடுதியில் நடந்தது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக முன்னாள் பணிப்பாளர் தனில் வட்டவல கலந்து கொண்டார். கழகத்தின் புதிய தலைவராக லயன் உதயசங்கர் பதவியேற்றார்.(ற-ஜ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவா பாக்குடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜுலை 4

யாழ்.முனீஸ்வரன் வீதியில் 26 கிராம் 245 மில்லி கிராம் மாவா பாக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர் நல்லூரைச் சேர்ந்த 25 வயதுடைய நபர். விசாரணையின் போது யாழ்.ஐந்து சந்தியில் உள்ள கடை ஒன்றில், மாவா பாக்கைக் கொள்வனவு செய்தார் என்று குறித்த நபர் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4,107)

# விடுவிக்கப்பட்ட பகுதியில் பயன்தரு மரங்கள் களவு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4
வலி. வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயன்தரு மரங்கள் களவாக வெட்டப்பட்டு வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தொடர்ச்சியாக இந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வலி.வடக்கில் 201 ஏக்கர் நிலப்பரப்பு கடந்த மாதம் 25ஆம் திகதி மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் காணிகளைப் பார்வையிட்டு அவற்றைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

விடுவிக்கப்பட்ட பிரதேசத்தைச் சாராத, வேறு இடங்களில் இருந்து வரும் நபர்கள், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும் பயன்தரு மரங்களை வெட்டிச் சாய்த்து வருகின்றனர். பெரிய மரங்களையும் அந்தப் பகுதியில் வைத்தே வெட்டி, அதனைத் துண்டாடி வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர். விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இடிந்த நிலையில் காணப்படும் வீடுகளை உடைத்து அதிலிருக்கும் இரும்புக் கம்பிகளையும் வெட்டி எடுத்துச் செல்கின்றனர்.

விடுவிக்கப்பட்ட பகுதியில் உடனடியாகத் தங்கியிருக்க முடியாத நிலமை காணப்படுகின்றது. பொதுமக்கள் தினமும் காலையில் வந்து மாலையிலேயே செல்கின்றனர். பொதுமக்கள் இல்லாத நேரங்களில், சிறிய ரக வாகனங்களில் வருவோரே இந்தத் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திருட்டுக்களைத் தடுப்பதற்குப் பொலிஸார் உரிய நடவடிக்கைகள் எடுக்க வில்லை என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

(ற-ஐ-5)

# சிறுமியை தாயாக்கியவருக்கு 13 வருடங்கள் கடூழியச்சிறை

அம்பாறை, ஜூலை 4
பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்ந்து தாயாக்கிய இரு பிள்ளைகளின் தந்தைக்கு 13 வருடங்கள் கடுழியச் சிறைத் தண்டனையும், தண்டமும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா நட்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என்றும் மேல்நீதிமன்று உத்தரவிட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் கடந்த வாரம் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

கன்னங்குடா பாவக்கொடிச் சேனையைச் சேர்ந்த பொன்னம்பலம் திருச்செல்வம் என்னும் இரு பிள்ளைகளின் தந்தைக்கு எதிராக 2013ஆம் ஆண்டு 6 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன.

பாடசாலைக்குச் செல்லும் குறித்த சிறுமியை மாடு மேய்க்கும் தொழில் புரியும் திருச்செல்வம் 2011ஆம் ஆண்டு வன்புணர்ந்தார். அதன் பின்னரும் பல தடவைகள் வன்புணர்ந்தார்.

சம்பவம் இடம்பெற்று 6 மாதங்களின் பின்னர் சிறுமியின் உடல் நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு சம்பவம் தெரிய வந்தது. பொலிஸாருக்கும், சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிரி கைது செய்யப்பட்டார். வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

எதிரியானவர் தன்னைச் சுற்றவாளி என்று எதிரிக் கூட்டிலிருந்து விசாரணையின்போது தெரிவித்த போதிலும், அது விசாரணை மூலமாக நிராகரிக்கப்பட்டது. எதிரி மீது சுமத்தப்பட்டிருந்த ஆறு குற்றச்சாட்டுக்கள் தொடர் பிலும் கவனத்தில் கொண்ட மேல் நீதிமன்று முதலிரு குற்றச்சாட்டுகளுக்கும் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்பு வழங்கியது.

ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான காலப் பகுதி பற்றி சாட்சியத்தில் மன்றுக்குச் சந்தேகமிருக்கின்றது என்று கூறி அந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து எதிரி விடுதலை செய்யப்படுகின்றார் என்று தீர்ப்பின்போது தெரிவிக்கப்பட்டது.

முதலாவது குற்றச்சாட்டுக்கு 3 வருடங்கள் கடூழியச்சிறைத்தண்டனையும், 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. தண்டம் செலுத்தத் தவறினால் மேலதிகமாக ஆறுமாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். வன்புணர்ந்த இரண்டாவது குற்றச்சாட்டுக்கு பத்து வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபா தண்டமும் விதித்ததுடன், சிறுமிக்கு இரண்டு லட்சம் ரூபா நட்ட ஈடு வழங்கவேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

தண்டம் கட்டத் தவறினால் ஆறுமாதங்கள் கடூழியச்சிறைத் தண்டனையும், நட்ட ஈடு கட்டத் தவறினால் இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் மேலதிகமாக அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவித்தார்.

தண்டனைகள் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-4,30)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

அளவெட்டி, ஜூலை 4
கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் நாளை முற்பகல் 9.30 மணிக்கு ஒறேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் ஸ்கந்தவரோதயன் எம்.செல்வஸ்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக எஸ்.குமாரபாலன் கலந்து கொள்வார். (ற-ஐ-36)

# நிலத்தின் கீழிருந்து தோன்றிய லிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
மூளாய் வேரவில் பகுதியில் நிலத்தின் கீழ் இருந்து சிவலிங்கம், நாகபாம்பு ஆகியவற்றின் உருவம் தோன்றியுள்ள அதிசயம் ஒன்று இடம்பெற்றுள்ளது என மக்கள் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்தது என்று கூறப்படுகின்றது.

தனியார் வீடு ஒன்றின் காணிக் குள் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், பாம்பு போன்ற உருவத்தின் தலை தெரிவதை அவதானித்து அந்த உருவத்தைத் தோண்டிய போது ஐம்பொன்னாலான நாகபாம்பு ஒன்று தோன்றியது. சிறுவர்கள் பெரியவர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

பெரியவர்கள் பாம்பு உருவம் தோன்றிய கிடங்கை மீண்டும் சோதனையிட்ட போது, அதனுள் இருந்து சிமெந்தினாலான 2 அடி உயரமுடைய சிவலிங்கம் ஒன்றும் தோன்றியது என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

இடத்தின் உரிமையாளர் வெளிநாட்டில் உள்ளார் என்றும் அவரால் இந்த லிங்கம் மற்றும் நாகபாம்பு அங்கு வைத்து வழிபட்டிருக்கக்கூடும். காலப்போக்கில் இவை மண்ணினுள் புதையுண்டிருக்கலாம் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

(ற-ஐ-21)

## பொங்கல்விழா

யாழ்ப்பாணம், ஜூலை 4
ஒட்டுசுட்டான் பெரிய இத்திமடு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல்விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 11 மணிக் விசேட அபிசேகம் நடைபெற்று, இரவு பொங்கல் விழாவும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ற-ஐ-ரி)

# நீர்வேலி கரந்தன் வீதியை புனரமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 4
போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு சேதமடைந்துள்ள நீர்வேலி கரந்தன் வீதியை விரைவாகப் புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார்.

ஊரெழுவில் இருந்து கரந்தன் சந்திக்கு இடைப்பட்ட 600 மீற்றர் நீளமான வீதியை முதற்கட்டமாக புனரமைப்பதற்கான ஏற்றநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வீதி புனரமைக்கப்படும்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன், வீதியை எதிர்வரும் மாரிகாலத்துக்கு முன்னர் புனரமைக்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-17)

# கடலாமை வைத்திருந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4
கடலாமை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 50 வயதுடைய குறித்த நபர் சுழிபுரத்திலிருந்து இளவாலை பனிப்புலத்துக்கு ஆமையை எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டார். ஆமையும் கைப்பற்றப்பட்டது.

ஆமையை நீதிமன்ற உத்தரவு பெற்றபின்னர், ஆழ் கடலில் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறித்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-4,109,107)



வவுனியாவில் ரயில் கடவை பாதுகாப்பு ஊழியர்களுடைய கவனவீர்ப்புப் போராட்டத்தால் நேற்றுக் காலை ரயில் கடவைகள் பாதுகாப்பற்றுக் காணப்பட்டன. சில ரயில் கடவைகளுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். (ற-ஐ-21)

## தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
வண்ணை அங்குசபாச (கீரிப்பிள்ளையார்) விநாயக ஆலயத்தின் தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் ஆகியவற்றைத் தொடர்ந்து வெளிவீதியுலா இடம்பெறும். நாவலர் வீதி, காங்கேசன்துறை வீதி, சிவன் வடக்கு வீதி, மானிப்பாய் வீதி, உபதபாற் கந்தோர் ஒழுங்கை வழியாக வெளி வீதியுலா வந்து மீண்டும் நாவலர் வீதியை அடைந்து ஆலயத்தை வந்தடைவதுடன் வீதியுலா நிறைவுறும். (ற-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. (ற-ஐ-9)

## மென்பானம் அருந்திய மாணவிக்கு ஒவ்வாமை

சாவகச்சேரி, ஜூலை 4
மென்பானம் (சோடா) அருந்திய 7 வயது மாணவி, ஒவ்வாமை ஏற்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"மகளுக்கு ஒரு கடையில் சோடாவும், றோலும் வாங்கிக் கொடுத்தோம். கடையை விட்டு வெளியே வந்த போது திடீரென முகம் உட்பட உடல் முழுவதும் தடித்து பாதம் வரை கடிக்கின்றது என்று தெரிவித்தார். உடனே வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம்" என்று மாணவியின் தாயார் தெரிவித்தார். மாணவிக்கு உடலில் ஒவ்வாமை ஏற்பட்டு உடல் முழு வதும் வீக்கம் ஏற்பட்டதுடன் கடியும் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவர் தெரிவித்தார். (ற-ஐ-9)

## கஞ்சா நுகர்ந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணம் சின்ன முகைதீன் வீதியில் கஞ்சா நுகர்ந்து கொண்டிருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் ஒருவரிடமிருந்து 6.79 மில்லிகிராம் கஞ்சாவும், மற்றொருவரிடமிருந்து 1.49 மில்லிகிராம் கஞ்சாவும் மீட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளி காதி அபுபக்கர் வீதியைச் சேர்ந்த 21, 25 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டனர். இருவருக்கும் எதிராக யாழ். நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-107)

# சந்திகளில் கூடுவோர் இனி எச்சரிக்கையின்றிக் கைது

### வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
வதிரிச்சந்தி உட்பட வடமராட்சியின் சந்திகளிலும் தேவையின்றி ஒன்று கூடுபவர்களுக்கு இனிமேல் எச்சரிக்கை இல்லை. கைது செய்து நேரடியாக நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள்.

இவ்வாறு வடமராட்சிக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம். ஜவ்பர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:
எச்சரிக்கையையும் மீறி ஒன்று கூடுபவர்கள் சிறைக்கம்பிகளுக்கு பின்னால் இருக்கத் தயாராக இருக்கவேண்டும்.

வீதிகளில் - சந்திகளில் சைக்கிள்களுடனும், மோட்டார் சைக்கிள்களுடனும் காரணமில்லாது நிற்கும் குறித்த குழுவினர் அந்த வழியாகச் சென்றுவரும் பெண்களுடன் தகாத வார்த்தைகளில் பேசுவது, மோட்டார் சைக்கிள்களில் பெண்களைப் பின்தொடர்வது உள்ளிட்ட தகாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று பல மாதங்களுக்கு முன்னரே நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

வீதிகளில் நிற்பவர்களுக்கு அது பற்றிய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் போதுமானது. இனிமேல் அவர்களை நேரடியாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வதிரிச்சந்தி உட்பட வடமராட்சியின் எந்தச் சந்திகளில் யார் ஒன்று கூடினாலும், அவர்கள் கைது செய்யப்படுவார்கள். குறிப்பாகப் பாடசாலை தொடங்கும் மற்றும் நிறைவுறும் நேரங்களிலும், தனியார் கல்வி நிலையம் தொடங்கும் முடியும் நேரங்களிலும் குறிப்பிட்ட வீதிகளில் - சந்திகளில் ஒன்று கூடினால் கைது செய்யப்படுவர். அவர்கள் எந்த வயது, எந்தக் குடும்பம் என எந்தச் சலுகைகளும் காட்டப்பட மாட்டாது.

பெண்பிள்ளைகளும் தமக்கு வீதிகளில் ஏதாவது இடையூறுகள் தொந்தரவுகள் ஏற்பட்டால், பெற்றோர் ஊடாகத் தனிப்பட எனக்கு அறியத் தர முடியும். உடன் நடவடிக்கை எடுக்கப்படும். எச்சரிக்கையை மீறி ஒன்று கூடினால் சிறைக்குள் இருக்கத் தயாராக இருங்கள். இதற்காக பொலி ஸாரால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன-என்றார். (ற-ஐ-4,109)

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 4
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினமும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரியின் அதிபர் எம்.இந்திரபாலா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்... 

# பயிர்களை அழிக்கும் குரங்குகளை கட்டுப்படுத்தக் காற்றுத் துப்பாக்கி

### விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன

முல்லைத்தீவு, ஜூலை 4
குரங்குகளால் ஏற்படும் பயிரழிவுகளைக் கட்டுப்படுத்த விவசாய அமைப்புகளுக்குக் காற்றுத் துப்பாக்கி வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒட்டுசுட்டான் கமநலசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகள் பறவைகளாலும், விலங்குகளாலும் பயிர்களுக்கு பெரும்நட்டமடைந்து வருகின்றனர்.

விவசாயச் செய்கையின் பின்னர் வயல்களுக்கு, தோட்டங்களுக்கு வரும் குரங்குகள் பயிர்கள்களைப் பிடுங்கி நாசமாக்குகின்றன. "விவசாய நடவடிக்கையின் போது பெருமளவு நட்டம் ஏற்படுகின்றது. குரங்குகளை விரட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் அண்மையில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர்களிடம் கோரியிருந்தனர்.

இது தொடர்பாக ஆராய்ந்த இணைத்தலைவர்கள், "விவசாயிகளுக்கு குரங்குகளை விரட்டும் காற்றுத் துப்பாக்கிகளை வழங்கலாம். ஆனால் அதை வைத்து கொண்டு சமூக விரோத செயல்களும் இடம்பெறுவதற்கான சந்தர்பங்களும் உண்டு. காற்றுத் துப்பாக்கிகளை வழங்கும்போது அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்தே வழங்க முடியும்" என்று தெரிவித்தனர்.

காற்றுத் துப்பாக்கிகள் வைத்திருப்பதற்கான அனுமதிகளை பொலிஸார் வழங்க வேண்டும் என்றும், அவற்றைவிவசாய அமைப்புகளுக்கு வழங்கினால் எந்தப் பிரச்சினைகளும் ஏற்படாது என்றும் விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

கமக்கார அமைப்புகளுக்கு குரங்குகளை விரட்டும் காற்றுத் துப்பாக்கி வழங்கப்படும் என்றும் இதை யார் எப்போது பயன்படுத்துகின்றார்கள் என்ற விவ[illegible] வைத்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காற்றுத்துப்பாக்கிக்கான அனுமதியை வழங்குமாறு பொலிஸாரிடமும் கேட்டுக் கொண்ட இணைத்தலைவர்கள், காற்றுத் துப்பாக்கியை வழங்குவதற்கு சம்மதித்தனர். "எமது பகுதியில் உள்ளசிலவிவசாயிகளுக்கு நாங்கள் காற்றுத்துப்பாக்கிகளை வழங்கியுள்ளோம். தங்கள் பயிர்களை பாதுகாக்க காற்றுத்துப்பாக்கி தேவை எனக் கருதுபவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். - என்று ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-ஐ-21,ரி7,500)



## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

தென்மராட்சி, ஜூலை 4
சாவகச்சேரி பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழாவும், பரிசளிப்பும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றன. சாவகச்சேரி, கைதடி, மட்டுவில் ஆகிய குடும்ப முன்பள்ளிகளிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில், வெற்றியீட்டிய மாணவர்கள் பிரதேச விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச பதிவுகாரர் க.மோகனராஜலிங்கமும், சிறப்பு விருந்தினராக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகமும் கலந்து கொண்டனர். (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் நிதி அமைச்சரின் பரிந்துரையில் மத்திய வங்கியின் ஆளுநர் நியமனம்

கொழும்பு, ஜூலை 4

பதில் நிதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்த்தனவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடு திரும்பாத நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டது. பதில் நிதி அமைச்சர் பரிந்துரை வழங்கியதால் ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நியமனம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நீண்ட இழுபறி இருந்தது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலையில் திடீரென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அபிவிருத்தி மூலோபாய, பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரை ஜனாதிபதி மைத்திரிபால சந்தித்தார். மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியை நியமிக்கத் தான் தீர்மானித்துள்ளார் என அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்தார். தனது அமைச்சில் ஆலோசகராக இருக்கும் இந்திரஜித் குமாரசுவாமியை விடுவிக்க அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் ஒப்புதல் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜுன மகேந்திரன் பதவியேற்றார். அவர் பின்னர் பிணைமுறி தொடர்பான சர்ச்சையில் சிக்கியிருந்தார். அதுபற்றிய விசாரணைகள் முடியும்வரை அவரை மீண்டும் பதவியில் அமர்த்துவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால முடிவெடுத்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரையே மீண்டும் பதவியில் அமர்த்தத் திட்டமிட்டிருந்தார். அதற்கு ஜனாதிபதி ஆதரவளிக்கவில்லை. தற்காலிக ஆளுநராக சரித்த ரத்வத்தையை நியமிக்க ரணில் விக்கிரமசிங்க யோசனை முன்வைத்தார்.

இதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கவில்லை. இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்ட 5 பேரின் பட்டியலைப் பிரதமர் ரணிலுக்கு, மைத்திரி அனுப்பி வைத்தார். அவர்களில் ஒருவரின் பெயரைப் பரிந்துரைக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரினார். அதற்கான பரிந்துரைகள் ஏதும் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைக்கவில்லை.

நாணயச் சட்டத்தின் கீழ், இந்திரஜித் குமாரசுவாமியை மத்திய வங்கி ஆளுநராக நியமிக்க மைத்திரிபால முடிவு செய்தார். பதில் நிதி அமைச்சரான லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன அதற்குப் பரிந்துரைத்தார்.

நிதியமைச்சரே இந்தப் பரிந்துரையைச் செய்யவேண்டும் என்று கருதப்பட்டது. நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, வெளிநாடு சென்றிருந்தார். இந்த நிலையில், இது தொடர்பான முன்னணி சட்டவாளர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. பதில் நிதியமைச்சருக்கு பரிந்துரைக்கும் அதிகாரம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கினார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அரச தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், பிரதமருடன் ஆலோசித்து, நிதியமைச்சரின் பரிந்துரையுடன் மத்திய வங்கி ஆளுநரை ஜனாதிபதி நியமிப்பார் என்று கூறப்பட்டிருந்தது. மத்திய வங்கி ஆளுநர் நியமனத்துக்கு நிதியமைச்சரின் பரிந்துரை அவசியம். நிதியமைச்சர் வெளிநாடு சென்றதால், அவர் நாடு திரும்பியதும் இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்த அறிக்கை வெளியான சில மணிநேரங்களில், அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் ரங்க கலன்சூரிய, ஊடகங்களைத் தொடர்பு கொண்டு இந்த அறிக்கையைப் பிரசுரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

அந்த அறிக்கை ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெறாமல் வெளியிடப்பட்டது என்றும் அவர் கூறியிருந்தார். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஊடக அமைச்சின் செயலர் நிமால் போபகே இந்த அறிக்கை தகவல் திணைக்களத்தால் வெளியிடப்படவில்லை என்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை பிரதமரின் செயலகத்தில் இருந்து, தொலைபேசி மூலம் அழைக்கப்பட்ட நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என்று கேட்கப்பட்டார். ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க பீஜிங் சென்றிருந்த அவர், அங்கிருந்து நிதியமைச்சர்களின் கூட்டத்தில் பங்கேற்க ரோக்கியோ சென்றிருந்தார்.

ரோக்கியோவில் இருந்த ரவி கருணாநாயக்கவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என்றும் அவசியம் கொழும்பில் இருக்கவேண்டும் என்றும் கூறினார்.

இதையடுத்து அவர் தனது பயணத்தை இடைநிறுத்தி விட்டு நாடு திரும்பத் திட்டமிட்டார். மத்திய வங்கியின் புதிய ஆளுநர் நியமிக்கப்பட்ட நிலையில், அவரை அவசரப்பட்டு வரவேண்டாம் என்று பின்னர் தகவல் வழங்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை முற்பகல் 11.46 மணியளவில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ருவிட்டரில், ஒரு வரித் தகவல் ஒன்றை வெளியிட்டார்.

அடுத்த சில மணித்தியாலங்களில், மத்திய வங்கியின் புதிய ஆளுநரை நியமிக்கவுள்ளேன் என்று அவர் அதில் கூறியிருந்தார். 70 மணித்தியாலங்கள் கழித்தே புதிய ஆளுநர் நியமனம் தொடர்பான அறிவிப்பு அவரால் வெளியிடப்பட்டது.

(ற-ஐ-5)



# கடும்போக்கு பௌத்த தேரர்கள் மியன்மாரில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜூலை 4

பன்னாட்டு ரீதியில் இடம்பெறும் முஸ்லிம் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள 'பன்னாட்டு பௌத்த ஒத்துழைப்பு அமைப்பு' தொடர்பான பூர்வாங்கப் பேச்சு கடந்த முதலாம் திகதி மியன்மாரில் நடைபெற்றது. இவ்வாறு பொதுபல சேனா சார்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இந்தப் பேச்சு மியன்மாரின் சர்ச்சைக்குரிய இஸ்லாமிய விரோத கடும்போக்கு பௌத்த அமைப்பின் தலைவர் அசின் விராது தேரருக்கும், மியன்மாருக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையின் கடும்போக்கு அமைப்பான பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கும் இடையே நடந்துள்ளது.

வட மியன்மாரில் நடைபெற்ற கடும்போக்கு பௌத்த அமைப்பின் கூட்டத்திலும் ஞானசார தேரர் உரையாற்றினார். (ற-ஐ-5)

# முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் ஞானசாரர் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 4

முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் விதத்தில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உரையாற்றினார். அவர் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் நிந்திக்கும் வகையில் தெரிவித்த கருத்து பலத்த கண்டனத்தை ஏற்படுத்தியுள்ளது. அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கடந்த 21 ஆம் திகதி மகியங்கனையில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் விதத்தில் உரையாற்றினார். அது, குறித்த பிரதேசத்தில் அச்சத்தைத் தோற்றுவித்தது.

ஆகவே இந்த விவகாரம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முஸ்லிம் கவுன்சில் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தது. அந்தக் கடிதம் தொடர்பில் ஞானசார தேரர் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோது "முஸ்லிம் கவுன்சில் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதியொன்றை நபி(ஸல்) அவர்களூடாக அல்லாஹ்வுக்கு அனுப்பட்டும்" என்று தெரிவித்திருந்தார்.

அவர் இவ்வாறு இஸ்லாத்தை நிந்திக்கும் வகையில் வெளியிட்ட கருத்துக்கள் முஸ்லிம் சமூகம் உட்பட பல்வேறுபட்ட தரப்பிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. ஞானசார தேரர் முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்துக்கும் எதிராகத் தொடர்ந்து தெரிவிக்கும் கருத்துக்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், எம்.எச்.ஏ.ஹலீம் ஆகியோர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக ஆர்.ஆர்.டி அமைப்பு பொலிஸ் மா அதிபரிடம் மூன்று முறைப்பாடுகளை முன்வைத்தது. அந்த மூன்று முறைப்பாடுகளும் பொலிஸ் மா அதிபரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரர் வெளியிட்டுள்ள மத நிந்தனைக் கருத்துகள், அதனைத் தொடர்ந்து எழுந்துள்ள அதிர் வலைகள் தொடர்பில் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச்.ஏ. ஹலீம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியபோது இந்த விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார். (ற-ஐ-5)

# சம்பூர் மின் நிலையம் குறித்து இலங்கை அறிவிக்கவில்லை

### இந்திய மின்சக்தி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 4

சம்பூரில் அனல்மின் நிலையத்தை அமைக்கும் விடயத்தில் இலங்கை அரசு சுற்றுச் சூழலில் கரிசனை செலுத்தியுள்ளது. இயற்கை திரவ எரிவாயு மின் நிலையத்தை அமைப்பதா அல்லது அனல் மின் நிலையத்தை அமைப்பதா என்பது குறித்து இலங்கை இன்னமும் இந்தியாவுக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை.

இந்தியாவின் மின்சக்தி அமைச்சின் செயலாளர் பி.கே.புஜாரி இந்தத் தகவலை வெளியிட்டார்.

அனல்மின் திட்டத்தால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படும். இதன் காரணமாக உள்நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையே முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. அதற்குப் பின்னரே இந்தியா இந்தத் திட்டத்



கோப்புப்படம்

துக்கான ஒத்துழைப்பை வழங்க முடியும் -என்று அவர் தெரிவித்தார்.

இயற்கை திரவ எரிவாயு மின் திட்டம் இலங்கை போன்ற நாடுகளுக்குப் பயனளிக்காது என்று இந்தியாவின் தேசிய அனல்மின் நிறுவனத்தின் தலைவர் குர்தீப் சிங் தெரிவித்தார்.

உலக சந்தையில், எரிவாயு விலை தளம்பலாக உள்ளது. எரிவாயு மின் திட்டத்தை செயற்படுத்த 10 ஆண்டுகள் ஆகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-ஐ-5)

## பதவியிலிருந்து விலகேன் -ஹந்துன்நெத்தி

கோப் குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை என்று அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் கோப் குழு மேற்கொண்ட விசாரணைகளின் போது, அழுத்தங்கள் வந்ததால் சுனில் ஹந்துன்நெத்தி கோப் குழுவிலிருந்து விலகப் போகின்றார் என்று ஹெல உறுமய கட்சியின் மாகாண சபை உறுப்பினர் நிசாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்திருந்தார். (ற-ஐ-5)

# கூட்டு எதிர்க்கட்சி அமர்வில் கலந்துகொள்ளாத மகிந்த

கொழும்பு, ஜூலை 4

பதுளையில் ஆரம்பமான கூட்டு எதிர்க்கட்சியின் மூன்று நாள் கலந்துரையாடலில் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச பங்கேற்கவில்லை. கூட்டு எதிர்க்கட்சியால் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய அரசியல் முன்னணியை பிரபலப்படுத்தும் வகையில் இந்த அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில் கூட்டு எதிர்க்கட்சியின் 52 உறுப்பினர்கள் பங்கேற்றனர். கூட்டு எதிர்க்கட்சி எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் புதிய சின்னத்தில் போட்டியிடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார பதுளை அமர்வில் வைத்து கொழும்பின் ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

பதுளை அமர்வு முடிந்த பின்னர் இதேபோன்ற அமர்வுகள் ஏனைய பகுதிகளிலும் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயல் நாடுகளுடனான உறவை வலுவாக்க தெலுங்கானா விருப்பம்

கொழும்பு, ஜூலை 4
இலங்கை உள்ளிட்ட அயல் நாடுகளுடன் சுற்றுலா, சுகாதாரம், சமூகத் துறை போன்றவற்றில் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள அக்கறை கொண்டுள்ளோம். இவ்வாறு இந்தியாவின் தெலுங்கானா மாநில அரசு தெரிவித்தது.

இலங்கையில் இருந்து சென்றிருந்த 15 ஊடகவியலாளர்களைக்கடந்தவெள்ளிக்கிழமை ஹைதராபாத்தில் உள்ள மாநில தலைமைச் செயலகத்தில் சந்தித்த தெலுங்கானா மாநில தலைமைச் செயலர் ராஜீவ் சர்மா இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கும், தெலுங்கானாவுக்கும் இடையில் இருந்த பாரம்பரிய கலாசாரத் தொடர்புகள் குறித்தும் பாதுகாப்பு, விண்வெளி ஆராய்ச்சி, தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தொழில்துறை கேந்திரமாக விளங்கும் தெலுங்கானா மாநிலத்தின் சிறப்புகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது, மாநிலத் தலைமைச் செயலர் விளக்கமளித்திருந்தார்.

இலங்கையுடன் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகளையும், உறவுகளையும் வலுப்படுத்திக் கொள்ள தெலுங்கானா விரும்புகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆந்திரப் பிரதேசம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தெலுங்கானா மாநிலம் அண்மையில் உருவாக்கப்பட்டது.

ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு, இலங்கையின் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவை பீஜிங்கில் அண்மையில் சந்தித்து, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும் பேச்சு நடத்தினார்.

சந்திரபாபு நாயுடுவை இலங்கைக்கு வருமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சார்பில், அமைச்சர் மலிக் சமரவிக்கிரம அழைப்பு விடுத்தார்.

(ற-ஐ-5)

# புலம்பெயர் அமைப்பின் மாநாட்டில் பற்கேற்க சிங்கப்பூர் செல்வார் ரணில்

கொழும்பு, ஜூலை 4
தென் ஆசியாவின் புலம்பெயர் அமைப்பின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் செல்வார். இந்த அமர்வில் அவர் தலைமை உரையாற்றுவர்.

முன்னாள் நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவும் 'தெற்கு ஆசியாவில் சட்டம் மற்றும் சமாதானம்' என்ற தொனிப் பொருளில் உரையாற்றுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

பிராந்திய வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் கொள்கைகள் தொடர்பிலான சவால்களை வெற்றிகொள்ளும் நோக்கில் இடம்பெறவுள்ள இந்த அமர்வுகளில், சிங்கப்பூர் பிரதமர் உள்ளிட்ட பிராந்திய வர்த்தகர்கள், அரசியல்வாதிகள், கல்வி மற்றும் சிவில் அமைப்புக்களின் தலைவர்களும் கலந்து கொள்வர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:



சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு மற்றும் வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சின் கூட்டுறவில், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் தெற்கு ஆசிய கற்கைகள் நிறுவகத்தின் ஆதரவில், தெற்கு ஆசிய புலம்பெயர்ந்தோர் மாநாடு எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் றபிள் சிற்றி மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும்.

இந்த மாநாட்டுக்கென சுமார் ஆயிரம் புகழ் பெற்ற விருந்தினர்களும், இந்தப் பிராந்தியத்தின் முன்னணி அரசியல் வர்த்தக பிரமுகர்கள், கொள்கை வகுப்பாளர், புகழ்வாய்ந்த நூலாசிரியர்கள் விருது பெற்ற ஊடகவியலாளர்கள் மற்றும் கல்விமான்களும் ஒன்று திரள்வர்.

சிங்கப்பூர் மற்றும் தென்னாசியாவைச் சேர்ந்த பல அமைச்சரவை அமைச்சர்களும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளும் இதில் உரையாற்றுவர். முக்கிய உரையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றுவார். உரையாற்றுபவர்கள் '21ஆம் நூற்றாண்டில் ஆசியாவையும் பன்னாடுகளையும் பாதிக்கப்போகும்திருப்புமுனை விடயங்களான பூகோள பொருண்மியம் மற்றும் பூகோள அரசியல்' தொடர்பான தலைப்புகளின் கீழ் ஆய்வுரைகளையும், விவாதங்களையும் நடத்துவர்.

இந்த மாநாடானது குழுநிலை கலந்துரையாடல்கள், குறிப்பிட்ட நிகழ்வுகள் பற்றிய ஆய்வுகள் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளுக்கான வலையமைப்பு உருவாக்க அமர்வு என்பன அடங்குவதோடு, தற்போது தொழிற்றுறை எதிர்கொள்ளும் முக்கிய விடயங்களில் ஏற்பட்டிருக்கும் புதிய போக்குகள் மற்றும் நிகழ் காலமட்டத்துக்கு கொண்டு வருதலும் இடம்பெறும் - என்றுள்ளது.

(ற-ஐ-5)

# ஐ.எஸ். அமைப்புக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்

## பாதுகாப்புப் படையினருக்கு பாதுகாப்புச் செயலர் பணிப்பு

கொழும்பு, ஜூலை 4
"ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைப் பாதுகாப்பு படையினர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்."

இவ்வாறு பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை பங்களாதேஷில் உணவகம் ஒன்று தாக்கப்பட்டமை தொடர்பில் கருத்து கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. தெற்காசிய நாடானா பங்களாதேஷ் தாக்கப்பட்டுள்ளது இதுவே முதல் தடவை. இதன் கரணமாக இலங்கை மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்" - என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-5)

# சஜின் வாஸுக்கு வழங்கிய பாதுகாப்பை உடன் நீக்கவும்

## ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஜூலை 4
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ்குணவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை நீக்குங்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டார்.



சஜின்வாஸ்குணவர்தனவுக்கு தற்போது வரையில், முக்கிய பிரபுகளுக்காக வழங்கப்படும் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அதை நீக்குமாறு ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு உத்தரவிட்டார் என்று தகவல்கள் வெளியாகின.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் பதவி யில் இருந்த போது, சஜின் வாஸ் குணவர்தனவுக்கு இவ்வாறான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அதற்குச் சில தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந் தனர்.

தற்போது சஜின் வாஸ் குணவர்த்தன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற-ஐ-5)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு, ஜூலை 4
திக்வெல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 1.50 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த நபர் மீது சூடு நடத்தப்பட்டுள்ளது. திக்வெல்ல-ஊருகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரே உயிழந்தார்.

சடலம் தற்போது ரதம்பல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் திக்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ற-ஐ-5)

# அரச வைத்தியசாலைகளில் குருதிச் சோதனைக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 4
"எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள்தனியார்நிலையங்களில் குருதிப் பரிசோதனை செய்யும் நடைமுறை முற்றாகத் தடை செய்யப்படும்".

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். சுகாதார அமைச்சில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆய்வு கூடங்கள் இருக்கும் அனைத்து வைத்தியசாலைகளுக்கும் குருதியைப் பரிசோதிக்கும் இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற அனுமதிக்கப்படும் நோயாளர்கள் தனியார் நிலையங்களில் குருதிப் பரிசோதனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளிகள், தனியார் நிலையங்களில் குருதிப் பரிசோதனை செய்து கொள்வதை நிறுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-5)

# நீரில் மூழ்கி இருவர் சாவு

கொழும்பு, ஜூலை 4
மட்டக்களப்பில் இருவேறு பகுதிகளில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை - மதுரங்கேணிக் குளம் ஆற்றில் மூழ்கி இளைஞர் ஒருவர் உயிழந்தார். மீன் பிடிப்பதற்காக ஆற்றுக்குச் சென்ற 29 வயதான குறித்த இளைஞரே நீரில் மூழ்கினார்.

வாகரை – காயங்கேணி கடலில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த 45 வயதான ஒருவர் மேலும் சிலருடன் கடலுக்கு நீராடச் சென்ற போது நீரில் மூழ்கினார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-ஐ-5)

# சிகரெட்டுகளைப்பதுக்கிய வர்த்தகர் கைது

கொழும்பு, ஜூலை 4
நுகர்வோர் அதிகார சபையினர் மேற்கொண்ட அதிரடித் தேடுதல் நடவடிக்கைகளின்போது சிகரெட்டுகளைப் பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு-வனாமுல்ல பிரதேசத்தில் நுகர்வோர் அதிகார சபை மேற்கொண்ட தேடுதலின் போது சுமார் 64 ஆயிரம் சிகரெட்டுகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட வர்த்தகர் மாளிகாகந்த நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

நாட்டில் ஒரு சில இடங்களில் சிகரெட் பற்றாக் குறை நிலவி வருகின்றது. அவ்வாறான பிரதேசங்களில் சிகரெட் ஒன்று 50 ரூபா வரையில் விற்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

# வீதியை விட்டு விலகிய லொறியால் 18 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 4
கலா ஓயா-திஸ்பனபுர வீதியில் லொறி ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் 6 சிறுவர்கள் உட்பட 18 பேர் காயமடைந்தனர்.

தம்புத்தேகம பிரதேசத்தில் இடம் பெற்ற இசை நிகழ்வு ஒன்றில் கலந்துக் கொண்டு வீடு திரும்பிய நிலையிலேயே இந்த விபத்து இடம் பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த 18 பேரும் தம்புத்தேகம மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

படுகாயமடைந்த மூன்று சிறுவர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

லொறியின் சாரதி கல்னேவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், பொலிஸார் தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற்போனோர் விவகாரத்தில் உருப்படியாக எதுவும் கிடைக்குமா?

● காணாமற்போனோர் அலுவலகம் கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அமைய வேண்டும். குறித்த இந்த இரு மாவட்டங்களிலேயே அதிக அளவிலானோர் காணாமற்போயுள்ளனர் என்பதால் இந்த எமது கோரிக்கை நியாயமானது.

● அந்த அலுவலகத்துக்குப் பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற விசாரணையாளர்களையே பொறுப்பாளர்களாக நியமிப்பது அத்தியாவசியம்.

● விசாரணை மூலம், எமது பிள்ளைகளுக்கு ஏது நடந்தது என்ற முழு விவரமும் வெளிப்படுத்தப்பட்டாக வேண்டும்.

● விசாரணைகளை தடங்கல் இன்றி நடத்துவதற்கு தமிழ் சட்டத்தரணிகளையே கடமைக்கு அமர்த்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதி நிதிகளுக்கும் காணாமற்போகச் செய்யப்பட்டோரின் உறவினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பது வெளிப் படுத்தப்பட்டாக வேண்டும். அதற்கு விரைந்து தீர்வு கிடைக்காத பட்சத்தில், வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம் -- என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

காணாமற்போனோர், இல்லை இல்லை காணாமற்போகச் செய்யப்பட்டோரின் நிலைமை, அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கடந்த பல வருடங்களாக மூடி மறைத்து வந்த முன்னைய மகிந்த அரசும் அதே பாணியைக் கைக்கொள்ள முனையும் நல்லாட்சி அரசும், மோத கமும் கொழுக்கட்டையும் என்ற நிலையை ஒத்தவையே என்பதைக் காணாமற்போகச் செய்யப்பட்டோரின் உறவுகள் நன்கறிவர்.

மகிந்த அரசினால், அதன் பல அங்கங்களால், குறிப்பாகப் படைத் தரப்புகளால் தமிழ் இளைஞர்கள் காணாமற்போகச் செய்யப்பட்டார்கள் என்பது கல் மேல் எழுத்துப்போல் பதிந்துபோய் உள்ளது.

இது விவகாரத்தில் நல்லாட்சி அரசு, அரசியல் விளையாட்டு நடத்த முயலுமாயின், அது மகிந்த அரசுக்கு ஏற்பட்ட தலைவிதியை விடவும் கோரமானதாக அமையக்கூடும்.

அத்தகைய நிலையில், தமிழ் மக்கள் ஏமாற்றப்படும் போக்கு மீண்டும் உயர்ந்து எழும் என்று எதிர்பார்க்கலாம்.

இரண்டு தடவைகள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்த முந்தைய அரசு தமிழ் மக்களுக்கு அற்பசொற்ப சலுகைகளை கிள்ளித் தெளித்த நிலையை விடவும், அதலபாதாளத்துக்குள் தமிழ் மக்கள் தள்ளி வீழ்த்தப்படும் நிலையே உருவாகும் என்று எதிர்பார்க்கலாம்.

பாட்டும் நானே, பாவமும் நானே, பாடும் உனை நான் பாட வைத்தேனே - என்ற சினிமாப் பாடல் வரியில் நின்று நல்லாட்சி அரசு, ததிங்கிணத்தோம் போடுவதே மிஞ்சப் போகிறது...!



க.பாரதிராஜா

அனைத்துலக பொருளாதாரத்தை ஆட்டங்காணச் செய்து, சர்வதேச ரீதியில் இடம்பெறும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் ஸ்தம்பித நிலையை ஏற்படுத்தியுள்ளது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் பிரிட்டனின் தீர்மானம். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டுமா? கூடாதா? என்று பிரிட்டனில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் 52 சதவீத மக்கள் வெளியேற வேண்டும் என்றும், 48 சதவீத மக்கள் வெளியேறக் கூடாதென்றும் தமது வாக்குகளைப் பதிவுசெய்து மக்கள் தீர்ப்பை வழங்கியிருந்தனர்.

மக்கள் ஆணைக்கு மதிப்பளித்துள்ள பிரிட்டன் அரசு, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறத் தயாராகி வருவதுடன், பிரதமர் டேவிட் கமரூன் தமது பதவியைத் துறப்பதாகவும் அறிவித்துள்ளார். இந்த அதிரடிச் செயற்பாடுகளின் காரணமாக பிரிட்டன் அரசியலில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அத்துடன், பிரிட்டனின் நாணயமான ஸ்ரேலிங் பவுணினது பெறுமதியும் சட்டென வீழ்ந்துள்ளது. இவ்வாறான மாற்றங்கள் மற்றும் சறுக்கல்கள் காரணமாக மீண்டுமொரு சர்வஜன வாக்கெடுப்பையும் பிரிட்டன் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

பிரிட்டனின் இந்தத் தீர்மானம் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவ நாடுகளுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதும், பிரிட்டனை உடனடியாக வெளியேறுமாறு அந்த நாடுகள் தெரிவித்துள்ளன. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் விதிமுறைகளின்படி பிரிட்டன் அவ்விதம் வெளியேறுவதற்கு இரண்டாண்டுகள் தேவைப்படும் எனக் கூறப்படுகிறது. பிரிட்டனின் தீர்மானம் அரசியல், பொருளாதார, சமூக ரீதியிலான அனைத்துத் துறைகளிலும் ஐரோப்பாவில் மட்டுமல்ல அனைத்துலக ரீதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பங்குச் சந்தை வீழ்ச்சி கண்டுள்ளது. இது மூன்றாம் உலக நாடான இலங்கையின் பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் இரண்டாவது மிகப்பெரிய சந்தை பிரிட்டன்தான் (ஐக்கிய இராச்சியம்). பிரிட்டனின் இந்தத் தீர்மானத்தால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பில் இருந்து இலங்கையை பாதுகாப்பாக மீட்பதற்கான வழிவகைகள் குறித்து பிரதமர் ரணில் கவனம் செலுத்தி வருகின்றார்.

இந்த நிலையில், இலங்கையின் கடந்தகால ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதார நிலைமை, சர்வதேச பொருளாதாரத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலையால் ஏற்படவுள்ள பாதிப்புகள், அதைத் தவிர்க்க அரசு வகுக்கப்போகும் வியூகங்கள் என்பவை குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

2014 இல் 19, 417 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் இறக்குமதி செலவினமானது, 2.5 சதவீதத்தால் வீழச்சியடைந்து 18,

> நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் 8000 பில்லியனாக உள்ளது. இந்நிலையில், இலங்கையின் பங்குச் சந்தையில் 3 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்குலக நாடுகள் மீளப் பெற்றுள்ளன எனத் தெரிய வருகின்றது.

935 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளது என்று நிதி அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வருடாந்த தேசிய உற்பத்தியில் 76 சதவீதத்தை கடனுக்காக அரசு செலவிடுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் 8000 பில்லியனாக உள்ளது. இந்நிலையில், இலங்கையின் பங்குச் சந்தையில் 3 பில்லியன் பெறுமதியான முதலீடுகளை மேற்குலக நாடுகள் மீளப் பெற்றுள்ளன எனத் தெரிய வருகின்றது.

இதனால், 2016 இன் முதல் காலாண்டில் ஏற்பட்டுள்ள 5.5 சதவீத பொருளாதார வளர்ச்சியைத் தக்க வைப்பதில் அரசுக்கு சிக்கல் ஏற்படும்.

2014 இல் இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்ட தடையின் காரணமாக கிட்டத்தட்ட 200மில்லியன்அமெரிக்கடொலர் வருமானத்தை இலங்கை வருடாந்தம் இழந்து வருகின்றது. சுமார் 1, 500 தொன் மீன் உற்பத்திகளை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இலங்கை ஏற்றுமதி செய்தது. தற்போது இந்த மீன் ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டுள்ளதால் இந்த வருமானத்தை மீளப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு போன்ற தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அரசியல் ரீதியாக ஏற்பட்ட ஸ்திரத்தன்மை, தேயிலை, இறப்பர், தெங்கு ஏற்றுமதியிலும் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், வாசனைத் திரவியங்களான மிளகு, கராம்பு, சாதிக்கா போன்றவற்றின் ஏற்றுமதி வருமானம் 42.7




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் ஐரோப்பிய ஒன்றிய விலகலால் இலங்கை எதிர்நோக்கும் சவால்கள்!

சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 46 சதவீதம் பங்களிப்பு செலுத்தும் புடைவைமற்றும்ஆடைகள் ஏற்றுமதி வருமானம் 2.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியசந்தைக்கானஆடை ஏற்றுமதி வருமானம் 12.5 சதவீதத்தினால் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளது.



இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் (2013, 14 ஆண்டுகளின்அடிப்படையிலான கணிப்பு) 22 சதவீத ஏற்றுமதி வருமான அமெரிக்க சந்தையை மையமாகக் கொண்டுள்ளது. அமெரிக்காதான் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தின் முதலாவது மிகப்பெரிய சந்தையாகும். இதனூடாக இலங்கைக்கு 2.54 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கின்றது. இதற்கு அடுத்தபடியாக இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக பிரிட்டன் இருக்கிறது. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 10 சதவீதம் இங்கு ஏற்றுமதியாகின்றது. இதனூடாக இலங்கைக்கு 1.21 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைக்கின்றது.

இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 35 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், இதில் 10 சதவீத ஏற்றுமதி பிரிட்டனில் தங்கியுள்ளது. (அதாவது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான 100 சதவீத ஏற்றுமதியில் 40 சதவீதம் பிரிட்டனுக்கான ஏற்றுமதி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 28 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மொத்த ஏற்றுமதி வருமானம் கிட்டத்தட்ட 3 பில்லியனாக உள்ள நிலையில், அதில் சுமார் 1 பில்லியன் வருமானம் பிரிட்டனிலேயே தங்கியுள்ளது.

இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி சந்தையான பிரிட்டனில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகள் இலங்கையின் பொருளாதாரத்தில் நிச்சயமாக தாக்கம் செலுத்தும்.

எனவேதான் அதற்கான மாற்றுத் திட்டங்கள் குறித்து பிரதமரும், நிதி அமைச்சரும் திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளத. இதேவேளை, பிரிட்டனுடன் தனியான வர்த்தக உடன்படிக்கையொன்றை செய்துகொள்ளவுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் ஏற்பட்ட பதற்றமான நிலைமையை சமாளிப்பதற்கே பிரிட்டன்அரசு பெரும் திண்டாட்டத்திற்கு உள்ளாகியுள்ளது. பல தரப்பட்ட சிக்கல்களுக்கு மத்தியில், இலங்கையுடன் வர்த்தக உடன்படிக்கையொன்றை அவசரமாக செய்யவேண்டிய தேவை பிரிட்டனுக்கு இல்லை. பிரிட்டனின் தீர்மானத்தால் இலங்கைக்குத்தான் பாதிப்பு. எனவே, பிரிட்டனுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியதேவை இலங்கைக்கே உள்ளது. இதுபோன்ற நிலைமைகளை கருத்திற் கொண்டுதான் தனது அரசியல், பொருளாதார இராஜதந்திர மூளையை கசக்கிப்பிளிந்து, ஆசியபொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான திட்டத்தை வகுத்துள்ளார் பிரதமர் ரணில்.

இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர், கொரியா போன்ற ஆசிய நாடுகளுடனான பொருளாதாரத்தை வலுப்படுத்துவது குறித்து ஆராய விசேட குழுவொன்றையும் நிறுவவுள்ளதாகவும் பிரதமர் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே, இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் விடயத்தில் இந்தியா சீனா ஆகியவற்றுக்கு இடையேயான போட்டி நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. பிரதமரின் இந்த அறிவிப்பால் இலங்கையுடனான உறவை மேலும் நெருக்கமாக்க இரு நாடுகளும் போட்டிபோட்டிக் கொள்ளும் எனக் கருதலாம்.



இந்தியாவுடன் (எட்கா) தொழில்நுட்ப மற்றும் பொருளாதார இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்காக சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இவ்வாரம் இந்தியா செல்லவுள்ளார். இதேபோல, சீனாவுடன் கைச்சாத்திடத் திட்டமிடப்பட்டுள்ள அம்பாந்தோட்டை சுதந்திர வர்த்தக வலயம், துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி துறைமுக நகரம் (போட் சிட்டி) ஆகிய உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளையும் அரசு துரிதப்படுத்தி வருகின்றது.

ஆசிய நாடுகளுடன் வலுப்படுத்தும் ரணிலின் திட்டம் இந்திய - சீனாவின் ஆதிக்கப் போட்டியில் அது எப்படியான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதே சிந்தித்துப் பார்க்கவேண்டியதாயுள்ளது. இந்தியாவையும் - சீனாவையும் சமமாக அணுகிவரும் மைத்திரி - ரணில் தலைமையிலான தேசிய அரசு, மேற்படி இருநாடுகளுக்கும் சம அளவிலான முக்கியத்துவத்தையும் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது. பொருளாதாரத் தாக்கத்தை சமாளிக்க எடுத்திருக்கும் முடிவால் ஆசிய பிராந்தியத்தில் மேலும் வலுவடையப்போகும் இந்திய - சீன ஆதிக்கப் போட்டிக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவையும் பிரதமருக்குள்ளது. அதனை மிகச்சரியாகக் கையாண்டால் இலங்கையின் பொருளாதாரத்தில் தளம்பலின்றி முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என அரசு நம்புகிறது.

## மூத்த குடிமக்களது சிரமங்களைக் கணக்கில் எடுத்துச் செயற்படுமா அரசு

மகிந்த அரசினால் மூத்த குடி மக்களின் 25 லட்சம் ரூபா வரையிலான நிரந்தர வைப்புகளுக்கு 12% வட்டி வழங்கப்பட்டது. பின்னர் மைத்திரி அரசினால் அந்தத் தொகை 10 லட்சமாகக் குறைக்கப்பட்டு வட்டி வீதம் 15 % மாக அதிகரிக்கப்பட்டது. இந்த வட்டியில் ஒருபகுதியை அரசு ஈடு செய்யுமெனவும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

வைப்புத்தொகை 25 லட்சத்திலிருந்து 10 லட்சமாகக் குறைக்கப் பட்டதனால் பெறக்கூடிய வட்டி அரைவாசியாகக் குறைந்து. மூத்த குடிமக்களினது ஏனைய பொறுப்புக்களுடன் அவர்களது வைத்தியத்துக்கும் மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகை அவசியமாகின்றது. எனவே முன்னைய அரசு அறிமுகப்படுத்திய 25 லட்ச ரூபா வைப்பையும் 12 % வட்டியையும் தற்போதைய அரசும் தொடர வேண்டும்.

எவர் ஆட்சிக்கு வந்தாலும் இலங்கை அரசு பல்வேறு விதங்களிலும் வீணடிக்கும் பொதுமக்களின் நிதியைச் சரிவர மதிப்பிட முடியாது. உதாரணமாக தேவைக்கதிகமான அமைச்சர்கள், அவர்களுக்கான அலுவலகங்களுக்கான வாடகை, வாகனங்கள், நாடாளுமன்றச் சிற்றுண்டிச்சாலையில் வீணாகும்உணவுவகைகள், அங்குஉணவுப்பொருள்களுக்கான விலைகள் அளவுக்கதிகமாக குறைக்கப்பட்டுள்ளமை என்பவற்றைக் குறிப்பிடலாம். அரசின் வீண்விரயத்தை முழுமையாகக் கூற முற்பட்டால்அது தனியொருநூலாகிவிடும். ஆக அரசும் மூத்த குடிமக்களுடைய பண வைப்புகளுக்கு 12% அல்லது 15% வட்டி வழங்குவது நியாயத்துக்கு மாறானதல்ல.

மூத்த குடிமக்களின் வைப்பு நிதியை கடனாக வழங்கி, வங்கிகள் அதிக வட்டியை அறவிடுகின்றன. வரி செலுத்திய பின்னரும் வங்கிகள் கோடிக்கணக்கான ரூபாய்களை லாபமாகப் பெறுகின்றன.

இந்த லாபத்தில் இருந்து மூத்த குடிமக்களின் வைப்புக்களுக்கான வட்டியைச் செலுத்துவது வங்கிகளுக்குக் கடினமல்ல. இலங்கையில் வங்கிகளின் வரலாற்றில் பிரபலமானவர்களுக்கு வழங்கிய கோடிக்கணக்கான ரூபா அறவிட முடியாத கடனாகப் போய்விட்டது.

அரசியல் செல்வாக்கினால் வழங்கப்பட்ட இந்தக் கடன்களின் தொகையும் பெற்றவர்களின் பெயர்களும், மறைக்கப்பட்டுவிட்டன. சாதாரண பொதுமக்களுக்கு உதவும் வகையில் வங்கிகள் தமது செயற்பாடுகளை அமைத்துக்கொண்டிருந்தால், நிதிக் கம்பனிகளிடம் சிக்கி பொதுமக்கள் நெருக்கடிகளை எதிர் நோக்கியிருக்க மாட்டார்கள். பொது மக்களின் பணத்தினால் லாபமீட்டும் வங்கிகள் அவர்களையும் கவனத்தில்கொண்டு தமது செயற்பாடுகளை வகுக்க வேண்டும்.

*ஒரு வாசகன்.*

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஒஸ்ரியாவின் தென்பகுதியில் உள்ள கரித்தியா நகரில் உடல் ஓவியக் கண்காட்சி கடந்த வாரம் நடைபெற்றது. 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். கண் கவரும் வகையில் உடலில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. இந்த ஓவியக் கண்காட்சி 1998ஆம் ஆண்டில் இருந்து நடைபெறுகின்றது. (ற-ரி4)

# குப்பை எரிக்கும் திட்டத்துக்கு எதிர்ப்பு

பீஜிங், ஜூலை 4
சீனாவின் தென்பகுதியில் குப்பைகளை எரிக்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமது குடி தண்ணீர் மற்றும் வளி மாசு படுவதற்கு இது ஒரு காரணமாக அமையும் என்று அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வன்முறையில் ஈடுபட்டனர் என்றும் அதனால் பொலிஸாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது என்றும் கூறப்படுகின்றது.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரச கட்டடங்களை உடைக்க முயன்றனர். இதனைத் தடுக்க முயன்ற பொலிஸார் மீது மக்கள் தாக்குதல் நடத்தினர். பொலிஸ் தரப்பில் சிலர் காயங்களுக்கு இலக்காகி உள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
குறித்த திட்டத்தை அரசு நிரந்தரமாகத் தடை செய்யாது தற்காலிகமாக நிறுத்தியுள்ளது என்று சனிக்கிழமை அறிவிப்பு வெளியானது. அதைத் தொடர்ந்து தொலைபேசி அழைப்பின் ஊடாகவே மக்கள் ஒருவரை ஒருவர் தொடர்பு கொண்டு குறித்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் மக்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை. எத்தனை பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்பது குறித்து எதுவிதத் தகவல்களும் வெளியாகவில்லை. (ற)



# மனைவி மீதான ஆத்திரத்தில் 5 பேர் சுட்டுக் கொலை

## செர்பியாவில் சனியன்று அவலம்

பெல்கிறேட், ஜூலை 4
செர்பியாவின் வடகிழக்குப்பகுதியில் உள்ள உணவு விடுதிக்குள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் 5 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந் தனர். உணவு விடுதிக்குள் நேற்றுமுன்தினம் பகல் நுழைந்த இனந்தெரியாத நபர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். தன் மனைவி மீது உள்ள கோபத்திலேயே அவர் சுட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சூட்டுச் சம்பவத்தில் குறித்த நபரின் மனைவியும் இறந்தார்.
துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணைகள் மேற் கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி4)



# கருமுட்டை சேகரித்து 18 ஆண்டுக...

சீனாவில் பெண் ஒருவர் தனது கருமுட்டையை 18 ஆண்டுகள் உறை நிலையில் பாதுகாத்து அதன்மூலம் தற்போது குழந்தை பெற்றுள்ளார்.
ஜியாங்சு மாகாணத்தைச் சேர்ந்த 45 வயதுப் பெண்ணே இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். இவர் தனது கருமுட்டையை 1998 ஆம் ஆண்டு முதல் பாதுகாத்து வந்தார். கடந்த நவம்பர் மாதம் அந்தக் கருமுட்டை உயிரணுவுடன் கருக்கட்டப்பட்டு அவரது கருப்பையில் உட்புதிக்கப்பட்டது.
அண்மையில் அவர் 3.3 கிலோ எடையுடைய ஆரோக்கியமா... குழந்தையைப் பெற்றார். இது மருத்துவ உலகில் ஒரு சாதன... என்று கூறப்படுகின்றது. இவ்வாறு உட்புதித்தல் மூலம் குழந்தை... பிறந்துள்ளபோதும் இத்தனை நீண்ட ஆண்டுகள் சேமிக்கப்ப... முட்டை மூலம் குழந்தை பிறந்துள்ளமை இதுவே முதல் தட... யாகும்.

# கார்...
# 80
## பக்தாத...

பக்தாத், ஜூலை 4
ஈராக் தலைநகர் பக்தா...
டைக் கார்க் குண்டு வெ...
நடத்தப்பட்டன. அதில்...
உடல் சிதறி உயிரிழந்த...
பேர் காயமடைந்தன...
தாக்குதல்களுக்கு ஐ.எஸ்...
உரிமை கோரியுள்ளது.
கராடா பகுதிக்கு அன்...

# வாக்கெ...
# பிரிட்ட...



லண்டன், ஜூலை 4
ஐரோப்பிய ஒன்றியத்...
வெளியேறக் கூடாது ...
முன்தினம் மத்திய லன்...
நடத்தப்பட்டது.
அண்மையில் நடந்த ...
பிய ஒன்றியத்தில் இரு...
வேண்டும் என்று பெ...
வாக்களித்தனர்.
இந்த வாக்கெடுப்பு மு...
வித்து மக்கள் ஆர்ப்பா...
னர். நேற்முன்தினம் ந...
தில் ஆயிரக்கணக்கா...
டனர்.
"நாம் வாக்கெடுப்பு மு...
என்று வெளிப்படைய...
நாடாளுமன்றம் இறுதி ...
டும்" - இவ்வாறு ஆ...
கொண்டவர்கள் தெரி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ர்க் குண்டு தாக்குதல்கள்
# 0 பேர் சிதறிச் சாவு

## ாத்தில் ஐ.எஸ். வெறியாட்டம்

4
ர் பக்தாத்தில் இரட்
ண்டு வெடிப்புக்கள்
. அதில் 80 பேர்
யிரிழந்தனர். 200
டந்தனர். இந்தத்
கு ஐ.எஸ். அமைப்பு
ுள்ளது.
கு அண்மையில்
முதல் தாக்குதல் நடந்தது. அதில் 78 பேர் உயிரிழந்தனர். 200 பேர் வரையில் காயமடைந்தனர். கட்டடம் ஒன்று தரைமட்டமானது. 4க்கும் அதிகமான கட்டடங்கள் சேதமடைந்தன.
இரண்டாவது தாக்குதல் அல்–ஷாப் பகுதியில் உள்ள சந்தையில் நடந்தது. அதில் இருவர்



கொல்லப்பட்டனர். சிலர் காயமடைந்தனர்.
சியா முஸ்லிம்களை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குல்களை தாமே நடத்தினார்கள் என்று ஐ.எஸ். அமைப்பு தனது ருவிற்றர் பக்கத்தில் உரிமை கோரியுள்ளது. (ற–ரி4)

## வட பாகிஸ்தானில் கடும் மழை 28 பேர் சாவு

லாகூர், ஜூலை 4
வடக்கு பாகிஸ்தானில் பெய்யும் தொடர் மழையால் 28 பேர் உயிரிழந்தனர்.
ஆப்கான் எல்லையில் அமைந்துள்ள பக்டுன் காவா மாகாணத்தில் சிற்றல் மாவட்டத்தில் தொடர்ந்து கன மழை பெய்கின்றது. குறித்த பகுதி இரு நாடுகளின் எல்லைப் பகுதியாகும். மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் சிற்றல் மாவட்டத்தில் றொஷ் நகரில் அமைந்துள்ள பள்ளிவாசல் அடித்துச் செல்லப்பட்டது. இந்தச் சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
பல்வேறு இடங்களில் மேலும் 18 பேர் உயிரிழந்தனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். உயிரிழப்புகளின் எண்ணிக்கை உயர்வடையலாம் என அஞ்சப்படுகின்றது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ற–ரி4)

## கெடுப்பு முடிவை எதிர்த்து
## டனில் மக்கள் பேரணி



லை 4
ன்றியத்தில் இருந்து பிரிட்டன்
கூடாது என வலியுறுத்தி நேற்று
திய லண்டனில் பெரும் பேரணி

நடந்த வாக்கெடுப்பில் ஐரோப்
தில் இருந்து பிரிட்டன் வெளியேற
ன்று பெரும்பான்மையானோர்
ர்.
டுப்பு முடிவுக்கு எதிர்ப்புத் தெரி
ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்ற
தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்
ணக்கானோர் கலந்துகொண்

டுப்பு முடிவை எதிர்க்கின்றோம்
ப்படையாகக் காட்டியுள்ளோம்.
இறுதி முடிவை எடுக்க வேண்
ாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து
ர் தெரிவித்தனர்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மீள்வாக்கெடுப்பு வேண்டும் என்று 30 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கையொப்பமும் இட்டுள்ளனர்.
தமக்கு இந்த விடயத்தில் அரசியல் தலைவர்கள் போதிய விளக்கத்தைக் கொடுக்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
கூகுள் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் இது உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மக்களுக்கு இது விடயத்தில் போதிய விளக்கமின்மை காணப்படுகின்றது என்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் விடயத்தை மாத்திரம் கருத்திற் கொண்டு பெரும்பான்மையான மக்கள் வாக்களித்துள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறியதை அடுத்து பிரிட்டனின் நாணய மதிப்பு என்றுமில்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளது. (ற–ரி4)



## தென்சீனாவில் கடும் மழை

### 50 பேர் சாவு 12 பேர் மாயம்

பீஜிங், ஜூலை 4
தென்சீனாவில் கடந்த சில நாள்களாகப் பெய்யும் கடும் மழையால் 50 பேர் உயிரிழந்தனர். 12பேர் காணாமற் போயுள்ளனர். யாங்ரீஸ் ஆறு பெருக்கெடுத்துள்ளதால் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன.
கூபி மாகாணத்தில் 27 பேர் உயிரிழந்தனர். 12 பேர் காணாமல் போயினர். 4 லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேறினர். 15 ஆயிரம் வீடுகள் கடுமையாக சேதமடைந்தன. 5 லட்சம் ஹெக்டேயர் பயிர்ச் செய்கை நிலப்பரப்பு நீரில் மூழ்கியது. 850 மில்லியன் டொலர் அளவுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்தது.
குசோகு மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 23 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
சீனாவின் தெற்குப் பகுதியில்
கோடைக்கால பருவ ம
கிடைப்பது வழமை. இ
முறை அளவுக்கு அதிகமா
மழை வீழ்ச்சி கிடைத்துள்ள
அன்குய் மாகாணத்தி
வெள்ளப் பெருக்கு ஏற்பட்
ளது. பசுபிக் கடற் பரப்பில்
பட்டஎல்–நினோ விளைவின
இவ்வாறு இடம்பெற்ற
ஆபிரிக்கா, இந்தியா, பசு
பிராந்திய நாடுகள் இந்த
கங்களுக்கு இலக்காகி
ளன.
(ற–

## ிகளின் பின் குழந்தை

க்கியமான
ந சாதனை
ழந்தைகள்
மிக்கப்பட்ட
ல் தட வை
குறித்த பெண்ணுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்னரும் கரு உட்பதிக்கப்பட்டது. எனினும் அது தோல்வியடைந்தது. தற்போது முயற்சி வெற்றி யளித்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.
மலட்டுத் தன்மையைப் போக்க இது சிறப்பான செயன்முறை. அத்துடன் போதிய பொருளாதாரப் பின்னணியை உருவாக்கிய பின்னர் குழந்தைகளைப் பெற இவ்வாறு செய்யலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். (ற–ரி4)

## அலப்போ நகர் முற்றுகை

டமஸ்கஸ், ஜூலை 4
சிரிய அரச படைகள் அலப்போவை மீட்பதற்கான முயற்சியில் முன்னேற்றம் கண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த நகரின் அனைத்து வழிகளையும் அடைத்து அரச படைகள் முற்றுகையிட்டன. அதனால் நகரத்துக்குள் இருக்கும் கிளர்ச்சியாளர்களின் அனைத்து விநியோக மார்க்கங்களும் துண்டிக்கப்பட்டன.
முற்றுகைக்குள் சிக்கியுள்ள கிளர்ச்சியாளர்க
விரைவில் அடக்க முடியும் என்றும் சிரிய
படைகள் தெரிவித்தன.
நேற்றுமுன்தினம் இரவு வேளையில் நகரு
அண்மையாகவுள்ள முல்ஹா பகுதிகளில்
படைகளால் புதிய தாக்குதல்கள் பல முன்னெ
கப்பட்டன. அது அலப்போ நகரைப் பிரிக்
எல்லையாக விளங்கும் விவசாய நிலப்பகு
கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள்



(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 9 குறித்த விவரங்களின் தொடர்ச்சி கீழே பிரசுரமாகின்றது.)

**சிறப்புப் பலன்கள்**

எண்களில் இறுதியானது இந்த எண் தான். எந்த எண்ணுடன் சேர்ந்தாலும், தன் இயல்புக் குணத்தை இழக்காதது இந்த எண்தான். 3 எண்ணுடன் 9 சேர்ந்தால் 12 கிடைக்கும். மீண்டும் கூட்டினால் 3 என்ற எண்ணே மீண்டும் கிடைக்கும். எனவே 9 எண் காரார்கள் மற்ற எண்காரார்களுடன் சேர்ந்து செயற்பட்டுத் தங்களின் இயல்புக்கு ஏற்றவாறு அவர்களை மாற்றிவிடும் திறமை படைத்தவர்கள். இவர்கள் தீவிரமான மனப்போக்கும், தைரியமான செயற்பாடும் கொண்டவர்கள். எந்த முயற்சியையும் திட்டமிட்டு, அதன்படியே செயற்படுவார்கள். எத்தகு சோதனைகள் வந்தாலும், அவைகளைத் துணிவுடன் சந்தித்து வெற்றி பெறுவார்கள். மற்றவர்கள் இவர்களை அலட்சியம் செய்தால் உடனே தட்டிக் கேட்பார்கள். மனதில் எப்போதும் தைரியம், தன் னம்பிக்கை உள்ளவர்கள். தவறுகளைக் கண்டால் உடனே தட்டிக் கேட்கவும் தயங்கமாட்டார்கள்.

எதையும் திட்டமிட்டு, நேரம், காலம் பார்த்துத் தங்களது காரியங்களை நடத்திக் கொள்வார்கள். ஆனால் இவர்கள் எதையும் போராடித்தான் பெற வேண்டும். இவர்களது பேச்சில் எப்போதும் வேகமும், அதிகாரமும் உண்டு. பயம் என்பது இருக்காது. செவ்வாய்க் கிரகம், தேவர்களுக்குத் தளபதியாவார்.

எனவே இவர்களுக்குச் சண்டையிடும் மனோபாவம் இயற்கையிலேயே அமைந்துவிடும். குருதி, விபத்து, கொலை போன்ற சம்பவங்களிலும் எல்லாம் துணிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்வார்கள். வேகம், சக்தி, அழிவு, போர் என்பவற்றின் எண் இது. ஆற்றல், ஆசை, தலைமை தாங்குதல் ஆதிக்கம் செலுத்தல் போன்ற குணங்கள் இவர்களிடம் இருக்கும். எதையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சிந்திக்க மாட்டார்கள்.

விரைவி லேயே ஒரு முடிவு எடுத்து அதை நிறைவேற்றுவதில் வேகம் காட்டுவார்கள். பலருக்கு உடலில் காயங்களும், சிறு விபத்துக்களும் ஏற்படும். பெரும்பாலோர் போர் வீரர்கள், காவல் துறை போன்ற கடினமான துறைகளிலும் புகழ் பெற்று விளங்குவார்கள்.

இவர்கள் நிதானம் குறைந்தவர்கள். உணர்ச்சிவசப்படுபவர்கள், பிறருக்கு அடங்கி நடக்க முடியாதவர்கள். பகைவர்களை இவர்களே உருவாக்கிக்கொள்வார்கள். பல சமயங்களில் இவர்களது பேச்சே இவர்களுக்குப் பல சண்டைகளைக் கொண்டு வந்துவிடும். பங்குச்சண்டை, மனைவி குடும்பத்தாருடன் சண்டை என்று அடிக்கடி பிரச்சினைக்குள்ளாவார்கள். பிறர் தங்களைக் குறை கூறுவதை மட்டும் இவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது!

சந்தர்ப்பங்களைச் சமாளிக்கும் திறமையும், சிறந்த நிர்வாக ஆற்றலும் உண்டு. அதிகாரத்துடன் மற்ற அனைவரையும் வேலைவாங்குவார்கள். இல்லையெனில் மனம் உடைந்து போவார்கள். இவர்கள் பல ஊர்களைச் சுற்றிப் பார்க்க விரும்புவார்கள். பலர் வெளிநாடுகளுக்கும் சென்று வருவார்கள். இவர்கள் ஆன்மிகத் தலைவர்களைக் கண்டவுடன் பணிந்து மதிப்புக் கொடுப்பார்கள். பலருக்கு முன்னோர்கள் தேடி வைத்த செல்வங்கள் இருக்கும்.

இவர்களுக்கு மனைவியின் வழி சொத்துக்கள் கிடைக்கும் யோகமும் உண்டு. எவ்வளவு துன்பம் வந்தாலும் தாங்கிக் கொள்ளும் மனோ தைரியமுடையவர்கள் இவர்கள் கூர்மையான அறிவுடையவர்கள். எதிரிகளைச் சமயம் அறிந்து அவர்களை அழித்து விடும் இயல்பினர். தீவிரமான ஆராய்ச்சிகளில் பலர் ஈடுபடுவார்கள். எவ்வளவு இருப்பினும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு மிகவும் மதிப்புக் கொடுப்பார்கள்.

தெய்வம் உண்டு என்பதை முழுமையாக நம்புவார்கள். தங்களது தொழிலில் மிகவும் உற்சாகம் உள்ளவர்கள்.

(தொடரும்)

# இன்று கொடியேற்றம் காணும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர்

தனம்

ஈழத்தில் பழைமையும், பெருமையும் வாய்ந்த பல சிவாலயங்கள் உள்ளன. இவற்றில் பல இடிந்தும் சிதைந்தும் போய்விட்டன. பிற்காலத்தில் இவை புனருத்தாரணம் செய்யப்பட்டன. தான்தோன்றீஸ்வரம் என்னும் பெயரில் மட்டக்களப்பு தான்தோன்றீஸ்வரர் ஆலயம். ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஆகிய இரண்டும் சைவமக்களின் பெருமதிப்பைப் பெற்றவை. ஒட்டுசுட்டான் ஆலயத்தில் மூன்று காலப் பூசைகளும் ஆனி மாதத்தில் (தமிழுக்கு) வரும் மகோற்சவ நிகழ்வும் தவறாது இடம் பெற்றுவருவது குறிப்பிடக்கூடியதாகும்.



சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு மூன்று சித்தர்கள் வன்னிப் பிரதேசத்துக்கு வந்தனர். இவர்களுள் ஒருவர் ஒட்டுசுட்டானுக்கு தென் மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள வாவெட்டிமலை யிலும், இரண்டாவது சித்தர் காதலியார் சமளங்குளத்திலும், மற்றவர் ஒட்டு சுட்டானிலும் தியானத்திலிருந்து சமாதியடைந்தனர். ஒட்டுசுட்டானிலே இருந்த சித்தர் ஒரு கொன்றை மரநிழலிலே வீற்றிருந்து சமாதியடைந்ததாகவும் அதிலே சிவலிங்கம் தோன்றியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த திரிபுத்திரகுமார் என்னும் சைவ மணவாளரும் அவருடைய இரு பிள்ளைகளும் வன்னிக்கு வந்து குடியேறினர்.

அவர்களைப்பின்பற்றி அவர்களுடைய சந்ததியினரும் இங்கு வந்து குடியேறினர். அவர்கள் வாழ்ந்த இடம் இடைக்காடு என்ற பெயரில் இன்றும் விளங்குகின்றது. திரிபுத்திரன் காடு வெட்டி குரக்கன் செய்கையில் ஈடுபட்டார். குரக்கன் விளைந்தவுடன் வெட்டி எடுத்துவிட்டு அடிப்பகுதி ஒட்டுக்கு தீ வைத்தார்.

வைக்கப்பட்ட தீ எங்கும் பரவி எரிந்தது. ஆனால் ஒரு கொன்றை மர நிழலின் கீழ் மட்டும் தீ பரவாமல் இருப்பதைக் கண்டார். அதனைத் துப்புரவு செய்வதற்காக மண்வெட்டியால் வெட்டும் போது ஒரு கல்லிலே மண்வெட்டிபட்டு பால்வடிவதைக் கண்டார். இதன் மர்மத்தை அறியாத திரிபுத்திரன் அந்தப் பகுதியை ஆண்ட வன்னியனாரிடம் அதனைக் கூறியதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்தைப் பார்வையிட்டு அந்த இடத்திலே கோயில் அமைத்து வழிபாடு செய்யுமாறு பணித்ததற்கமைய கொன்றையடிப் பிள்ளையார் எனப் பெயர் சூட்டி ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடு செய்தனர்.

காலம்செல்லச்செல்ல அந்தக் கல்லானது சிவலிங்க உருவமாக மாறி வந்தால் அதற்கு தான் தோன்றீஸ்வரம் எனவும் எரியாத இடத்தில் சிவலிங்கம் தோன்றியதால் வேகாவனப் பெருமான் என்றும் பெயர் வந்ததாகவும், ஒட்டுக்களைச் சுட்டு எரியாததால் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் என்று பெயர் வந்ததாகவும் கர்ண பரம்பரை வரலாறுகளி லிருந்து தெரிய வந்துள்ளது. ஆனால் இந்த ஆலயமானது சுயம்புலிங்கம் என்பதால் தான்தோன்றீஸ்வரர் எனத் திருநாமம் உண்டாயிற்று.

ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரப் பெருமானுக்கு ஆனிமாத அமாவாசையில் கொடியேறி பதினாறு திருவிழாக்கள் நடைபெறும். பௌர்ணமியில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். திருவிழாக் காலங்களில் ஒட்டுசுட்டானை அண்மித்த கிராமத்து மக்கள் அசைவ உணவுகளைத் தவிர்த்து 16 நாள்களும் விரதமிருந்து ஆசாரசீலர்களாகத் திகழ்வர் 16 நாள்களிலும் அன்னதான சபையினர் மனம் கோணாது இன்முகம் காட்டி அமுதளித்து வருவர். இந்த விழாவிலே முக்கியமான விழாவாகக் கருதப்படுவது 13ஆம் திருவிழாவான வேட்டைத்திருவிழாவாகும். சுவாமியானவர் தலை வேடன் போல குதிரை வாகனத்திலே செல்ல ஆயிரக் கணக்கான அடியவர்கள் தமது தீரத நோய்களுக்கெல்லாம் நேர்த்திக்கடனாக வேடுவராக வருவோம் என நேர்த்தி வைத்து திருவிழாவில் பங்கு கொள்வர். 15 ஆம் நாள் தேர்த்திருவிழாவும், 16 ஆம் நாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். இன்று கொடியேற்றம் இடம் பெறுகின்றது. அனைவருக்கும் தான் தோன்றீஸ்வரனின் அருட்கடாட்சம் பரவட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்கும் காலத்தில் பெற்றோரை பிள்ளைகள் எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள்

சி.நற்குணலிங்கம்

எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைதான்.
அது நல்லவனாவதும், தீயவனாவதும் அக்குழந்தையின் குடும்பச் சூழலில் தான் தங்கியுள்ளது. வலுவான குடும்பச் சூழலில் வளரும் குழந்தை மிகச் சிறந்த குழந்தையாக, மாணவராக, பிரஜையாக உருவாகும்.
நாம் வாழும் வீடே அறிவு வளர்ச்சிக்கும், ஒழுக்கத்துக்கும் தளமாக அமைகின்றது. குடும்பம் ஒன்று, எந்த நிலையில் இருக்கின்றதோ அந்த நிலையில் தான் பிள்ளைகளும் இருப்பார்கள். வீட்டுச் சூழல் பிள்ளை கெட்டுப்போகாமல் தன் கல்வியைக் முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். பிள்ளையின் கல்விக் காலத்தில் உங்கள் வளர்ப்பில் எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்களது பிடி, உங்களது கவனம், உற்றுநோக்கல், பிள்ளை மீதான மதிப்பீடு, அவதானிப்பு என்பவை தளரக் கூடாது. பெற்றோரின் பலவீனங்களை பிள்ளை அறியுமாயின் கற்றலுக்கு விருப்பம் குறைவாகவுள்ள பிள்ளைகள் அந்தப் பலவீனங்களைப் பயன்படுத்தி கல்விக்கான இளமைப் பருவத்தை தொலைத்து விடுவார்கள்.
குழந்தைகளை எப்போதுமே குழந்தைகளாக எண்ணாது அவர்களின் வயதுக்கேற்ப பெற்றோராகிய நீங்கள் உங்கள் அவதானிப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவப் பருவத்திலேயே பலவகையான மனவெழுச்சிப் போராட்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு பிள்ளைகள் தள்ளப்பட்டு அவர்களது கற்கும் நேரம் வீணடிக்கப்படும். இந்தக் காலப்பகுதியில் பெற் றோரின் கண்காணிப்பும் ஒழுங்கான வழிகாட்டலும் அவசியமாகும். இல்லையேல் பிள்ளை தான் விரும்பியவாறு நடப்பதற்காக பெற்றோரை ஏமாற் றுவார்கள். பெற்றோர்க்கு தாம் கல்வியில் ஈடுபாடு கொண்டவர் போல் காட்டிக் கொண்டு அவர்கள் தாம் விரும்பியவாறு தம்மை மாற்றிக்கொள்வார்கள். பெற்றோர்கள் தான் விழிப்புடன்



செயற்பட வேண்டும்.
கல்வி கற்கும் காலத்தில் பிள்ளைகள் பெற்றோரை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்பதை நோக்குவோமாயின் படிப்பில் உள்ள ஆர்வத்தைவிட கதைப்புத்தகங்கள் வாசிப்பதில் கூடிய ஆர்வமுள்ள பிள்ளைகள், வீட்டில் படிக்கும்போது படிக்கும் புத்தகத்துள் கதைப்புத்தகத்தை வைத்து வாசிப்பார்கள். பாடசாலைக்கு, தனியார் கல்வி நிறுவனத்துக்குச் செல்வதாகக் கூறிவிட்டு பிள்ளைகள் நண்பர்களுடன் திரையரங்குகளுக்கும், அரட்டை அடிப்பதற்கும் பெண்பிள்ளைகளுடன் சேட்டையில் ஈடுபடுவதற்கும், பழகுவதோடு புகைத்தல் மது அருந்துதல் போன்ற பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுவர். பாடசாலையில் கண் காட்சிக்கு பணம் கட்ட வேண்டும், வசதிகள் சேவைகள் கட்டணம் செலுத்த வேண்டும் எனப் பொய் கூறிப் பணம் பெற்றும், அந்தப் பணத்தை கூடா நண்பர்களுடன் வீண்செலவு செய்தல், பரீட்சைக் காலத்தில் பரீட்சைப் புள்ளிகளை உயர்வாகக் கூறுதல், மாணவர் தேர்ச்சி அறிக்கையிலும் புள்ளிகளைத் தனக்குச் சாதகமாக மாற்றியமைத்தலில் ஈடுபடுவர்.
மாணவன் பாடசாலைக்கு வரவில்லையாயின், பாடசாலை மாணவனது கைத்தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளும்போது தாயார் பிள்ளைக்கு



> குழந்தைகளை எப்போதுமே குழந்தைகளாக எண்ணாது அவர்களின் வயதுக்கேற்ப பெற்றோராகிய நீங்கள் உங்கள் அவதானிப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவப் பருவத்திலேயே பலவகையான மனவெழுச்சிப் போராட்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு பிள்ளைகள் தள்ளப்பட்டு அவர்களது கற்கும் நேரம் வீணடிக்கப்படும்.

கைத்தொலைபேசிக்கு அழைப்புச் சத்தம் வந்துள்ளது எனக் கூறும்போதும் பிள்ளை கைத்தொலைபேசியை எடுத்து பாடசாலைக்கு பிழையான அழைப்பு (Wrong number) எனக் கூறிவிட்டு தாயாருக்கும் அதனையே கூறுதல். பாடசாலைக்கு வரவில்லை எனக் கடிதம் பெற்றோர்க்குப் போட்டால் பிள்ளையே காத்திருந்து கடிதத்தை தபாற்காரனிடமிருந்து பெற்றுவிடும்.
வீட்டில் படிக்கும் நேரத்தில் தனது காதலியுடன் கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருப்பர். பெற்றோர் யாருடன் கதைக்கிறீர் எனக் கேட்டால் படிக்கும் போது ஏற்பட்ட ஐயப்பாட்டைத் தீர்க்க நண்பர்களுடன் கதைக்கிறேன் என்பர். புத்தகம் விரிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கும். பிள்ளையோ கனவில் சஞ்சரிப்பர். ஒரு மணித்தியாலத்தின் பின்னரும் விரிக்கப்பட்ட அதேபக்கம்தான் விரிந்த நிலையில் இருக்கும். தனக்குப் பிடித்தமான, இலகு வான பாடத்தை மட்டும் கூடுதலாகப் படிப்பர். ஏனைய பாடங்களில் அக்கறைசெலுத்துவதில்லை.
விடியற் காலையில் படிக்க எழுப்பி விடுமாறு பெற்றோர்க்கு பிள்ளை கூறிவிட்டுப் படுத்து விடுவார்கள். விடியற் காலை பிள்ளையை படிக்க எழுப்பிவிட்டு பெற்றோர் படுக்க, சிறிது நேரத்தில் பிள்ளையும் உறங்கிவிடுவர். பிள்ளை உன் அறையில் நேற்று இரவு 11 மணிக்கு லைற் எரிந்தது. அவ்வளவு நேரமும் படித்தாயா எனக் கேட்டால் ஆம் என்பார்கள். ஆனால் அங்கே மின்குமிழ் மட்டும்தான் விழித்திருந்ததேயொழிய பிள்ளை 9 மணிக்கே தூங்கி விட்டது.
பாடசாலை இல்லாத நாள்களில் அல்லது பாடசாலை முடிவடைந்த பின்னர் ஒரு பிள்ளையின் வீட்டுக்கு அவனது நண்பர்களில் ஒருவர் வந்து அல்லது ஒருவரை தயார்ப்படுத்தி அனுப்புவார்கள். ஒருக்கால் உங்கள் பிள்ளையை அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவரது பெயரைச் சொல்லி வருமாறு சொல்லச் சொன்னார்கள் என்று பொய்சொல்ல, பிள்ளையும் பெற்றோருக்கு பாடசாலைக்கு வரட்டாம், போய்வருகிறேன் எனக் கூறிச் செல்லல், இன்று யாழ்ப்பாணத்தில் செயலமர்வு என பொய்கூறியும் வீட்டிலிருந்து பாடசாலை செல்லாது பாடசாலைச் சீருடையுடன் சென்று ஆள்களில்லாத கட்டடத்தொகுதியில் உடைகளை மாற்றிக் கொண்டு கூடா நட்பு கேடாய் முடியும் என்பதிற்கமைய குழுச்சண்டை, வாள் வெட்டு, கலாசாரச் சீரழிவில் ஈடுபட்டு பாடசாலை முடிவடையும் நேரம் பாடசாலைச் சீருடையுடன் வீடு செல்லல் போன்ற சம்பவங்கள் இன்று சர்வசாதாரணம். பெற்றோரின் கடும் கண்டிப்பும் பெற்றோரின் பலவீனங்களும் கல்வியில் அக்கறை குறைவான பிள்ளைகளுக்கு பெற்றோரை ஏமாற்றத் தூண்டும் காரணிகளாக உள்ளன. இவற்றிலிருந்து பிள்ளைகளை மீட்டெடுக்க பெற்றோர் பிள்ளைகள் மீது தம் கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும். பாடசாலை, தனியார் கல்வி நிறுவனத்துடன் தொடர்பை பேண வேண்டும். தமது பிள்ளையின் நண்பர்கள் யார் என்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். பிள்ளை பெற்றோரின் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும் நடத்தை மாற்றங்களை உற்றுநோக்க வேண்டும். தேவையானவிடத்து சிறுவயது முதலே மென்மையான கண்டிப்பும் வழிகாட்டலும் வேண்டும். பிள்ளைகளை பெற்றோர் அவதானிக்கிறார்கள் என்பதை பிள்ளைகள் புரிந்து கொள்ளும் வண்ணம் உங்கள் அவதானிப்பு அமைய வேண்டும். பெற்றோராகிய நீங்கள் உங்கள் பொறுப்புக்களை உணர்ந்து, முன்மாதிரியாக நடந்து பிள்ளைகளை கற்கும் காலத்தில் கற்க வழிசெய்யுங்கள்.
பிள்ளைகளே, நீங்கள் பெற்றோரை ஏமாற்றுவதாக எண்ணாதீர்கள். நீங்கள் தற்காலிகமாக ஏமாற்றும் சந்தர்ப்பங்கள் எல்லாம் உங்களை நிரந்தரமாக சமூகத்திலிருந்து விலக்கிவைக்கத்தான் உதவும். நீங்களாகவே சீரழிந்து போகாதீர்கள். நீங்கள் பெற்றோரை ஏமாற்றுவததாக எண்ணி உங்களை ஏமாற்றாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்



ஒரு சிறிய கிராமம் நெடு நாள்களாகப் பாழடைந்து கிடந்தது. அங்கே மனிதர்கள் யாரும் வாசம் செய்யவில்லை. வீடுகள் எல்லாம் இடிந்தும் பாழடைந்தும் கிடந்தன. அந்தப் பாழடைந்த கிராமத்தில் ஏராளமான எலிகள் வசித்து வந்தன. எவராலும் எந்தவிட இடையூறும் ஏற்பட வாய்ப்பில்லாததால் எலிகள் நிம்மதியாகவும் இன்பமாகவும் வாழ்ந்து வந்தன.
அந்தப் பாழடைந்த கிராமத்தை ஒட்டி பெரிய ஏரி ஒன்று இருந்தது. ஒரு நாள் நூற்றுக்கணக்கான யானைகள் அந்தப் பாழடைந்த கிராமத்துக்குள் புகுந்து ஏரியில் நீர் அருந்தச் சென்றன.
யானைகள் பரவலாக நடந்து சென்றதால் அங்கே பரவலாக வசித்து வந்த எலிகள் பேராபத்துக்கு இலக்காக நேர்ந்தது. ஏராளமான எலிகள் யானையின் காலடியில் சிக்கி மடிந்தன.
நீர் அருந்தச் சென்ற யானைகள் திரும்பி வரும்போது தாங்கள் முழுமையாக அழிந்துவிடுவோம் என அவை அஞ்சின. அதனல் உயிர் தப்பிய எலிகள் அனைத்தும் ஒன்றுகூடி யோசனை செய்தன. நேரே ஏரிக்குச் சென்று நீர் அருந்தும் யானைக் கூட்டத்திடம் தங்கள் நிலையைச் சொல்லலாம் எனத் தீர்மானித்தன. எலிகள் யானைக் கூட்டத்தைச் சந்தித்து யானைகளுக்கெல்லாம் அரசனாக இருந்த யானையை நோக்கி, "யானையாரே! சற்றுமுன் உங்கள் கூட்டத்தினர் இந்தப் பக்கமாக வந்தபோது எங்கள் இனத்து எலிகள் பல உயிரிழந்துவிட்டன. அதேபோல் நீங்கள் எல்லோரும் திரும்பி வரும்போது மிச்சமிருக்கும் நாங்களும் அழிந்துவிடுவோம். இதனால் உங்களுக்கு ஒரு பயனும் இல்லை. இதற்குப் பதிலாக நாங்கள் அனைவரும் உயிர் வாழ உதவினால் உங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படும் சமயம் நாங்கள் அனைவரும் உங்களுக்கு உதவிக்கு வருவோம்" எனக் கூறின.
யானைகளின் அரசன் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு "நாங்கள் திரும்பிச் செல்லும்போது வேறு வழியாகப் போய்விடுவோம். நீங்கள் எல்லோரும் கவலையை விடுத்து நிம்மதியாகச் செல்லுங்கள்" என்று கூறியது. எலிகள் யானைகளுக்கு நன்றிகூறிவிட்டுத் தமது இருப்பிடம் சென்றன. யானைகளும் வேறு வழியில் திரும்பிச் சென்றன.
பல நாள்களுக்குப் பிறகு அரசன் ஒருவன் தன் யானைப் படை அணியில் சேர்ப்பதற்காக ஏராளமான காட்டு யானைகளைப் பிடித்து வருமாறு தமது அலுவலர்களுக்கு உத்தரவிட்டான். அலுவலர்கள் காட்டுக்குச் சென்று உறுதியான கயிறுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட வலையைக் கட்டிவிட்டு அந்தப் பக்கமாக யானைக் கூட்டத்தை விரட்டினர். திரண்டு வந்த யானைகள் கண்ணிவலையில் சிக்கிக் கொண்டன.
சில நாள்களுக்கு பட்டினி கிடக்குமாறு விட்டுவிட்டால் அவை அடங்கிக் கட்டுப்படும் என்று யானைகளை அப்படியே விட்டுவிட்டு அலுவலர்கள் சென்றுவிட்டனர். யானைகளின் தலைவனுக்கு எலிகள் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. கண்ணி வலையில் சிக்காத ஒரு யானையை எலிகள் இருக்கும் இடத்துக்கு அனுப்பி யானைகள் கண்ணியில் சிக்கிக் கொண்ட செய்தியை அவற்றிடம் சொல்லிவிட்டு வருமாறு யானைத் தலைவன் கூறியது. யானை விரைந்து சென்று எலிகளைச் சந்தித்து யானைகளுக்கு ஏற்பட்ட ஆபத்தை எடுத்துக் கூறியது. எலிகள் ஒரே சமயத்தில் திரண்டு காட்டை நோக்கி விரைந்தன. யானைகள் சிறைபட்டுக் கிடந்த இடத்தை அடைந்ததும் மிகவும் துரிதமாக வலையைக் கடித்து யானைகளை விடுவித்தன. யானைத் தலைவன் எலிகளின் உதவிக்காக அவற்றுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டது.

# ஜவகர்லால் நேரு



(கடந்த திங்கட்கிழமையின் தொடர்ச்சி)

ஜவகர் தொடக்கப் பள்ளிக்குச் செல்லவில்லை. ஐரிஷ் நாட்டு ஆசிரியை ஒருவரிடம் கற்றுக் கொண்டார். இந்திய ஆசிரியர் ஒருவரிடம் கணிதம், ஆங்கிலம், ஹிந்தி எனப் பத்து வயதுக்குள் தொடக்க நிலைப் பள்ளிப் பாடங்கள் அனைத்தையும் படித்து முடித்து விட்டார்.
15 ஆம் வயதில் இங்கிலாந்து சென்று கல்வி கற்றார். அப்போது இத்தாலி நாட்டின் கரிபால்டியின் வாழ்க்கை வரலாற்றைக் கற்ற ஜவகர் நாட்டின் விடுதலைக்கு நாளும் பாடுபட வேண்டும் என நினைத்தார்.
இரண்டாண்டுகள் படிப்பு முடிந்ததும் கேம்பிறிஜ் ட்ரினிட்டி கல்லூரியிலும் மூன்றாண்டுகள் படித்து முடித்தார். கல்லூரி வாழ்க்கையில் சுதந்திர உணர்வுகள் பெருகி அறிவும் ஆழ்ந்த சிந்தனைகளும் இளைஞன் நேருவிடம் நிறைந்திருந்தன.



நேரு, கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்குள்ள ட்ரினிட்டி கல்லூரியில் இரசாயனம், தாவரவியல், புவியியல் ஆகிய பாடங்களைக் கருத்துடன் படித்து வந்தார். அங்கு பல அரசியல் பிரச்சினைகள் பற்றி மாணவர்கள் பேசுவார்கள். ஆனால் நேரு ஒருநாள்கூட அவர்களிடம் எதுவும் பேசியது கிடையாது. பிறருடைய பேச்சுக்களைக் கூர்ந்து கவனிப்பதுண்டு.
இந்திய மாணவர்கள், இந்திய அரசியல், வங்கக் கிளர்ச்சி பற்றிப் பேசுவார்கள். விபின் சந்திரபால், கோபால கிருஷ்ண கோகலே ஆகிய தேசத் தலைவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். இந்திய மாணவர்கள் கூடிப் பேசும் அறையில் மொத்தம் (நேரு உட்பட) பத்துப் பேர்களே இருந்தனர். ஆயினும் விபின் சந்திரபால் அங்கே ஆயிரக்கணக்கான மக்கள் கூடியுள்ள அவையிலே பேசுவது போல் பேசினார். அவரது ஆவேசமான பேச்சைக் கேட்டு மாணவர்கள் வியந்தார்கள்.

(திங்கட்கிழமைகளில் தொடரும்)

# வரலாற்றில் இன்றைய தினம்

1598- அட்லஸ் எனப்படும் உலக வரைபடத்தை முதலில் வெளியிட்ட ஆபிரஹாம் ஓர்ட்டோனியஸ் காலமானார்.
1776 - பிரிட்டனிடமிருந்து ஐக்கிய அமெரிக்கா விடுதலையை அறிவித்தது.
1810- நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டம் நகரைப் பிரான்ஸ் கைப்பற்றியது.
1827 - நியூயார் மாநிலத்தில் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.
1837 - உலகின் நீண்ட தூர ரயில் சேவை, பிரிட்டனின் பேர்மிங்ஹாம் - லிவர் பூல்நகரங்களுக்கிடையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
1886 - சுதந்திரச் சிலை பிரெஞ்சு மக்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு அளித்தார்கள்.
1903 - ட்ரோதி லெவிட் என்பவர் மோட்டார் பந்தயப் போட்டியில் பங்குபற்றிய முதல் பெண்ணானார்.
1918 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலஸ் சார்மன்னரும் அவரின் குடும்பத்தினரும் போல்ஸ்விக் புரட்சியாளர்களால் கொல்லப்பட்டனர்.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை எண்ணம் மேலோங்க வேண்டும்

தமிழ் மக்கள், கடந்து சென்ற மூன்று தசாப்தகால உரிமைப் போராட்டத்தின் வழியே பயணித்தவர்களாக அதன் வேட்கையை இன்னமும் சுமந்து கொண்டு வாழ்கின்றனர். அதனைப் பெற்றுவிட முயற்சிக்கின்றனர். முயன்றுகொண்டு இருக்கின்றனர். வலிகளும், தீராத சுமைகளும் மக்களைச் சூழ்ந்து வெப்பக் குடுவையாக கதகதத்துக் கொண்டிருக்கின்றன.
இத்தனைக்கும் கல்வியை மூலதனமாக்கிய இனத்தின் இளைஞர்களும், யுவதிகளும் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று படிப்புரிமைக்காக காத்துக் கிடக்கின்றனர். தாய் தந்தையரின் தியாகங்களும், கல்விக்குக் காத்திரம் செய்த ஊக்கம் எனும் அவர்கள் தந்த அறிவுடைமையின் ஊட்டங்களும் பிள்ளைகளின் ஒளிமயமான வாழ்தலை எண்ணி தினம் தினம் உயிர் துறக்கின்றன. தமிழினத்தின் எதிர்கால ஒளிதரும் விருட்சங்கள் வாழ்வாதாரமின்றி இருளின் மருள்கைக்குள் புதைந்து கிடக்கின்றனர்.
இந்த நிலையிலே தமிழ் மக்களுக்குச் சேவை புரிவதற்கென அவர்களின் நியாயமான உரித்துக்களைப் பெற்றுக் கொடுக்கவென வாக்குரிமை எனும் அட்சயபாத்திரம் ஏந்தி தலைமைத்துவங்களைப் பெற்றவர்கள் சௌகரியமாக வாழ்கின்றனர்.
தாங்கள் வந்த நோக்கத்தை மறந்து போகின்றனர். சேவை என்ற மகத்துவத்தை மறந்து, தமக்கான சலுகைகளைப் பெறுவதில் குறிக்கோளாக உள்ளனர். கிடைக்கப் பெற்றதை விட மேலும் வசதி வாய்ப்புக்கள் வேண்டும் என நினைக்கின்றனர்.
சலுகைகளின் ஆதாரம் பற்றி மக்களின் அபிலாசைகளில் சேதாரம் செய்யும் இவர்களின் திருமுக தரிசனங்களை தியாக செம்மல்களின்-தேசப்புயல்களின் விடுதலை எனும் அருள்முக தரிசனங்களுடன் ஒப்பிட முடிகிறதா...??
இனியாவது இவர்கள் மக்கள் நலனை கருத்தில் எடுக்க வேண்டும்...! சேவை எண்ணத்தை தங்களுள் மேலோங்கச் செய்ய வேண்டும்....!
சுவாமி விவேகானந்தர் ஒருநாள் இப்படி சிந்திக்கிறார். எனக்கு ஏழைகள் உணவு தருகிறார்கள். அந்த ஏழைகளுக்கு என்னால் என்ன நன்மை...? அவர்கள் எனக்குத் தரும் ஒரு பிடி அரிசியை மீதப்படுத்தினால் அது அவர்களின் குழந்தைகளுக்கு ஒரு நாள் உணவாக மாறுமே....! நான் இந்த உடலைக் காப்பாற்றி என்ன ஆகப் போகிறது...? இனிமேல் நான் பிச்சையெடுக்க மாட்டேன் என்ற தீர்மானத்துக்கு வருகிறார். இந்த எண்ணம் அவரிடம் தீவிரமடைந்தது. ஒரு காட்டுக்குள் சென்று, உணவு எதுவும் உட்கொள்ளாமல் தவம் செய்தபடியே இறந்து விடுவது என்ற முடிவுக்கு வருகிறார். அதே எண்ணத்துடன் காட்டுக்குள் செல்கிறார்.
உணவு எதுவும் உட்கொள்ளாமல் ஒரு நாள் முழுவதும் நடக்கிறார். மாலை வேளை வந்த போது, மயக்க நிலையை உணர்ந்தவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு இறைவனைத் தியானம் செய்கிறார். திடீரென அவரது தியானம் கலைகிறது. தூரத்தில் தெரிகின்ற இரண்டு நெருப்புத் துண்டுகள் மீது அவரது கவனம் செல்கிறது. ஆமாம் அவை ஒரு புலியின் கண்கள் தான்...! சந்தேகமேயில்லை...! அந்தக் கண்களும் அவரை நோக்கி நெருங்கி நெருங்கி அருகில் வந்து விட்டன. விவே கானந்தரின் உடலும் சரி, உள்ளமும் சரி எள்ளளவும் அசையவில்லை. அசைந்து அசைந்து வந்துகொண்டிருந்த புலியும் சற்று தூரத்தில் படுத்துக் கொண்டது. புலியை அன்புடன் நோக்கினார் விவேகானந்தர். எனது உடலால் உலகத்துக்கு ஏதாவது நன்மை ஏற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்த புலிக்காவது எனது உடல் உணவாகப் பயன்படும் என்றால், அது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்று நினைத்துக்கொண்டார். அமைதியான எண்ணத்துடன் அசைவின்றி மரத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டார்.
கண்களை மூடிச் சிறிது நேரம் செல்ல கண்களைத் திறந்து பார்த்தர்ர். அங்கே புலி இல்லை. வேறு இடம் நகர்ந்து சென்றிருந்தது. இறைவன் என்னை எப்படியெல்லாம் பாதுகாத்து வருகிறார் என்பதனை மனம் உருகி நினைந்து கொண்டார். காட்டிலேயே நீண்ட காலத்தை ஆத்மார்த்தமான தியானத்தில் கழித்தார். அவரது உடலும் மனமும் புதியதோர் ஆற்றல் பெற்றதை உணர்ந்தார். அவர் மேற்கொண்ட பயணத்தைச் சிரமங்களின்றி தொடர்ந்தார்.




# இந்துபோட் இராசரத்தினம்
## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின்
# ஒளி விளக்கு

நயினை சின். சோமேஸ்வரபிள்ளை (ஜே.பி)



ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகளை அமைத்துசைவச் சூழலை உருவாக்கி அந்தச் சூழலிலே சைவ விழுமியக் கல்வியை சைவப்பிள்ளைகளுக்கு வழங்குதல், மதம் மாறுதலைத் தடுத்தல் போன்ற சைவமறுமலர்ச்சிச் செயற்பாடுகளை நாவலர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் குறிக்கோளுடன் யாழ்ப்பாணத்தில் சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இதன் ஆரம்ப கர்த்தாக்களுள் சேர். பொன். இராமநாதன், சு. இராசரத்தினம் போன்றோர் முதன்மையானவர்கள். 1884இல் அவதரித்த சைவக்காவலர் சு.இராசரத்தினம், சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் முகாமையாளராகவும், செயலாளராகவும் ஆரம்பநாளிலிருந்தே நீண்டகாலமாக அறப்பணியாற்றியவர். சட்டத்தரணியான சு.இராசரத்தினம் உயர்பதவிகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு முழுநேரத் தொண்டனாக, தன்னை சைவவித்தியாவிருத்திச் சங்கத்துடன் இணைத்துக்கொண்டார்.
நாவலர் என்றால் ஆறுமுகநாவலரை அடையாளப்படுத்துவது போல, இந்து போட் என்றால் சுஇராசரத்தினத்தையே சுட்டி நிற்கும். அந்தளவுக்கு அவர் உடல், பொருள், பதவி, அனைத்தையும் அர்ப்பணித்து சைவப்பணிக்காக உழைத்த மகான். இவருக்கு வலது கரம் போல் உதவியவர்கள் பலர். அவர்களுள் திருவாளர்கள் கந்தப்பசேகரம், அப்புத்துரை ஆகியோரைக் குறிப்பிடலாம்.
சமுதாயம் வளமுடன் வளர்ச்சி பெற, நாட்டின் அரச உதவியோ அன்றி ஒரு சங்கத்தின் செயற்பாடோ அவசியம் என்ற நிலைப்பாட்டை நாவலரின் பின் யாழ்ப்பாண சைவ தமிழ் மக்களிற் சிலர் சேர். பொன். இராமநாதனை அணுகி முறையிட்டபோது அவரும் அதனை ஏற்று சைவத் தமிழர் கல்வி வளர்ச்சியைக் கருதும் சைவ அபிவிருத்திச் சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கு ஆயத்தம் செய்தனர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்ட காலமது. அரச உத்தியோகத்துக்காக ஆங்கிலக் கல்வியையும், கிறிஸ்தவ மதத்தையும் மேலோங்கச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. விழிப்புணர்வு பெற்ற சைவர் சிலரால் பொன் இராமநாதன் தலைமையில் 09.12.1923இல் உதயமான நிறுவனமே சைவ வித்தியாவிருத்திச் சங்கம். தமிழ்மொழி மூல ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வியையும் சைவச்சூழலிலே கற்கும் வகையில் சைவவித்தியாவிருத்திச் சங்கம் பல சைவப் பாடசாலைகளை ஊர்தோறும் நிறுவி, நிர்வகித்தது. கற்பிக்கும் ஆசிரியருக்குப் பயிற்சி அவசியமெனக் கருதிய சு.இராசரத்தினத்தின் அயராத முயற்சியினால் திருநெல்வேலியில் சைவ ஆசிரியர் கலாசாலை நிறுவப்பட்டது. இங்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நாடெங்கும் நிறுவப்பட்ட பாடசாலைகளை அணி செய்தனர். இராசரத்தினம் இலங்கை சட்டசபை உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் பாடசாலைகளின் அபிவிருத்திக்கான முயற்சிகள், கல்விச்சட்ட திட்டங்களை ஆக்குதல், ஆசிரியர் ஆளுமை விருத்தி உதவி நன்கொடை போன்ற இன்னோரன்ன விடயங்களில் தக்க ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தினார்.

மனித தர்மம் தார்மீக அடிப்படையில் செயலாற்றியவர் சு.இராசரத்தினமே என்றால் யாரும் அதை மறுப்பதற்கில்லை. இவர் தனது பிள்ளைகள் போலவே விடுதியில் உள்ள பிள்ளைகளையும் கவனித்தார். இனிய பேச்சு, கண்டிப்பானகுணம், சிறார்களின் தேவைகளை அறிந்து நிறைவு செய்வதில் இவருக்கு நிகர் இவரே தான்.

தாய் தந்தையரை இழந்த அல்லது மிகவும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் ஆதரவற்ற குடும்பத்துப் பிள்ளைகளை மதமாற்றஞ் செய்யும் ஆங்கில ஆட்சியாளர்களது முயற்சியைத் தடுக்கும் நோக்கோடு சு. இராசரத்தினம் 1930 இல் ஆண், பெண் இல்ல அநாதை விடுதிகளை உருவாக்கிக் கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இன்றும் அந்த இல்லங்கள் திறம்பட நடைபெறுகின்றன. மனித தர்மம் தார்மீக அடிப்படையில் செயலாற்றியவர் சு.இராசரத்தினமே என்றால் யாரும் அதை ம்றுப்பதற்கில்லை. இவர் தனது பிள்ளைகள் போலவே விடுதியில் உள்ள பிள்ளைகளையும் கவனித்தார். இனிய பேச்சு, கண்டிப்பானகுணம், சிறார்களின் தேவைகளை அறிந்து நிறைவு செய்வதில் இவருக்கு நிகர் இவரேதான்.
விடுதிக்கு நாளாந்தம் கொள்முதல் செய்யப்படும் உணவுக்கான மரக்கறி வகைகளின் தரம் அளவீடு என்பனவற்றை பரிசோதிப்பதும் பிள்ளைகளிடம் உணவின் தரம் பற்றி அறிந்து கொள்வதோடு வைபவ நாள்களையும் பிள்ளைகளுடன் கொண்டாடி அவர்களுக்கு இனிதான தீன்பண்டங்கள், உடுபுடைவைகள் எல்லாம் குறைவின்றி வழங்கி மகிழ்வது அவரின் சுபாவமே. இல்லங்களில் வதியும் பிள்ளைகள் நோய்க்குள்ளாகி இருந்தால் அவர்களுக்கு வேண்டிய வைத்திய வசதிகளையும் சுற்றாடல், சுத்தம் போன்றவற்றையும் சீராக்குவதில் வல்லவராகவே காணப்பட்டார்.
மக்களுக்காக வாழ்ந்துதவிய இந்துபோட் இராசரத்தினம் மறைந்தாலும் அவரின் தொண்டுகள் இந்த உலகு உள்ளளவும் நினைவு கூரப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

(சைவச்சிறுவர் இல்ல
கல்வித் திட்டப் பணிப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடிகை ஜெனிலியா, ஹிந்தி நடிகர் ரிதேஷ் தேஷ்முக்கை திருமணம் செய்தார். திருமணத்துக்குப் பின்னர் மீண்டும் நடிக்க உள்ளார் எனக் கூறிவந்த நிலையில், அண்மையில் தனது 2ஆவது குழந்தையைப் பெற்றெடுத்தார். இதற்கிடையில் நடிக்க வந்த வாய்ப்புகளை ஒதுக்கி வந்தார். தற்போது அவர் சத்தமில்லாமல் நடித்த விடயம் வெளியாகியுள்ளது. ஹிந்தி நடிகர் ஜான் ஆப்ரகாம் நடித்த 'போர்ஸ்' படத்தில் அவருக்கு இணையாக நடித்திருந்தார் ஜெனிலியா. இதன் 2ஆம் பாகம் உருவாக்கப்படுகிறது. இதில் சோனாக்ஷி சின்ஹா நாயகியாக நடிக்கிறார். முதல் பாகத்தில் ஜெனிலியா இறப்பது போன்று காட்சி அமைக்கப்பட்டிருந்தாலும், 2ஆம் பாகத்தில் மனைவி ஜெனிலியாவுடன் ஜான் ஆப்ரகாம் அன்பு பகிர்ந்து கொள்வது போன்ற காட்சிகள் படமாக்க வேண்டி இருந்தன. அதில் நடிக்க ஜெனிலியாவை ஆப்ரகாம் கேட்டுக்கொண்டார். அதை ஏற்று சத்தமில்லாமல் கடந்த ஆண்டே அந்தக் காட்சிகளில் நடித்து முடித்திருக்கிறார் ஜெனிலியா. பல மாதங்கள் கடந்த பின், ஜெனிலியா நடித்ததை பட இயக்குநர் அபினய்தியோவும் உறுதிசெய்தார்.

# இரகசியமாக நடித்தார் ஜெனிலியா

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 4 | | | | 9 | |
| | | 7 | | | | 5 | 2 | |
| 6 | | | | 8 | | | | |
| 9 | | | | 6 | 4 | | 5 | |
| | | | 8 | 9 | 3 | | | |
| | 6 | | | 1 | | 9 | | 4 |
| | | | | 4 | | | | 2 |
| | 1 | 2 | | | | 4 | | |
| | 3 | | | | 1 | | 8 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உபசதுரங்கள் என்றும் அழை க் கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



ஒரு மகன் அம்மாவிடம் கேட்டான்...
மகன்: அம்மா, ஒரு பை நிறைய பணத்தை வேலைக்காரிக்கிட்ட கொடுத்துட்டுப் போவீங்களா.?
அம்மா: கண்டிப்பா இல்லை செல்லம்... எனக்கு அவ மேல நம்பிக்கை இல்லை.
மகன்: அப்போ ஏன் அம்மா என்னை மட்டும் அவங்களிட்ட விட்டிட்டுப் போறீங்க?

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 5 | 7 | 4 | 9 | 8 | 2 |
| 5 | 9 | 8 | 6 | 2 | 1 | 3 | 4 | 7 |
| 7 | 2 | 4 | 3 | 9 | 8 | 6 | 1 | 5 |
| 9 | 7 | 5 | 1 | 3 | 6 | 8 | 2 | 4 |
| 2 | 8 | 3 | 7 | 4 | 9 | 1 | 5 | 6 |
| 4 | 6 | 1 | 2 | 8 | 5 | 7 | 9 | 3 |
| 6 | 1 | 2 | 9 | 5 | 3 | 4 | 7 | 8 |
| 3 | 4 | 7 | 8 | 1 | 2 | 5 | 6 | 9 |
| 8 | 5 | 9 | 4 | 6 | 7 | 2 | 3 | 1 |

எமக்கு வருகின்ற
WIFE
வெள்ளையா
இருக்க வேணும்
எங்கிறது முக்கியம்
இல்ல மச்சி!

அவ தொல்லையா
இருக்கக் கூடாது,
அதுதான் முக்கியம்!



கோபிகா

அம்மா தரும் சாப்பாட்டை
பாராட்டத் தயங்காதீர்.
சிலருக்கு அம்மா இல்லை,
சிலருக்குச் சாப்பாடே இல்லை




படித்ததில் பிடித்தது

இந்த
ஆஸ்பத்திரியில
தான் என் கணவரைப்
பறிகொடுத்தேன்.!
ஐயோ பாவம்..
ஒப்ரேஷன்ல இறந்துட்டாரா?
இல்ல. நர்ஸைக் கூட்டிட்டு
ஓடிப் போயிட்டார்.!



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** திட்டமிட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான, புதிய வாய்ப்பு ஏற்படும். பணவரவு அபரிமிதமாக கிடைக்கும். நண்பர் கேட்ட உதவியைச் செய்து மகிழ்வீர்கள்.



**இடபம்:** குடும்பத்தினரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனமாக இருப்பது நல்லது. வாகனப் பயணத்தில் மிதவேம் பின்பற்றவும்.



**மிதுனம்:** நல்லவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலைக்கும்.



**கடகம்:** வீண் பேச்சைத் தவிர்த்தால் சுயகௌரவத்தைப் பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இலாபம் சுமார். புத்திரரை வழிநடத்துவதில் இதமான அணுகு முறை தேவை.



**சிங்கம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.



**கன்னி:** நீண்டநாள் எதிர்பார்ப்பு தற்போது நிறைவேறும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும். பெண்கள் விருந்து விழாவில் பங்கேற்பர்.



**துலாம்:** உங்களின் பேச்சு பிறரைச் சங்கடப் படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பணியாளர்கள் [illegible] பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.



**விருச்சிகம்:** தெய்வ நம்பிக்கையுடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு உண்டாகும். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.



**தனுசு:** எதிரிகளைக் கண்டு விலகிச் செல்லும் சூழல் உருவாகும். தொழில் வியாபார வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். விரும்பிய உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள். அரசியல்வாதிகளுக்கு அனுகூல பலன் கிடைக்கும்.



**மகரம்:** மனதில் நல்ல சிந்தனை அதிகரிக்கும். நண்பர்களுக்கு இயன்ற உதவி புரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.



**கும்பம்:** நண்பரிடம் வெளிப்படையாக பேசுவதில் தயக்கம் கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் அள்வான மூலதனம் போதும். உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். விஷப் பிராணிகளிடம் விலகுவது நல்லது.



**மீனம்:** சிலரது தற்பெருமை பேச்சு சங்கடப் படுத்தலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். நிலுவைப் பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும். உடல்நலனில் கவனம் செலுத்துவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிளாட்போம் காலணிகள்

பெண்களுக்கான பிளாட்போம் காலணிகள் அறிமுகமாகியுள்ளன. பெரும் பாலான காலணிகள் பிளாட்போம் அடி வடிவமைப்பில் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 850 ரூபா தொடக்கம் 1500 ரூபா ஆகும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | கல்வியங்காடு | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | – | 80 | 160 | 80 | 40 | – | 60 |
| கத்தரி | 80 | 80 | 100 | 100 | 80 | 80 | – | 40 |
| கரட் | 300 | 240 | 260 | 240 | 240 | 250 | – | 160 |
| மரவள்ளி | 100 | 200 | 100 | 100 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 80 | 80 | 100 | 100 | 100 | 40 | – | 80 |
| பாகல் | 300 | 180 | 320 | 200 | 120 | 100 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 120 | – | 120 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 75 | 90 | 80 | 80 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 160 | 140 | 180 | – | 160 |
| பூசணி | 70 | 100 | 140 | 140 | 120 | 120 | – | 80 |
| தக்காளி | 200 | 240 | 240 | 260 | 200 | 200 | – | 200 |
| வாழைக்காய் | 90 | 100 | 100 | 120 | 120 | 60 | – | 40 |
| கீரை | 20 | 15 | 20 | 20 | 20 | 10 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | – | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 450 | 700 | 600 | 1000 | – | 500 |
| புடோல் | 80 | 80 | 130 | 100 | 60 | 60 | – | 100 |
| கோவா | 150 | 140 | 200 | 180 | 140 | 150 | – | 140 |
| வெண்டி | 120 | 100 | 120 | 120 | 100 | 100 | – | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 240 | 200 | 160 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 240 | 180 | 140 | – | 150 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 120 | 90 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200 | 150 | 100 | – | 280 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 100 | 200 | 240 | 340 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 350 | 250 | 250 | 280 | – | 350 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 500 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 500 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 600 | 700 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 400 | – |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஒரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 250 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 500 | 350 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 400 | 250 | 200 |

## கறிவேப்பிலை தோசை

### செய்முறை

புழுங்கல் அரிசி மற்றும் பச்சரிசி இரண்டையும் 2 மணிநேரம் ஊற வைக்கவும். கிரைண்டரில் ஊற வைத்த அரிசி, மிளகாய் வற்றல், சீரகம், உப்பு, கறிவேப்பிலை போட்டு தோசை மா பதத்தில் அரைக்கவும். அரைத்த மாவை ஒரு பாத்திரத்தில் எடுத்து அரைகப் அளவு தண்ணீர் ஊற்றி கரைத்துக் கொள்ளவும். தோசைக்கல்லை அடுப்பில் வைத்து எண்ணெய் தடவி ஒரு கரண்டி மாவை எடுத்து தோசைக்கல்லில் ஊற்றிப் பரப்பி விடவும். மேலே எண்ணெய் ஊற்றி 2 நிமிடம் கழித்து திருப்பிப்போட்டு வெந்ததும் எடுத்து விடவும்.


### தேவையானவை

புழுங்கல் அரிசி – ஒரு கப்
பச்சரிசி – ஒரு கப்
கறிவேப்பிலை – 20 கெட்டு
மிளகாய் வற்றல் – 8
சீரகம் – ஒரு மேசைக்கரண்டி
கல் உப்பு – ஒரு தேக்கரண்டி



## சுவையான சமையலுக்கு....

- அரிசியால் செய்த உணவுகளை மைக்ரோவேவ் அவனில் மறுமுறை சூடாக்கும்போது, சிறிது நெய் கலந்து சூடாக்கினால், விரைவில் சூடாகும்.
- மீனைச் சுத்தம் செய்வதற்கு முன் சிறிது நேரம் உப்புச் சேர்த்து கிளறி வைத்திருந்தால், மீனிலிருந்து வாடை எதுவும் வராது.
- இறாலை உரித்துக் கழுவியதும் சிறிது நேரம் மோரில் ஊறவைத்தால், இறால் வாடை மிகவும் குறைவதோடு, சுவையும் கூடுதலாக இருக்கும்.
- துவரம் பருப்பை வேக வைக்கும்போது, ஒரு தேக்கரண்டி வெந்தயத்தையும் சேர்த்தால், சாம்பார் இரவு வரை கெடாமல் இருக்கும்.
- காலையில் முருங்கைக் கீரை சமைக்க வேண்டுமானால், இரவு முருங்கைக் கீரையை ஒரு துணியில் கட்டி வைத்துவிட்டால், காலையில்எல்லாமுருங்கை இலைகளும் தனித்தனியாக உதிர்ந்து இருக்கும். காம்புகளை எடுத்துவிட்டு கீரையைப் பயன்படுத்தலாம்.
- உளுந்து வடைக்கு ஊற வைக்கும் போது 1 கிலோ உளுந்துக்கு 100 கிராம் பச்சரிசி சேர்த்து ஊற வைத்து வடை சுட்டால் அதிகமாக எண்ணெய் குடிக்காது.
- தக்காளி, வெங்காயம் போன்ற சாலட் தயாரிக்கும் போது தயிருக்குப் பதிலாக இரண்டு மேசைக்கரண்டி தேங்காய்ப் பால் ஊற்றி பிசைந்து காய்கறிகளை பரிமாறினால் வெகு சுவையாக இருக்கும்.
- தேங்காய்ச் சட்னி செய்யும் போது, பச்சை மிளகாயை எண்ணெயில் வதக்கிய பின் அரைத்தால், சுவை கூடுதலாக இருக்கும்.



## நாளை

ஆனி-21
செவ்வாய்க்கிழமை
- 05.07.2016
திதி: பிரதமை
பி.ப.04.25 வரை
நட்சத்திரம்: புனர்பூசம்
மு.இ.07.38 வரை
ராகுகாலம்:
02.57-04.27 வரை
சுபநேரம்:
10.27-11.57 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக வலைத் தளங்களின் ஊடாக செலானின் வாடிக்கையாளர் சேவை

தொழில்நுட்பத்தில் முன்னோடியாக விளங்கும் வங்கியானசெலான்வங்கி, வாடிக்கையாளர்களுக்கு இலகுவான மற்றும் அவர்களை இணைக்கும் வகையிலான வாடிக்கையாளர் சேவையை வாட்ஸ் அப் மற்றும் பேஸ்புக் மெசெஞ்ஞர் ஊடாக இலங்கையில் முதன் முறையாக வழங்குகிறது.

எதிர்காலத்தில் தொழில்நுட்பம் தனது வாடிக்கையாளர்களுடனான உறவில், எவ்வாறான பங்களிப்பை ஏற்படுத்தும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த செலான், அலைபேசிக்கு இசைவான இலகுவான மற்றும் பிரபல்யமான பேஸ்புக், வாட்ஸ் அப் ஆகியவற்றின் ஊடாக வாடிக்கையாளர்களை எட்டுகின்றது.

**வணிகம்**

இந்தப் புதிய பிரத்தியேகமான சேவை திறன் பேசிகள் மற்றும் கையடக்க கருவிகள் ஊடாக பயணிக்கும் போதே வங்கியுடனான உரையாடல்கள் மற்றும் அதன் சேவைகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்குகிறது.

துரித வளர்ச்சியடைந்துவரும் சமூக மற்றும் தகவல் பரிமாற்ற வாட்ஸ் அப் மற்றும் பேஸ்புக், வாடிக்கையாளர்கள் மத்தியில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற இந்தத் தருணத்தில் வங்கி அதன் வாடிக்கையாளர்களுடன் நெருங்கிய தொடர்பை பேண அவற்றைப் பயன்படுத்துகின்றது.

செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் பிரத்தியேக வங்கியியல் பிரதி பொது முகாமையாளரான டிலான் விஜயசேகர தெரிவித்ததாவது: மாறிவரும் வாடிக்கையாளர் வாழ்வின் எதிர்காலத் தேவைகளை உணர்ந்து, எமது சேவைகளை அதற்கேற்றவாறு வடிவமைத்து வழங்க முயன்று வருகிறோம். நாட்டில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப ஆர்வமுடைய வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு இந்த சமூகவலைத்தளங்களின் ஊடான வாடிக்கையாளர் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்தச் சமூக வலைத்தளங்கள் ஊடாக வங்கியின் சேவைகள் தொடர்பான உடனடி பிரத்தியேகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்–என்றார்.

அண்மையில் தனது 28 ஆவது வருடத்தை நிறைவு செய்த செலான் வங்கி, நாடு முழுவதிலும் உள்ள கிளைகளின் விரிவாக்கம் மற்றும் டிஜிற்றல் ஆற்றல்மூலம் தனது இருப்பை விஸ்தரித்து வருகின்றது. முன்னணி வங்கிகளில் ஒன்றான செலான் புதிய நிதித் தீர்வுகளை வழங்குவதுடன் வங்கிகள் மத்தியில் சமூகவலைத்தளத்தில் முன்னோடியாகத் திகழ்கின்றது.

# மெட்ரோபொலிடனின் காட்சியறை கிளிநொச்சியில் திறந்து வைப்பு



மெட்ரோ பொலிடன் (Metropolitan) தமது புத்தம் புதிய விற்பனையாளர் காட்சியறையை அண்மையில் கிளிநொச்சியில் திறந்துள்ளது.

ஏ-9 நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்தக் காட்சியறையானது திருமதி சுலேகா லுரேந்திரனின் உடைமையானதும், அவரால் நிர்வகிக்கப்படு வதுமான 'சன் பேர்னி சிட்டி' (Sun Ferni City) யுடன் பங்குடைமையானதாகும்.

தகவல் தொழில்நுட்பம், பொறியியல், ஒளியூட்டல், பிரதிமையாக்கல் மற்றும் பணித்தளத் தீர்வுகளைத் தேடும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வாழ் வாடிக்கையாளர்களின் தேவைகளை இந்தக் காட்சியறையானது முழுமை செய்யும்.

"மெட்ரோ பொலிடனில் நாம் விற்பனை செய்யும் கணினிகள், அச்சியந்திரங்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், வளிசீராக்கிகள் மற்றும் சகல பொருள்களையும் இந்தக் காட்சியறை கொண்டிருக்கும். பிரசித்திபெற்ற உள்ளூர் நிறுவனமான சன் பேர்னி சிற்றியுடன் இணைந்து கொண்டமைக்கு நாம் மிகவும் பெருமைப்படுகின்றோம் – என்று மெட்ரோ பொலிடன் குழுமத்தின் குழு நிலைப் பணிப்பாளர் ஐவோ மஹரூப் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் இந்தப் புதிய வலையமைப்பு விரிவாக்குவதன் மூலம், மெட்ரோபொலிடன் வாடிக்கையாளர்களுக்கு, விரைந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் பொருள்களை சுலபமாக அணுகல் என்பவற்றை உறுதி செய்ய முடியும். இந்தப் புதிய காட்சியறை மிக விசாலமாக வடிவமைக்கப்பட்டு, வடபகுதி வாடிக்கையாளர்களுக்கு உதவுதற்கென ஓர் அர்ப்பணிப்பான வாடிக்கையாளர் உதவிப் பிரிவையும் கொண்டுள்ளது.

தகைமையுறு பொறியியலாளர்கள், பயிற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் என்போர் கொண்ட குழுவால் சேவைகள் மற்றும் உதவிப் பிரிவு வலுவூட்டப்பட்டுள்ளன. அத்துடன், மெட்ரோ பொலிடனில் விற்பனையாகும் சகல பொருள்களினதும் உதிரிப்பாகங்களையும் நுகர் பொருள்களையும் இது உள்ளடக்கியிருக்கும்.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள தனிப்பட்ட வாடிக்கையாளரது மட்டுமன்றி, இந்தப் பகுதிகளிலுள்ள பற்பல அரச மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களினதும் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் சன் பேர்னி சிட்டி பலப்படுத்தப்பட்டிருக்கும்.

"எமது வாடிக்கையாளர்கள் பலதரப்பட்ட பிரபல்ய வர்த்தக நாம பொருள்களைக் கொள்வனவு செய்வதை மேலும் இயலுமானதாக்கும் விதத்தில், வர்த்தக ஸ்தாபனங்களின் வசதி கருதி, சுலப கொடுப்பனவு முறைமையையும் ஆரம்பித்துள்ளோம்" என்று சன் பேர்னி சிட்டியின் உரிமையாளர் திருமதி சுலேகா லுரேந்திரன் கூறினார்.

# தனது உற்பத்தியை கொழும்பில் ஆரம்பிக்கிறது வொக்ஸ்வெகன்

## 29 லட்சம் ரூபாவில் புதிய கார்கள் கிடைக்கும்

கொழும்பு, ஜூலை 4

அதிகளவான மோட்டார் கார்களை உற்பத்தி செய்வதில், உலகில் இரண்டாவது இடத்தில் உள்ள வொக்ஸ்வெகன் நிறுவனம், இலங்கையில் தனது கார் உற்பத்தியை ஆரம்பிக்க உள்ளது.

தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் குளியாப்பிட்டியில் ஆரம்பமாகவுள்ளன.

பொதுத் தேர்தல் காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியிருந்த வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே, இந்த நிறுவனம் தனது வர்த்தகச் செயற்பாடுகளை இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளது என்று கூறப்படுகிறது.

"ஐரோப்பாவில் தயாரிக்கப்படுகின்ற 1000 சீசீ கொள்ளளவு கொண்ட இயந்திரத்துடன் கூடிய வொக்ஸ்வெகன் காரே இங்கும் உற்பத்தி செய்யப்படவுள்ளது. இங்கு தயாரிக்கப்படவுள்ள வொக்ஸ்வெகன் கார் ஒன்றை 29 இலட்சங்களுக்குக் கொள்வனவு செய்யலாம். இந்தத் தொழிற்சாலையின் செயற்பாடுகள் ஆரம்பமானதன் பின்னர் நாடு முழுவதும் அதன் மூலம் நன்மைகள் கிட்டும் – என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

(உ-இ-ரி.2,2)

# நுட்பம்



## கண்கவர் வடிவமைப்பில் புதிய தொடுபேசி

ZTE நிறுவனம் தொடுபேசி சந்தையில் தனக்கென ஓர் இடத்தைக் குறுகிய காலத்தில் பிடித்துவிட்டது. இந்த நிலையில் தற்போது அந்த நிறுவனம் ஏனைய முன்னணி நிறுவனங்களுடன் போட்டி போடக்கூடிய வகையில், சிறந்த தொடுபேசிகளை அறிமுகம் செய்ய ஆரம்பித்துள்ளது.

இந்த வரிசையில் தற்போது ZTE Nubia Z11 எனும் தொடுபேசியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. மிகவும் கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்டுள்ள தொடுபேசியின் தொடுதிரையானது 5.5 அங்குல அளவு உடையதாகவும், 1920 x 1080 Pixel Resolution உடையதாகவும் காணப்படுகின்றது.

அத்துடன் இரண்டு வகை பதிப்புக்களாக வெளிவரவுள்ள இந்தத் தொடுபேசியில் Snapdragon 820 Processor,பிரதான நினைவகமாக 4GB RAM மற்றும் 6GB RAM என்பனவற்றுடன் 64GB, 128GB சேமிப்பு நினைவகத்தையும் கொண்டுள்ளது.

அத்துடன் 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்பை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

## மாணவர்களுக்காக கூகுளின் புதிய வசதி

சில மாதங்களுக்கு முன்னர் கூகுள் நிறுவனம் தான் வழங்கி வந்த Google Project எனும் சேவையை நிறுத்தியிருந்தமை தெரிந்ததே.

இந்தச் சேவையானது சிறுவர்களின் அறிவை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தற்போது மேற்கண்ட சேவைக்கு பதிலாக Google Cast எனும் சேவையை அறிமுகம் செய்யவுள்ளதாக அந்த நிறுவனம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் விசேட அப்பிளிக்கேசன் மூலம் மாணவர்கள் தமது கணினிகளை ஒன்றிணைத்து பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிலும் வயர்லெஸ் தொழில்நுட்பம் மூலம் இணைக்கக் கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

இது தவிர வகுப்பறையிலுள்ள பெரிய திரை ஒன்றில் கற்பிக்கப்படும் விடயங்களை, தமது கணினிகளிலும் பார்வையிடுவதுடன், தமது கணினியில் உள்ள விடயங்களை பெரிய திரையிலும் பகிர்ந்து கொள்ளக் கூடிய வசதியை இது தரக்கூடியதாக இருக்கும். இந்த வசதியை விளக்கும் வீடியோ தொகுப்பு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேஜஸ்

தேஜஸ், உயர் போரிடும் திறன் கொண்டதாக இருக்கும். இதில், கண்ணாடியிலான விமான அறை, செய்மதி உதவியுடன் கூடிய வழிகாட்டல் முறை, கணினி மயப்படுத்தப்பட்ட டிஜிட்டல் முறையிலான தாக்குதல் முறை, வானில் இருந்து வானுக்கு செலுத்தும் ஏவுகணைகள், வானில் இருந்து தரை இலக்கைத் தாக்கும் ஆயுதங்கள், வழிகாட்டல் குண்டுத் தொகுதிகள், வானத்திலேயே எரிபொருள் நிரப்பும் வசதிகளையும் இந்த தேஜஸ் போர் விமா னங்கள் கொண்டிருக்கும் - என்றார் இந்திய பாதுகாப்பு அமைச்சர்.

தேஜஸ் போர் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் ஏற்கனவே விருப்பம் வெளியிட்டிருந்தன. இந்திய விமானப்படையில், இந்த ஆண்டில் ஆறு தேஜஸ் போர் விமானங்களும், அடுத்த ஆண்டில் எட்டு தேஜஸ் போர் விமானங்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. (வ-5)

## அயலவரிடம்

இருந்தாலும் இதற்கு உரிய தீர்வினைக் காண்பதற்கு அரசினால் முடியாமல் போயுள்ளது. இதற்கு மாறாக என் மீது போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்து வதிலேயே குறியாக உள்ளனர்.

அதைச் சுமத்துவதனை விடுத்து, மக்களின் சுமையைக் குறைத்து உரிய முறையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். தற்போது வற் வரி அதிகரிப்பு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த அரசின் செயற்பாடுகளின் காரணமாகவும் சீரற்ற பொருளாதார கொள்கையினாலும் அன்றாடம் சாதாரண வீடுகளில் நடக்கும் கொடுக்கல் வாங்க லுக்கும் வரி செலுத்த வேண்டி யேற்படும் - என்றார். (வ-5)

## இலங்கையின்

உடன்பாடுகள் கைச் சாத்திடப்பட்டன.

சீன எக்சிம் வங்கியின் முதலீட்டில் 360.3 மில்லியன் டொலர் செலவில், தெற்கு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் - 2, அக்ரிகோல் பிரான்ஸ் கடனுதவியில் 123.7 மில்லியன் யூரோ செலவிலான பெரும்போக மாத்தளை நீர் விநியோகத் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் முதலீட்டில் 100 மில்லியன் டொலர் செலவிலான சிறிய, நடுத்தர தொழிற்றுறைக்கான கடன் திட்டம் என்பன இவற்றில் பெரிய திட்டங்களாகும்.

இதைவிட, கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் இரண்டாவது நிலைக்காக, ஜப்பானிய அரசு இந்தக் காலப் பகுதியில் 402.7 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது.

இந்த ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில், பல்வேறு இருதரப்பு மற்றும் பலதரப்பு பங்காளர்களிடம் இருந்து, 311.7 மில்லியன் டொலர் உதவிக்கான வாக்குறுதிகள் கிடைத்தன. இதில், 301.9 மில்லியன் டொலர் கடனுதவியாகும். எஞ்சிய 9.95 மில்லியன் டொலர் கொடையாகும்- என்றுள்ளது. (வ-5)

## பொருளாதார

போய்க் கொண்டிருக்கின்றன" என்று தெரிவித்தார்.

பதிலளித்த இரா.சம்பந்தன், "எங்களுக்கு கொழும்பு அரசு நிதி ஒதுக்கீடே மேற்கொள்வது அருமை. அந்த நிதியை ஒதுக்கினால் அதற்கு என்ன நடந்தது என்பதை அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். எங்களிடம் செலவு செய்யத் தந்த நிதியை, செலவு செய்யாமல் நாங்கள் வைத்திருந்தால் அவர்கள் பேசாமல் இருக்க மாட்டார்கள். இதனால் திட்டத்தை மாற்றுவது இயல்பானது. திட்டம் செயற்படுத்தப்படாமல் இந்த நிதி வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்பட்டால், நீங்கள் அனைவரும் தமிழ் மக்க ளால் துரோகிகளாகவே பார்க்கப்படுவீர்கள்" - என்றார்.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை ஒரு நாடகம். சபையில் திடீர் பதற்றத்தை உருவாக்கியே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கசாப்புக் கடைக்கு கொண்டு செல்லப்படும் ஆடுகளுக்கு குழை கொடுக்கப்படும். அந்த ஆடுகள் தங்களை வெட்டக் கொண்டு செல்வதை அறியாமல் தலையை ஆட்டி கொண்டு செல்லும். இறுதியில் தான் அவைக்கு தங்களை வெட்டப் போவது தெரியும். இதேபோன்றுதான் விடயங்களைப் புரியாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்" - என்றார்.

இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவமோகன், "கசாப்புக் கடைகளைச் சொல்லியே வடக்குக்கு வந்த பல திட்டங்களை நிராகரித்துள்ளீர்கள் - என்றார்.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், "வடக்கு மாகாண சபையில் தாண்டிக்குளத்தில் அமைப்பது என்று நிறைவேற்றிய தீர்மானம் சபையில் கோரம் இல்லாத போது நிறைவேற்றப்பட்டது. சபையில் 12 பேர் மாத்திரமே தீர்மானம் நிறைவேற்றப்படும் போது இருந்தனர்" என்று தெரிவித்தார். இதற்கு அமைச்சர் ப.சத்தியலிங்கம், அந்த நேரத்தில் சபையில் அவைத் தலைவருடன் சேர்த்து 25 பேர் இருந்தனர் என்று தெரிவித்து சபையின் ஹன்சாட்டை முதலமைச்சருக்கு காண்பித்தார்.

நாடாளுமன்ற உறுப்பின் சிவசக்தி ஆனந்தன், தாண்டிக்குளம் என்று முடிவெடுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தும்போது, மக்கள் இல்லை அதனை ஓமந்தையில்தான் அமைக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தினால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார்.

இதற்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனநாயகத்தை மதித்து செயற்படவேண்டும். மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானவர்கள் எந்த இடத்தை தெரிவு செய்கின்றனரோ, அந்த இடத்தில்தான் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படும். ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும். மக்கள் போராட்டம் நடத்தினால் அதனை அப்போது பார்ப்போம் - என்றார். (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து சிவநாதன் (சிவம்)



யாழ்.மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சிவநாதன் 30.06.2016 வியாழக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து- கனகம்மா (கனடா) தம்பதிகளின் அன்புப் புத்திரரும், அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ்.மகாஜனக் கல்லூரி) - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - வாலாம்பிகை தம்பதிகளின் பெற்றெடுக்கா மகனும், நளினியின் (ரதி- முன்னாள் ஆசிரியை - யாழ். மகாஜனக் கல்லூரி) பாசமிகு கணவரும், மிராளினி (மீரா), சிமிதா (சிமி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகநாதன் (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன்.யோகமலர் (பிரித்தானியா), சாந்தி நாதன் (கனடா), காலஞ்சென்ற கதிர்காமநாதன், சோதிநாதன் (நோர்வே), காலஞ்சென்ற கமல நாதன், சந்திரமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருபாகரனின் (ஆஸ்திரேலியா) உடன் பிறவாச் சகோதரரும், இலட்சுமிதேவி (கனடா), அன்னபூரணம் (உரும்பிராய்), சந்திர குமாரன் (பிரித்தானியா), உஷா (கனடா),உமாராணி (கனடா), சுகுமாரி (நோர்வே), மகேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான பவானந்தன், வசுமதி மற்றும் இந்திரா (ஆஸ்திரேலியா), தாரணி (கனடா), காலஞ்சென்ற சசிகலா, மேகலா (பிரான்ஸ்), சூரியகலா (அளவெட்டி வடக்கு), காலஞ்சென்ற ஸ்ரீகாந் ஆகியோரின் அருமை மைத்துனரும், இராசநாயகம் (அளவெட்டி வடக்கு), கதிர்காமநாதன் (கனடா),சத்தியேஸ்வரி (டென்மார்க்), சிவகுமார் (பிரான்ஸ்), கிருபாகரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு:-** **தகவல்: குடும்பத்தினர்.**

**நளினி (ரதி-மனைவி-கனடா -+1647 346 1834), மீரா (மகள்-கனடா - +1647 992 1824) , சாந்திநாதன் (சகோதரர் -கனடா- +141 629 78759, +141 667 18742), +141 688 95883**

**இராசநாயகம் (அளவெட்டி வடக்கு) - 077 603 0319,**
**திருமதி ப.அன்னபூரணம் (உரும்பிராய்) - 021 223 0817** (J/2633) (11,17,18)

### இராமலிங்கம் சின்னத்தம்பி



பிறப்பு 22.03.1927 இறப்பு 02.07.2016

யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.2, பெரிய தம்பனையை வதிவிடமாகவும் தற்போது இல.179/10, மூன்றாம் ஒழுங்கை, திருநாவற்குளத்தில் வசித்தவருமாகிய இராமலிங்கம் சின்னத்தம்பி 02.07.2016 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராம லிங்கம் -குஞ்சாட்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி - குஞ்சாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகமுத்துவின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2016) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.179/10, மூன்றாம் ஒழுங்கை,**
**திருநாவற்குளம்,**
**வவுனியா.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 515 5393**
(வீ.12) (13.18)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் - மகேந்திரராசா

(மகேந்திரம் மாஸ்டர்)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்டிருந்த சுப்பிரமணியம் மகேந்திரராசா (இளைப்பாறிய ஆசிரியர்), நேற்று முன்தினம் (02.07.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லமுத்துவின் அன்புக் கணவரும், கிருபாகரன் (கனடா), கிரிகரன் (ஐக்கிய இராச்சியம்), கருணாகரன் (கனடா) ஆகியோரது அன்புத் தந்தையாரும், மாதவி, யாழினி, கல்பனா ஆகியோரது அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பண்டிதர் வேலுப்பிள்ளை (சு.வே), தங்க லட்சுமி, கண்மணி, நடராசா மற்றும் சரஸ்வதி ஆகியோரது அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், முருகையா, வீரசிங்கம் மற்றும் மனோரஞ்சிதம், நாகமுத்து, முத்துராசா, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் அருளானந்தம், காலஞ்சென்றவர்களான நடேஸ்வரன், தயாளன் ஆகியோரது அன்பு மைத்துனரும், விசாகன், ஓவியா, வைசாலி, வைஷிகா, சஹானா, சாயனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**கூட்டுறவு வீதி,**
**நாவற்குழி.**
**தொ.பே.021 205 0959**

தகவல்:
**குடும்பத்தினர்.**
(ஜே.2628) (13.18)

சட்டத்தரணி

### கார்த்திகேசு முருகதாஸ் இராதாகிருஷ்ணன்



யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சட்டத்தரணி கார்த்திகேசு முருகதாஸ் இராதகிருஷ்ணன் அவர்கள் 03.07.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (முன்னாள் தலைவர் நல்லூர் கிராமசபை, ஓய்வுநிலை புகையிரத நிலைய அதிபர்), மாணிக்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாபதி - அன்னைபகவதி தம்பதியரின் மருமகனும், சக்திமதியின் பாசமிகு கணவரும், புருஷோத்தமனின் (தரம் - 09, பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) அருமைத் தகப்பனாரும் முத்துக்கிருஸ்ணனின் (ஓய்வுநிலை ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை) அன்புச்சகோதரரும், சக்திக்குமார் (கனடா), சதாமதி (கனடா), சாந்திமதி (கனடா), சிந்துமதி (கொழும்பு), கலைவாணி (ஓய்வுநிலை உப அதிபர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், கஜனி (பௌதிக விஞ்ஞானபீடம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), நிவேதா (இயன் மருத்துவ பீடம் - பேராதனை பல்கலைக்கழகம்) மாதுரி (உயர்தர விஞ்ஞானப் பிரிவு - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் சண்முகநாதன், விக்னேஸ்வரன், செல்வி, மதியழகன் ஆகியோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 158, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (04.07.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**158, சட்டநாதர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொ.பே. 021 492 3476/ 075 858 3315**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிகாயத்துக்குள்ளான குடும்பப்பெண் உயிரிழப்பு

தென்மராட்சி ஜூலை 4
எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த குடும்பப் பெண் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். கைதடியைச் சேர்ந்த ஜெயராஜ் மதனரதி (வயது - 35) என்பவரே உயிரிழந்தார்.
குடும்பத் தகராறு காரணமாக கடந்த 27 ஆம் திகதி குறித்த குடும்பப் பெண் தனக்குத்தானே தீ மூட்டினார் என பொலிஸாரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
(வ-9)

# வடக்கு மாகாண அதிகாரிகள் இன்று பிலிப்பைன்ஸ் பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
பாடசாலை கல்வி அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறையில் பங்கேற்பதற்காக வடக்கு மாகாண அதிகாரிகள் 30 பேர் இன்று பிலிப்பைன்ஸ் பயணமாகின்றனர். அவர்கள் இன்றிரவு விமானத்தில் புறப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
உலக வங்கியின் அனுசரணையில் வடக்கு மாகாண பாடசாலை கல்வி அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறை 4 தினங்கள் பிலிப்பைன்ஸில் இடம்பெறுகின்றது.
வடக்கு மாகாண தலைமைச் செயலாளர், நிதி விவகாரங்களுக்கான பிரதி தலைமைச் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் 10 வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் உள்ளடங்கிய குழுவினரே பயணமாகின்றனர்.
இந்தப் பயிற்சிப் பட்டறை யானது பல பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டது. இதற்கு நாட்டின் ஏனைய மாகாண அதிகாரிகள் சென்றிருந்தபோதிலும், வடக்கு, கிழக்கின் அதிகாரிகள் தற்போதே செல்கின்றனர்.
(வ-101)


## வேலை வாய்ப்பு

110 நாடுகளில் இயங்கிவரும் எமது
International Company இற்கு நிர்வாகம் சம்பந்தமான வேலை வெற்றிடங்கள் உள்ளன.
O/L, A/L படித்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தகுதிகாண் காலத்துக்கு பின்னர் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான வாய்ப்பு பெற்றுத் தரப்படும்.
தொடர்புகளுக்கு
077 2986763, 077 0771377

## "அப்பா" பார்க்க வேண்டிய படம்

நான் இந்த நிலைக்கு வருவதற்கு காரணம் என் அப்பாவே. யாழ் ராஜா திரை அரங்கில் "அப்பா" படத்தை பார்க்கும்போது மலரும் நினைவுகளாக என் அப்பாவின் ஞாபகம் வந்தது. ஒரு அப்பா தனது பிள்ளையை படிப்பித்து நல்ல பிள்ளையாக வளர்க்க வேண்டும் என்பது இயக்குநரும் நடிகருமான p. சமுத்திரக்கனியின் நம்பிக்கை. அந்த வகையில் அவர் வாழ்ந்து காட்டியுள்ளார். படத்தைப் பார்க்கும் போது மூன்று தடவைகள் கண் கலங்கி விட்டேன். சாட்டை படத்துக்குப் பின்னர் நல்லதொரு படத்தை பார்த்த திருப்தி. அனைவரும் குடும்பத்தோடு பார்க்க வேண்டிய படம். பிள்ளைகள், மாணவர்கள், நல்ல இயல்புகளை கண்டு கொள்ள கற்றுக்கொள்ளக் கூடிய படம், "அப்பா" தவறாது அப்பாவை பாருங்கள்.

வீடியோ கலாமினி
மா. சிவமூர்த்தி,
077 3053080
இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்,
அச்சுவேலி.


# பல்கலை. மாணவர் உதவுதொகை உடனடியாக வழங்கவேண்டும்

## உயர்கல்வி அமைச்சர் அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 4
பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல மற்றும் உதவு தொகைகளை பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொள்ளவேண்டும்.
இதனை அறிவுறுத்தினார் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.
மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல்களை பல்கலைக்கழகங்களுக்கு உடனடியாக அனுப்பவேண்டும். இந்தப் பட்டியல்கள் கிடைக்கும் வரையும் மாணவர்களுக்கான உதவு தொகைகளை பல்கலைக்கழக துணைவேந்தர்கள் வழங்கவேண்டும் எனவும் உயர்கல்வி அமைச்சர் தெரிவித்தார்.
பல்கலைக் கழக கட்டமைப்புக்குள் நிலவும் பிரச்சினைகள், சிக்கல்களைத் தீர்த்து விடுவது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில் கடந்த 30 ஆம் திகதி கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் பீ.எஸ்.எம்.குணரத்ன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கலந்து கொண்டனர்.
(வ-22)

# விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

தென்மராட்சி, ஜூலை 4
விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த முதியவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்தார்.
சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாகக் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த செல்லையா மனோகரன் (வயது 73) என்பவர் படுகாயமடைந்தார். இவரே சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
சாவகச்சேரி சந்தைக்குச் சென்று விட்டு வீடு திரும்பியபோது, பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதுண்டதில் கீழே வீழ்ந்து படுகாயமடைந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததுடன், டிப்பர் சாரதியையும் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தினர். சாரதியை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.
தென்மராட்சி பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.இளங்கீரன் ஊடாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.
(வ-4,9)

## மரண அறிவித்தல்

### செல்லையா மனோகரன்

(ஓய்வு பெற்ற மக்கள்வங்கி முகாமையாளர் - சாவகச்சேரி)

தோற்றம்
16 . 02 . 1943



மறைவு
02 . 07 . 2016

வவுனியா குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் கண்டிவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மனோகரன் கடந்த (02.07.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா (ஓய்வு பெற்ற அதிபர்)-மலர்மாலை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் லங்காதேவியின் (ஓய்வு பெற்ற சாவகச்சேரி பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர்) அன்புக் கணவரும் மனோரஞ்சிதம் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் பத்மாவதி காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் கனகரட்ணம், மல்லிகாதேவி (ஆஸ்திரேலியா), சிறிதேவி (கனடா), ரவீந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, யோகம்மா மற்றும் பரமேஸ்வரி (லண்டன்) , அன்னலட்சுமி (லண்டன்), காலஞ்சென்ற Dr.குணசிங்கம் மற்றும் ராசாத்தி, பொன்னம்பலம் (சட்டத்தரணி, கொழும்பு), Dr.பாலசிங்கம் (லண்டன்), தவமணி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.07.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் "லங்காவாசா" கண்டி வீதி, சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டி வீதி, சாவகச்சேரி.
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சேனாதிராசா குலேந்திரராசா

வல்லை வீதி தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா குலேந்திரராசா (திருப்பதி, இந்திரன்) 03.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திரு, திருமதி சேனாதிராசா மங்களேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், சின்னத்தம்பி இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சாரங்கன், பிரவீனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.07.2016 திங்கட்கிழமை பிற்பகல் 2 அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கிந்துசிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.
தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேந்திரனை வியாழனன்று விசாரிக்கின்றது கோப் குழு

கொழும்பு, ஜூலை 4
இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை எதிர்வரும் 7 ஆம் திகதி கோப் குழு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
மத்திய வங்கியின் திறைசேரி முறிப்பத்திர விற்பனையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணை அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.
2 ஆயிரத்து 251 பக்கங்களைக் கொண்ட அறிக்கையின் பிரதிகள் கோப் குழுவின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டன.
இந்த அறிக்கை தொடர்பில் மத்திய வங்கி, நிதி அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளிடம் கருத்துகளைக் கோரும் நோக்கில் அவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
மத்திய வங்கியின் 14 ஆவது ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி இன்று உத்தியோகபூர்வமாக நியமனம் பெறுகிறார்.
இதற்கான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது ஜனாதிபதியால் நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்படும். (வ-5)

# கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு உசார் நிலையில்

கொழும்பு, ஜூலை 4
கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் பாதுகாப்பு தொடர்பில் சகல முன்னாயத்த நடவடிக்கைகளும் மேற் கொண்டுள்ளதாக விமான நிலையத்தின் பாதுகாப்பு தலைமை அதிகாரி தம்மிக விஜயசூரிய தெரிவித்தார்.
பல நாடுகளின் விமான நிலையங்களில் பயங்கரவாதத் தாக்குதல்கள் அண்மையில் இடம்பெற்றன. இதனையடுத்தே, கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலை யத்தின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டது.
விமான நிலையத்தில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இந்தப் பாதுகாப்பு அதிகரிப்பினால் பொதுமக்களுக்கு எதுவித பாதிப்புக்களும் ஏற்படாது. இருப்பினும் விமான நிலையத்தின் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ள தாக பாதுகாப்பு தலைமை அதிகாரி குறிப்பிட்டார். (வ-5)

# பேராதனைப் பல்கலை பொறியியல் பீடத்தில் தீ

கண்டி, பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று இரவு தீ விபத்து ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. பொறியியல் பீடத்தின் முதலாவது மாடியில் தீப்பற்றி எரிவதை நேற்று இரவு 8.40 மணியளவிலேயே அவதானித்தனர். உடனடியாக தீயணைப்பு பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.
சுமார் இரண்டு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
பொறியியல் பீடத்தின் முதலாம் மாடி முழுவதுமாக சேதமடைந்தது. சேதவிவரங்கள் தொடர்பில் நேற்று நள்ளிரவு வரையில் தகவல்கள் வெளியாகவில்லை.
தீ விபத்துக்கான காரணமும் கண்டறியப்பட வில்லை. (வ-5)

## சனத்தொகையை

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆகியவற்றின் அறிக்கைகள் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது.
2014 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த சனத்தொகை 2 கோடியே 7 இலட்சத்து 71 ஆயிரமாக இருந்தபோது, அலைபேசிகளின் எண்ணிக்கை 2 கோடியே 21 இலட்சத்து 23 ஆயிரமாகக் காணப்பட்டது.
2014 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த சனத்தொகையை விட, அலைபேசிகளின் எண்ணிக்கை 13 இலட்சத்து 52 ஆயிரமாக அதிகரித்துக் காணப்பட்டது.
இது கடந்த ஆண்டு அதிகரித்துள்ளது. (வ-5)

| ஆண்டு | சனத்தொகை | அலைபேசிகள் |
|---|---|---|
| 2000 | 18,467,000 | 430,202 |
| 2001 | 18,797,000 | 667,662 |
| 2002 | 18,921,000 | 931,580 |
| 2003 | 19,173,000 | 1,393,403 |
| 2004 | 19,435,000 | 2,211,158 |
| 2005 | 19,644,000 | 3,361,775 |
| 2006 | 19,858,000 | 5,412,496 |
| 2007 | 20,039,000 | 7,983,489 |
| 2008 | 20,217,000 | 11,082,508 |
| 2009 | 20,450,000 | 14,264,442 |
| 2010 | 20,653,000 | 17,246,567 |
| 2011 | 20,869,000 | 18,319,447 |
| 2012 | 20,328,000 | 20,324,070 |
| 2013 | 20,483,000 | 20,315,150 |
| 2014 | 20,771,000 | 22,123,000 |
| 2015 | 20,966,000 | 24,384,544 |

## தமிழர்கள்

இவ்வாறு பன்னாட்டு நீதிபதிகளைக் கோருவதன் மூலம், அந்த முயற்சிகளும் பயனற்றுப் போய்விடும் என்று அஞ்சுகிறோம்.
பன்னாட்டு நீதிபதிகளை விசாரணைப் பொறிமுறையில் ஈடுபடுத்த அரசமைப்பில் இடமில்லை. அரசமைப்பை மீறி எதனையும் செய்ய முடியாது - என்றார். (வ-5)

## தனியார்

பின்னரே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக, கெமுனு விஜயரத்ன குறிப்பிட்டார்.
பஸ் கட்டணத்தை அதிகரிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தன. இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை, கடந்த வெள்ளிக்கிழமை இரவு சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தன. அரசுடனான பேச்சு வெற்றியளிக்கவில்லை. இதனால் நாடு முழுவதும் தனியார் பஸ்கள் சேவைப் புறக்கணிப்பு நேற்று நள்ளிரவு முதல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் வடக்கு மாகாணத்தில் தனியார் பஸ் சேவைப் புறக்கணிப்பு இடம்பெறாது என்று வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்திருந்தது.
இவ்வாறானதொரு நிலையிலேயே, ஜனாதிபதியுடனான சந்திப்பை அடுத்து நாடு முழுவதுமான தனியார் பஸ்களின் சேவைப் புறக்கணிப்பு நடவடிக்கை கைவிடப்பட்டது. (வ-5)

## பொருளாதார

பட்டது.
வடக்குக்கு பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு கொழும்பு அரசினால் நிதி ஒதுக்கப்பட்டது. இதற்குரிய காணியை அடையாளப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. பொருளாதார மத்திய நிலையத்தைத் தாண்டிக்குளத்திலேயே அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும், இதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இணக்கம் தெரிவிக்கவில்லை.
நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைக்கவேண்டும் என்றும் ஓமந் தையில் அமைக்க வேண்டும் என்றும் வவுனியா மாவட்டத்தில் ஏட்டிக்குப் போட்டியான போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.
இந்த விடயத்தில் முடிவு எடுப்பதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களையும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கொழும்புக்கு அழைத்திருந்தார். இந்தக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணியிலிருந்து ஒரு மணி வரை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.
கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, க.சிவமோகன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான த.குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன், ப.சத்தியலிங்கம், பா.டெனீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் கூட்டத்தில் கலந்து கொள்ளாத போதும், தனது முடிவைக் கடிதத்தின் ஊடாகக் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அறிவித்திருந்தார்.
கூட்டத்தின் ஆரம்பத்தில் வடக்கு முதலமைச்சர், தாண்டிக்குளம் ஏன் பொருத்தமற்ற இடம் என்பதற்கான விளக்கத்தைக் கொடுத்தார். இதன் பின்னர் ஒவ்வொருவரும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இதில் எந்த உறுதியான முடிவும் எட்டப்படவில்லை.
இதனையடுத்து ஓமந்தையிலா அல்லது தாண்டிக்குளத்திலா அமைப்பது என்பது தொடர்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவரிடமும் தனித்தனியே கருத்துக் கேட்கப்பட்டது. இதற்குத் தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்று 6 பேரும், ஓமந்தையில் அமைக்க வேண்டும் என்று 5 பேரும் விருப்பம் தெரிவித்தனர்.
தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், க.சிவமோகன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, செல்வம் அடைக்கலநாதன், அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், பா.டெனீஸ்வரனும், ஓமந்தையில் அமைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், சிவசக்தி ஆனந்தனும், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜாவும் விருப்பம் தெரிவித்தனர்.
இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், "நீங்கள் (இரா.சம்பந்தன்) ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், முதலமைச்சர்தான் இந்த விடயத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அதனடிப்படையிலேயே அவரை முடிவெடுக்க விடுங்கள்" என்று தெரிவித்தார். "நான் அதில் தெளிவாகத்தான் குறிப்பிட்டேன். முதலமைச்சர்தான் முடிவெடுக்கவேண்டும். அதனை அவர் தனித்து எடுக்க முடியாது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுடனும், வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் சேர்ந்துதான் எடுக்க வேண்டும் என்றேன். அதனை அந்த ஊடகம் பிரசுரிக்காவிட்டால், அதற்கு நான் பொறுப்பல்ல" என்று பதிலளித்தார் சம்பந்தன்.
இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இவ்வளவு தூரம் நாம் எல்லோரும் வந்து விட்டோம். நீங்கள் இப்போது ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அத்துடன் செல்வம் அடைக்கலநாதன் வராமல் அவரது கடிதத்தை வைத்து எப்படி முடிவு எடுப்பீர்கள் என்று இரா.சம்பந்தனிடம் கேட்டார்.
"என்னிடம் தனிப்பட்ட ரீதியில் மாவை. சேனாதிராசாவும், சுமந்திரனும் தாங்கள் தாண்டிக்குளத்திற்கே ஆதரவு என்று தெரிவித்தனர். ஆனால் அதனை நான் இங்கு சொல்லவில்லை. அவர்கள் ஊடகம் மூலம் அதனை அறிவிக்கவில்லை. இப்போது முடிவெடுப்பதாக இருந்தால் தாண்டிக்குளம் என்றுதான் தீர்மானிக்க வேண்டிவரும். நான் முன்னரே சொன்னதைப் போன்று முதலமைச்சர் இந்த விடயத்தில் முடிவெடுக்கட்டும்.
வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 30 பேரிடமும், வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேரிடமும் தனித்தனியே அவர்களின் கருத்தை அறிந்து ஜனநாயக ரீதியில் முதலமைச்சர் முடிவை எடுக்கட்டும். இதனை ஒரு வார காலத்தினுள் முதலமைச்சரே செய்து முடிக்கட்டும்"-என்றார் இரா.சம்பந்தன்.
தலைவரின் முடிவை ஏற்பதாக முதலமைச்சரும் தெரிவித்தார். (வ-5-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மரண அறிவித்தல்

### கதிரேசு கந்தையா (சந்திரன்)

(ஓய்வுபெற்ற இ.மி.ச உத்தியோகத்தர்)



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு கந்தையா நேற்று (03.07.2016) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், கார்த்திகேசு-இராசம்மா தம்பதிகளின் அன்பு மரு மக னும், பவளராணியின் அன்புக் கண வரும், கௌரிபாலன் (லண்டன்), சத்தியபாலன் (இ.மி.ச. மாங்குளம்), கவிதாசன் (இ.மி.ச. வட்டுக் கோட்டை), கோகுலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நளாயினி (லண்டன்), சாரங்கன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தேவராசா மற்றும் கிருஸ்ண ராசா, பூபதி, சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ருத்விகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு ,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# டோனியின் இடத்தை நிரப்புவது கடினமானது

## சஹா தெரிவிப்பு

டெஸ்ட் ஆட்டங்களில் டோனி ஓய்வு பெற்றதை அடுத்து மாற்று வீரராக அடையாளம் காணப்பட்டுள்ள சஹா, டோனியின் இடத்தை தன்னால் நிரப்ப இயலாது என்று தெரிவித்தார்.

இந்திய அணி அடுத்த வாரத்தில் டெஸ்ட் தொடருக்காக மேற்கிந்தியத் தீவுகளுக்கு பயணமாகவுள்ள நிலையில், குறித்த தொடருக்கான பயிற்சி முகாமில் வீரர்கள் கலந்துகொண்டுள்ளனர். முகாம் முடிவடைந்த பிற்பாடு நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சஹா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நான் டோனியை சந்தித்து பேசிக்கொள்வேன். அப்போது அவர் பவுன்ஸ் ஆடுகளங்களில் எப்படி கீப்பிங் செய்வது, துடுப்பாட்டத்தில் நெருக்கடி நிலைமைகளை எப்படி கையாள்வது என பல ஆலோசனைகளை வழங்கினார். துடுப்பாட்டத்திலும், இலக்குக் காப்பிலும் டோனியின் இடத்தை நிரப்புவது கடினம். அதிலும் குறிப்பாக இலக்குக்காப்பில் மிகவும் கடினம் என சஹா மேலும் தெரிவித்தார். (ம)







# இங்கிலாந்திடம் இலங்கை சரண்

இலங்கைக்கு எதிரான இறுதி ஒருநாள் ஆட்டத்தையும் வென்று தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது இங்கிலாந்து.

தொடரில் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இங்கிலாந்தின் ஆரம்ப வீரர்களாக றோய், வின்ஸ். இணைப்பாட்டமாக 50 ஓட்டங்கள் பகிரப்பட்டு அடித்தளம் பலமாக அமைக்கப்பட்டது. 34 ஓட்டங்களுடன் றோயை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் லக்மல். இணைந்தார் ரூட். மீண்டும் ஒரு சுமாரான இணைப்பாட்டம். அரைச்சதம் கடந்த வின்ஸை வெளியேற்றினார் குணதிலக. பரிஸ்ரௌவ், மோர்கன் இருவரும் முறையே 22, 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். சதத்தை நெருங்கினார் ரூட். விரைவான அரைச்சதத்தை நிறைவு செய்தார் பட்லர். 93 ஓட்டங்களுடன் ரூட்டை போல்ட் செய்தார் பிரதீப். முடிவில் இங்கிலாந்து 324-7.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக குணதிலக 3 இலக்குகளையும், லக்மல், பிரதீப், பண்டாரா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய இலங்கைக்கு, வெறும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பதற்றத்தை அதிகரித்தார் குசல் பெரேரா. குணதிலக, மெண்டிஸ் இணைய 50 ஓட்டங்களை எட்டியது இலங்கை. 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மெண்டிஸ். இரு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் குணதிலக. மிகவும் நிதானத்தை வெளிப்படுத்தினார் சந்திமல். மத்தியூஸ், தரங்க இருவரும் நிலைக்கவில்லை. தரங்க ஆட்டமிழந்த போது இலங்கை 106-5 என்றிருந்தது. 53 ஓட்டங்களுடன் சந்திமல் ஆட்டமிழந்ததுதான் தாமதம் பின்வரிசை தொடர்ச்சியாக சரிவுகண்டு 202 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை. 122 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இங்கிலாந்து.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக வில்லி 4 இலக்குகளையும், பிளங்கெட் 3 இலக்குகளையும், ரசிட் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

# இன்பமும் துன்பமும்

பிரேஸிலில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் பதக்கங்களை வெல்பவர்களுக்கு ஏராளமான ஊக்கத் தொகைகளை அறிவித்துள்ள கென்ய அரசு ஊக்கமருந்து விவகாரத்தில் எவராவது சிக்கி னால் அபராதத்துடன் 3 வருடம் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

நடுத்தர மற்றும் நெடுந்தூர ஓட்டப்பந்தயத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளில் கென்யாவும் ஒன்று. இந்த நாட்டைச் சேர்ந்தவர்களை 1000 மீற்றர், 5 ஆயிரம் மீற்றர், 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வெல்வது கடினம். இவ்வாறு ஓட்டப்பந்தயத்திற்கு பெயர் போன கென்யா தற்போது சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளது. அந்த நாட்டின் நாற்பதுக்கும் மேற்பட்ட தடகள வீரர்-வீராங்கனைகள் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கியுள்ளனர். இதனால் பதக்கப்பட்டியலில் பெரிய பின்னடைவு ஏற்படலாம் என எதிர்பார்க்



கப்படுகிறது. இதை தவிர்க்கும் வகையில், ரியோ ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் வீரர்-வீராங்கனைகளுக்கு அதிக அளவில் ஊக்கத்தொகை கொடுக்கப்படும், அதே வேளையில் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கினால் கடும் தண்டனை கொடுக்கப்படும் என்று அந்நாட்டின் துணை ஜனாதிபதி நேற்று குறிப்பிட்டார். இதன்படி வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 5 லட்சம் சில்லிங்கும் வெள்ளிப்பதக்கம் வெல்பவர்களுக்கு 7.5 லட்சம் சில்லிங்கும், தங்கம் வெல்பவர்களுக்கு 10 லட்சம் சில்லிங்கும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# வீனஸ் முன்னேற்றம்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் வெற்றி பெற்றார் வீனஸ் வில்லியம்ஸ்.


பன்னாட்டுத் தரப்படுத்தலில் எட்டாம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து மோதினார் 64ஆம் நிலையில் உள்ள டரியா. முதல் செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடி வென்றார் வீனஸ். 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாக பதிலடி கொடுத்தார் டரியா. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் இறுதிச் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றார் வீனஸ். (ம)



# விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்; நான்காவது சுற்றில் பெடரர்

விம்பிள்டன் தொடரில் நான்காவது சுற்றுக்கு முன்னேறினார் சுவிட்சர்லாந்தின் நட்சத்திர வீரரான பெடரர்.

கிராண்ட்சிலாம் ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் தொடர் லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற மூன்றாம் சுற்று ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து



மோதினார் இங்கிலாந்தைச் சேர்ந்த டானியல் இவான்ஸ். ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 6:4, 6:2, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய பெடரர் 3:0 என்று நேர் செற் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

# காயத்தில் உசைன்; ரியோவில் சந்தேகம்

தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக ஒலிம்பிக் தொடரில் உசைன் போல்ட் பங்கேற்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

ஒலிம்பிக் தொடருக்கான தகுதிகாண் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் போல்ட் கலந்துகொள்வதை ஏற்கனவே உறுதி செய்திருந்தார். ஆனால் போட்டி நடைபெறுவதற்கு முன்னர் நடைபெற்ற உடற்பயிற்சியின் போது அவரது தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனையில் போல்ட்டின் தொடைப் பகுதியில் தசை நார் கிழிவு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து அவர் இரு வாரங்கள் ஓய்வெடுக்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தமாதம் பிற்பகுதியில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள டயமன்ட் போட்டிகளில் போல்ட் தன்னை நிரூபித்தால் அதை வைத்து ஒலிம்பிக் தொடரில் கள



மிறங்க முடியும். எனினும் டயமன்ஸ் தொடருக்கு முன்பாக போல்ட் உடல் தகுதி பெறுவதென்பது சந்தேகமே. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

**சரஸ்வதியின் கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் ஊரெழுறோயல்அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணிமோதவுள்ளது.

**யாழ். தாச்சித் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஆனந்தா அணியை எதிர்த்து இருபாலை விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது.
(ம-23)



# உலகச் சம்பியன் அரையிறுதியில்

## இத்தாலியும் மிகப்பெரும் போராட்டம்

யூரோ கிண்ண கால்பந்துத் தொடரில் இத்தாலியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது ஜேர்மனி.

நடப்பு வருடத்தின் யூரோ கிண்ணத் தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இத்தாலியும், ஜேர்மனியும் மோதின. கோலெதுவும் பதிவாகாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் எந்தவொரு அணியும் ஏக ஆதிக்கம் செலுத்தவில்லை. மேலதிக நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்தன. சமநிலைத் தவிர்ப்பும் இழுபறியாக நீடித்துச் சென்றாலும் ஒருவாறாகத் தட்டித்தடுமாறி 6-5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஜேர்மனி.
(ம)

# விளைபூமியின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4

முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் இளந்தளிர், சென். ஆன்ஸ், உருத்திரபுரம் அணிகள் வென்றன.

விளைபூமியின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலாவதில் உதயசூரியன் அணியும், வட்டக்கச்சி இளந்தளிர் அணியும் மோதின. இதில் இளந்தளிர் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வலைப்பாடு சென். ஆன்ஸ் அணிக்கும் ஜெயந்திநகர் அணிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சென். ஆன்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாவதாக இடம்பெற்ற உருத்திரபுரம் அணிக்கும் பூநகரி இளந்தளிர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உருத்திரபுரம் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)

## மன்னார் வீரர் வீராங்கனைகளுக்கு தடகளத் தொடருக்காகப் பயிற்சி

மன்னார், ஜூலை 4

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் சிறப்பான பங்குபற்றலுக்காக மன்னார் மாவட்ட வீரர், வீராங்கனைகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர்கள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகி ஐந்து தினங்கள் வரை நடைபெறவுள்ளன. குறித்த தொடரில் பங்குபற்றவுள்ள மன்னார் மாவட்ட வீரர், வீராங்கனைகள் கணிசமான பதக்கங்களை வெல்லும் நோக்கில் கடந்த இரண்டு தினங்களாக பயிற்சிகள் வழங்கப்பட்டன. மூன்றாவது நாளான இன்றும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. மன்னார் வலயக் கல்வித் திணைக்களத்தினால் இந்தப் பயிற்சிமுகாம் ஒழுங்கமைக்கப்பட்டது. (ம-56)



# டயமன்ஸ் - ஞானமுருகன் இறுதிக்குத் தகுதி



டயமன்ஸ் அணி



ஞானமுருகன் அணி

யாழ்ப்பாணம், ஜூன் 4

யங்ஹென்றிஸ் வி.கழகம் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் டயமன்ஸ், ஞானமுருகன் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

**டயமன்ஸ் - சென். ஹென்றிஸ்**

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் பிறேம்குமார் டயமன்ஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார். மாற்றங்கள் இன்றி 1:0 என்ற டயமன்ஸின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 67ஆவது நிமிடத்தில் துசிகரன் டயமன்ஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. நீண்ட போராட்டத்தை வெளிப்படுத்திய சென். ஹென்றிஸ் 79ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்ய போதிலும் டயமன்ஸின் ஆதிக்கத்தைதகர்த்துவிட முடியவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது டயமன்ஸ்.

**ஞானமுருகன் - சென். யூட்**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து சென். யூட் அணி மோதியது. ஆட்டத்துடன் இணைந்து ஞானமுருகனின் ஆதிக்கமும் ஆரம்பமானது. 5ஆவது, 7 ஆவது நிமிடங்களில் ஜெகதீஸ் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் ஞானமுருகன் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது. 54ஆவது நிமிடத்தில் சென். யூட் அணியின் பகீரதன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். வாகீசன் 81 ஆவது நிமிடத்தில் ஞானமுருகனின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். 84 ஆவது நிமிடத்தில் ஜெகதீஸ் தனது ஹற்றிக் கோலைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது ஞானமுருகன். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இறுதியாட்டம் இந்தமாதம் 24 ஆம் திகதி நடைபெறும். (ம-422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அம்பாளின் கூடைப்பந்தாட்டம்; கே.கே.எஸ். அணி சம்பியன்

அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கூடைப் பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். அணி சம்பியனானது.

கொக்குவில் இந்துக் கல்லூரியிலுள்ள கூடைப் பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து சிவன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கே.கே.எஸ். அணி 59:53 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# இங்கிலாந்து – பங்களாதேஷ்; தொடர் நடைபெறுவதில் சிக்கல்

பங்களாதேஷில் உள்ள தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக அந்த நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட விருந்த தொடரை கைவிட இங்கிலாந்து கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது.

இங்கிலாந்து அணி அடுத்த மாதம் பங்களாதேஷுக்குச் சென்று இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாட இருந்தது. இந்த நிலையில் பங்களாதேஷில் உள்ள ஒரு விடுதியில் சில தினங்களுக்கு முன்னர் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டதில் இருபதுக்கும் அதிகமானோர் சாவடைந்தனர். இதனையடுத்து அங்கு பாதுகாப்புப் பிரச்சினை இருப்பதாகவும் இதனால் இங் கிலாந்து அணியைப் பங்களாதேஷுக்கு அனுப்ப சிக்கல்கள் இருப்பதாகவும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்தது. (ம)




# பல்கலைக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 4

அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் வலைப்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் யாழ். பல்கலை அபார வெற்றிபெற்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி 14:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)



நடப்பு வருடத்துக்கான ரூர் டி பிரான்ஸ் போட்டி நேற்று ஆரம்பமானது. 198 பந்தய வீரர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர். (ம)

SPOKEN ENGLISH
இளைஞர் யுவதிகள், O/L, A/L எழுதியோர், தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்கள்கூட 3 மாதங்களில் எம்முடன் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 09. 07. 2016
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00
வாரநாள் வகுப்புகள் (செவ்வாய், வியாழன்)
காலை 10–12
இன்றிலிருந்து பதிவுகளை மேற்கொள்ளமுடியும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்!
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரிபின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி உயர்ந்த மதிப்பெண்களை பெற்று வெற்றியை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு
கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளில் தினமும் ஈடுபடுகின்ற வினைத்திறன் கொண்ட இலங்கையில் முதன் முதலாக பதுளை, ஹட்டன், நுவரெலியா, புசல்லாவ, அக்கரைப்பற்று, வவுனியா, மன்னார், காரைநகர், நெல்லியடி யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 12 ஆசிரிய வளவாளர்களால் தொகுக்கப்பட்டு 12 மாதிரி வினாத்தாள்களுடன் (விடை - கையேடு) வெளிவந்துள்ளது
பூமாலை
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
விலை : 450/-
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
தொ.பே : 077 6258778
தரம் 1 முதல் 5 வரை முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில் இரண்டாம் தவணை மாதிரி வினாத்தாள்கள்
யாழ் எக்ஸ்பிரஸ்
மாணவர்களே! வாங்கி படியுங்கள்! வித்தியாசத்தை உணர்வீர்கள்

SLEAS
விசேட எதிர்பாக்கை இறுதி கருத்தரங்கு
யாழ்ப்பாணத்தில்
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில்
திங்கள், செவ்வாய் வியாழன் 4.00-6.30 மணிவரை
புதன் 9.00-4.00 மணிவரை
வெள்ளவத்தையில்
தமிழ் சங்க வளாகம் கல்வி நிலையத்தில் வெள்ளி, சனி தினங்களில்
T.P 0766883394

O/L ENGLISH
திருப்திகரமான, விரைவான மீட்டல்
Past Paper discussions
FAST TRACK
0777066000 44, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# பதவியிலிருந்து ஓடமாட்டேன் தெரிவிக்கிறார் மத்தியூஸ்



இலங்கை அணியின் தோல்விகளால் பதவியை விட்டு ஓட மாட்டேன், அதைத்தவிர்த்துதற்போது உள்ள அணியை மேலும் சிறப்பாக செயற்பட உதவு வேன் என அணித் தலைவர் மத்தியூஸ் நம்பிக்கை தெரிவித் தார். இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி டெஸ்ட் தொடரை 2:0 என்ற அடிப்படையிலும் ஒருநாள் தொடரை 3:0 என்ற அடிப் படையிலும் பறி கொடுத்தது. இந்த நிலையிலேயே மத்தியூஸ் இவ்வாறு தெரிவித்தார். தற்போது எனக்கும் எங்கள் அணிக்கும் மோசமான நேரம், அதனால் நான் அணித்தலைவர் பதவியை விட்டு ஓட மாட்டேன். இதை எதிர்த்துப் போராடுவேன். எங்கள் அணியில் எனக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பல நல்ல வீரர்கள் உள்ளனர், நிச்சயமாக விரைவில் இந்த மோசமான நிலையிலிருந்து அணியை வெளிக் கொண்டு வருவேன் என அவர் மேலும் தெரிவித் தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org